# தமிழரசு

ஆகஸ்டு 1 - 31, 2001




TSE 4314

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2032
ஆடி–ஆவணி
ஆகஸ்டு 1–31, 2001
மலர் : 33 இதழ் : 3 & 4
விலை ரூ.10

**இந்த இதழில்...**


- சுதந்திரத் திருநாள் ........ 2
- சுதந்திரத் திருநாள் – முதலமைச்சர் உரை ........ 4
- காவல்துறை அதிகாரிகள் மாநாடு ........ 13
- மருத்துவமனைகள் மேம்படுத்தும் திட்டம் ........ 17
- சென்னையில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ........ 19
- திரும்பி வா! எஜமானனே! (சிறுகதை) ........ 21
- தொடுதிரை கணினி மாடம் ........ 23
- மனித நேயம் உயிர் பெற்றது ........ 24
- சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் குறித்த கண்காட்சி ........ 25
- குறைகள் தீர்ப்பதிலும் முதல்வர் ........ 27
- மாரடைப்பு வராமல் தடுக்க ........ 30
- தமிழ் வளர்த்த சங்கம் ........ 33
- மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு ........ 37
- நிதிநிலை அறிக்கை 2001–2002 ........ 45
- நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள் ........ 77
- திட்டக்குழுக் கூட்டத்தில் முதல்வர் உரை ........ 79


முதல் & இரண்டாம் பக்க அட்டையில்...

**சுதந்திரத் திருநாள் விழா**

மூன்றாம் பக்க அட்டையில்...


**பெடரேஷன் கோப்பை கால்பந்துப் போட்டி தொடக்க விழா**

கடைசிப் பக்க அட்டையில்...

**2001-2002ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையுடன் சட்டப்பேரவைக்கு மாண்புமிகு முதல்வருடன் வரும் மாண்புமிகு நிதியமைச்சர்.**

தமிழ்நாடு அரசின் சார்பாக அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் சுதந்திரத் தினவிழா மிகவும் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. காலை சுதந்திர தின விழாவில் காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்று தேசியக் கொடியை ஏற்றிவைக்க வருகை தந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை தலைமைச் செயலாளர் திரு.பி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். அடுத்து, அணி வணக்க மேடைக்கு அருகே இருந்த, ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடக, கேரளா மற்றும் கோவா பகுதி ஜெனரல் ஆபீசர் கமாண்டிங், மேஜர் ஜெனரல் திரு.அனுப்சிங் ஜாம்பால், சென்னை கடற்படைப் பொறுப்பு அதிகாரி கமோடர் திரு.பி.ஆர்.ப்ராங்ளின், தாம்பரம் விமானதள ஸ்டேஷன் கமாண்டர் குரூப் கேப்டன் திரு.வி.கே.யஜர்வேடி, தமிழகக் காவல்துறைத் தலைவர் திரு.ஏ. ரவீந்திரநாத் ஆகியோரை தலைமைச் செயலாளர் அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் முதலமைச்சர் அவர்கள் காவல்துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று, திறந்த ஜீப்பில் அணிவகுப்பைப் பார்வையிட்டார். அணிவகுப்பு முடிந்ததும் கோட்டை கொத்தளத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த கொடி மேடைக்குச் சென்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினார். பிறகு கோட்டை கொத்தளத்திலிருந்து சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.

பின்னர் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மகாவீர் சக்ரா, கீர்த்தி சக்ரா, வீர் சக்ரா, சௌரிய சக்ரா போன்ற வீர விருதுகளைப் பெற்ற **32** முப்படை வீரர்களுக்கு தமிழக அரசு சார்பில் மொத்தம் ரூபாய்



# சுதந்திரத் திருநாள்





17 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்புடைய சிறப்பு பரிசுத் தொகைகளை வழங்கினார். மகாவீர் சக்ரா விருது பெற்ற பிரிகேடியர் பி.கே.நந்தகோபால் மற்றும் கமோடர் கே.பி. கோபால் ராவ் ஆகியோருக்கு நிலத்திற்கு ஈடாக தலா ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலைகளையும், கீர்த்தி சக்ரா விருதுபெற்ற ஸ்குவாட்ரன் லீடர் வி. நாகராஜன், மேஜர் அனுப் குமார் சந்தோக், காலஞ்சென்ற அவில்தார் முத்தப்பன் ஆகியோர் குடும்பத்தினருக்கு நிலத்திற்கு ஈடாக தலா ரூபாய் 75 ஆயிரத்திற்கான காசோலைகளையும், வீர் சக்ரா விருது பெற்ற காலஞ்சென்ற அவில்தார் வேல்முத்து, சாப்பர் அருணாசலம், லான்ஸ் நாயக் மதலை முத்து, சிப்பாய் கண்ணன், நாயக் சி. சுப்பையன் ஆகியோர் குடும்பத்தினருக்கும் ஹானரரி கேப்டன் எஸ். பக்கீர் முகம்மது, சுபேதார் சி. துரைசாமி, ஸ்குவாட்ரன் லீடர் டி.ஆர். துரைசாமி, ஹானரரி கேப்டன் டி.மரியரசல், அவில்தார் ஏ. சண்முகசுந்தரம் ஆகியோருக்கும் நிலத்திற்கு ஈடாக தலா ரூபாய் 50 ஆயிரத்திற்கான காசோலைகளையும், சௌரிய சக்ரா விருது பெற்ற காலஞ்சென்ற லான்ஸ் நாயக்குகள் எம். லட்சுமணன், சிதம்பரம்,ரேணுகோபால் சிப்பாய்கள் சி. ராயப்பன், எஸ். அல்போன்ஸ் ஆகியோரது குடும்பத்தினருக்கு நிலத்திற்கு ஈடாக தலா ரூபாய் 40 ஆயிரத்திற்கான காசோலைகளையும் வழங்கினார்.

ஜம்மு ரயில் நிலையத்தில் தீவிரவாதிகளுடன் நடத்திய துப்பாக்கிச் சண்டையில் பலியான வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் திரு.ரவி அவர்களின் குடும்பத்திற்கு தமிழக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினை அவரது மனைவி திருமதி.நீலாவதி அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சர் அவர்கள் மனவளர்ச்சி குன்றிய, பார்வையற்ற, உடல் ஊனமுற்ற, காதுகேளாத 100 குழந்தைகளுக்கு நேரடியாக இனிப்புகளை வழங்கினார். மேலும் உடல் ஊனமுற்ற 900 குழந்தைகளுக்குத் தொடர்புடைய கல்வி நிறுவனங்கள் மூலம் இனிப்புகள் விநியோகிக்கப்பட்டது.

தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், மனவளர்ச்சி குன்றியோரின் மறுவாழ்வுக்குப் பணியாற்றி வரும் சென்னை பாலவிஹார் பயிற்சி பள்ளியின் முதல்வர் பேராசிரியர் டாக்டர் பெ. ஜெயச்சந்திரன் அவர்களுக்குத் தமிழக அரசின் சிறந்த மருத்துவர் விருதும், அதிகமான அளவில் ஊனமுற்றோர்களைப் பணிக்கு அமர்த்திய திருச்சிராப்பள்ளி ஆர்பிட் நிறுவனத்தின் செயலாளர் திரு.பி.ஆர். பாண்டி அவர்களுக்கு மிகச் சிறந்த தனியார் தொழிலதிபர் விருதும், தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்காக சிறப்பாக சேவை செய்து வரும் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தமியான் தொழுநோய் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு இந்த ஆண்டின் சிறந்த நிறுவனத்திற்கான விருதும், மகளிர் நலத்திற்காக சிறப்பான சேவை செய்து வருவதைப் பாராட்டி, திண்டுக்கல் காந்தி கிராம் அறக்கட்டளைக்கு மகளிருக்கான சிறந்த நிறுவனத்திற்கான விருதும், தேனி மாவட்டம் கிராமப்புற வளர்ச்சி அறக்கட்டளையின் நிறுவனர் திரு.எஸ். முருகன் அவர்களுக்கு சிறந்த சமூகப் பணியாளர் விருதும், வழங்கி கௌரவித்தார்.

★ ★ ★

# எல்லாத் தரப்பு மக்களின் நல்லாதரவுடன் எங்கள் பயணம் தொடரும்... மக்களுக்காக மேற்கொள்ளும் தூய சிந்தனையுடனான திட்டங்கள் தொடரும்...

முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சுதந்திர திருநாளாம்
**15–8–2001** அன்று
சென்னைக் கோட்டை கொத்தளத்தில்
தேசிய கொடியினை
ஏற்றிவைத்து ஆற்றிய உரை.

நம் இந்தியத் திருநாட்டின் இணையற்ற சுதந்திரத் திருநாளை, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில், பேருவகை யோடும், பெருமகிழ்ச்சியோடும் கொண்டாடும் வேளையில், விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன் பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாயின் மணிக் கொடியை, சரித்திரச் சிறப்புமிக்க இந்தக் கோட்டையில் ஏற்றி வைத்ததில், நான் எல்லையில்லா மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறேன்.

இந்த மகத்தான வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்த் திருநாட்டு மக்கள் அனைவருக்கும், என் இதயம் நிறைந்த நன்றியைப் பணிவுடன் காணிக்கையாக்குகிறேன்.

மேலும், தமிழகத்துச் சான்றோர்கள், பெரியோர்கள், தாய்மார்கள், வருங்கால வரலாறாய் அமைய உள்ள மாணவ மாணவிகள், குழந்தைகள் அனைவருக்கும், எனது சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும்" என்பதற்கேற்ப, மீண்டும் என்னை தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி, இன்று இந்த சுதந்திர தினவிழாவில், மீண்டும் கலந்துகொள்கின்ற வாய்ப்பினை, தமிழக மக்கள் நல்கியுள்ளனர். இதுவே மக்களாட்சித் தத்துவத்தின் மகிமை ஆகும்.

"எண்ணமெல்லாம் நெய்யாக எம் உயிரினுள் வளர்ந்த வண்ண விளக்கு" என்று, கண்ணினும் இனிய சுதந்திரத்தை பாரதியார் போற்றினார்.

அன்னியர் ஆதிக்கத்துக்கு முடிவு கட்ட, அடிமை விலங்கைத் தகர்த்தெறிய, மேலோர்கள் வெஞ்சிறையில் வாடினார்கள்; கற்றறிந்த நூலோர்கள் செக்கடியில் நொந்தார்கள்; எண்ணற்றோர் சுதந்திரப் பயிர் காக்க சுகம் இழந்து தவித்தார்கள்.

இப்படி விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளின் தியாகங்களும், வீர வரலாறுகளும், சிறை வாசங்களும் தான், நாம் சுதந்திர நாட்டில் வாழ வழி வகுத்தது என்பதை, நாம் அனைவரும்



எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டு உள்ளோம். தாயின் மணிக்கொடியை இங்கே ஏற்றி வைத்து, அதைத் தாழ்ந்து பணிந்து வணங்குகிற நேரத்தில், இந்திய இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் கேடு இழைக்கும், பிரிவினைவாத சக்திகளையும், தீவிரவாதக் குழுக்களையும், முற்றிலும் வேரறுக்க வேண்டிய மாபெரும் கடமை நமக்கு உள்ளது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தன்னலத்துக்காகவும், சுய லாபத்துக்காகவும், தேச விரோத சக்திகளோடு ஒட்டி உறவாடும் எவரும், தேச விரோதிகளே!

தேச விரோதிகளைக் காட்டிலும், தேச விரோதத் துக்குத் துணை போகும் குதர்க்கப் புத்தி படைத்தவர்கள், நாட்டுக்குப் பேராபத்தை விளைவிப்பவர்கள் ஆவார்கள்.

அவர்களிடம் நாட்டு மக்கள், மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில், தங்கள் இன்னுயிரை ஈந்து, உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த, எண்ணற்ற தியாகச் சீலர்களின் வேள்வியில் விளைந்த சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு, நம் அனைவருக்கும் உள்ளது.

நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைத்திட முயலும் சக்திகளின், மற்றொரு பரிணாம வளர்ச்சியாக, உள்நாட்டில் செயல்படும் தீவிரவாத தேச விரோத அமைப்புகளின் சதித் திட்டங்களை முறியடிப்பது, அமைதியைச் சீர்குலைத்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் இழைத்திட முயலும். சந்தர்ப்பவாத சக்திகளை ஒடுக்குவது ஆகியவை நாம் தொடர்ந்து எதிர்கொள்ள வேண்டிய சவால்களாக நம் முன் நிற்கின்றன. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட வேண்டுமென்றால், இந்தச் சவால்களை நாம் முழு மூச்சுடன் சமாளித்திட வேண்டும்.

ஒன்றுபட்ட நமது இந்தியாவின் ஒருமைப்பாட்டினைக் கட்டிக் காத்திட உறுதி பூணும் அதே நேரத்தில், நமது உரிமைக்காக குரல் கொடுக்கவும், நமது நாட்டின் கூட்டாட்சி அமைப்பை பாதுகாத்திடவும் தயங்க மாட்டோம் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நம் இந்தியத் திருநாடு, ஒன்றுபட்ட நாடாக, தொடர்ந்து திகழ்ந்து வருவதற்கு மூன்று அரிய கோட்பாடுகள் ஆதாரமாக விளங்குகின்றன. அவை, கூட்டாட்சி, மதச் சார்பின்மை, மக்களாட்சி ஆகியவை ஆகும். இவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு இடையூறு ஏற்பட்டாலும், மற்ற இரண்டிற்கும் பாதிப்பு ஏற்படுவது, தவிர்க்க இயலாத ஒன்றாகும். அந்த வகையில், கூட்டாட்சி தத்துவத்தைப் போற்றி பாதுகாக்க வேண்டியது, மத்திய—மாநில அரசுகளின் தனிப்பெரும் கடமையாக அமைகிறது. கூட்டாட்சி தத்துவம் என்பது, அதனை அமல்படுத்துபவர்களின் மனோபாவத்தை அடிப்படை யாகக் கொண்டு, அவ்வப்போது மாற்றக் கூடியதாக இல்லாமல், அமல்படுத்தும் பொறுப்பில் எவர் வந்தாலும், அதை மாற்ற முடியாத வண்ணம் அமைய வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மத்திய மாநில அரசுகளின் உறவு முறைகள் மற்றும் கூட்டாட்சி குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை, இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

''பல கட்சிகள் கொண்ட கூட்டாட்சி முறையில், திகைப்புக் கொள்ளாமல், எரிச்சல் அடையாமல், கசப்புக் கொள்ளாமல், மத்திய அரசை நடத்திடும் அரசு, நடந்து கொள்ளுமானால், எரிச்சலும் மோதலும் எழ வேண்டிய நிலையே வராது" என்று கூறியுள்ளார்.

"கட்டுண்டு வாழோம் – பிரிவினை நாடோம் – சம நிலையில் இணைவோம். We are neither dependent - nor independent - but inter dependent" என்பது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நமக்கு விட்டுச் சென்ற தாரக மந்திரம். அந்த வகையில் தமிழக அரசு, இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், உலகளாவிய உயர்விற்கும் பாடுபடும் என்பதை நான் இங்கு தெளிவுபடுத்திட விரும்புகிறேன்.

மக்களின் அடிப்படை நோக்கங்களை, நிறைவேற்றும் போது தான் மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்ததாக நாம் கருத முடியும். அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, மக்களாட்சித் தத்துவத்தை, இந்தியா ஏற்றுக் கொண்டதன் நோக்கமே, ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும், சுதந்திரமுடன் கூடிய, அடிப்படை வசதிகள் நிறைந்த, பாதுகாப்பான வாழ்வு, உறுதி செய்யப்பட வேண்டும் என்பதுதான். இந்த வகையில், வறுமை கோட்டுக்குக் கீழ் வாழ்வோர், அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்து மக்கள், தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, அவர்களுக்குப் பாதுகாப்பான வாழ்வை அளிக்கும் போதுதான், அவர்கள் முழு சுதந்திரம் பெற்றவர்களாக ஆவார்கள்.

இன்றைக்கும் அடிப்படைத்தேவைகளை, முழுமையாகப் பெற முடியாதவர்கள், கணிசமான அளவில் தமிழ்நாட்டில் உள்ளனர். குழந்தைத் தொழிலாளர் முறை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள், பெண் சிசுக் கொலை, சாதிக் கொடுமை போன்றவை, சமுதாயத்தில் தொடர்ந்து நடைபெறுவது, மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. இவற்றை நீக்கி, சமத்துவம், சகோதரத்துவம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற நிலையை தமிழகத்தில் கொண்டு வருவதற்கு தமிழக மக்கள் ஜனநாயக தீர்ப்பின் மூலம் எனக்கு வாய்ப்பளித்துள்ளார்கள்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, சமூக அமைதி முக்கியமானதாக அமைகிறது. உற்பத்திக்கு யார் கேடு விளைவிக்கிறார்களோ, அவர்கள் சமூகத்தின் உண்மையான எதிரிகள் என்று, பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.


நாட்டில் அமைதி, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில், அரசுக்கு எந்த அளவுக்குப் பொறுப்பு உள்ளதோ, அதே அளவுக்கு பொறுப்பு, சமுதாயத்திலுள்ள அனைத்து தரப்பினருக்கும் உள்ளது. விடுதலைக்குப் பின்பு துவங்கிய, பெரிய அளவிலான வகுப்பு வாதங்கள், ஓரளவு குறைந்து காணப்பட்டாலும், இன்றைக்கு சாதி, சமய



அடிப்படையில் சிறிய வகுப்பு வாதங்கள் மக்களுக்கு உடனடி பாதிப்பை, ஏற்படுத்தும் வகையில் உருவாகி, பரவி வருகின்றன. இவற்றை வளர விடாமல், முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய பொறுப்பு, நம் அனைவருக்கும் உள்ளது. தீவிரவாதத்திற்கும், பிரிவினை சக்திகளுக்கும், வகுப்புவாத சக்திகளுக்கும், துணை போகின்ற ஒரு சிலர், கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையோடு விளையாட, நாம் அனுமதிக்க முடியாது.

சட்டம் என்பது, நம்மை நாமே ஆண்டுகொள்ள, நாமே செய்து கொண்ட ஒரு ஏற்பாடு. சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, அதற்கேற்ப நமது நடைமுறைகள், அமைய வேண்டுமே தவிர, சட்டத்தை நமக்கேற்ப வளைப்பது, அல்லது குலைக்க முற்படுவது, விரும்பத்தகாதது ஆகும். தனி மனித பிரச்சினைகளை, பொதுமக்கள் பிரச்சினையாக மாற்றி, தமிழகத்தின் பொது அமைதிக்கு, பங்கம் உண்டாக்க முற்படும் போக்கினை, நாம் வன்மையாக கண்டித்திட வேண்டும்.

அரசின் நல்ல திட்டங்களுக்கு, ஆதரவு தர விருப்பம் இல்லாவிட்டாலும், அவற்றுக்கு ஊறு விளைவிக்காமலும், உண்மைக்கு மாறான செய்திகளை, மக்களிடையே பரப்பாமலும் இருப்பது கூட, ஒரு வகையில் சமுதாயத்திற்கு நல்லது செய்வதாகும்.




வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கி, என்னை மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியுள்ள, தமிழக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது, இந்த அரசின் தலையாய கடமையாகும். நான் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட, ஒரு சில நாட்களிலேயே, நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில் தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தினால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு, தமிழகத்தில் மின்சார நெருக்கடி, ஏற்படும் சூழ்நிலை உருவானது. உடனடியாக, கேரள மாநில முதலமைச்சருடன், நான் தொடர்பு கொண்டு, கூடுதலாக மின்சாரத்தைப் பெற்று, நிலைமையைச் சமாளித்திட நடவடிக்கை மேற்கொண்டேன்.

அனைத்து துறைகளைச் சேர்ந்த அமைச்சர்கள், செயலாளர்கள், அதிகாரிகளை அழைத்து, அவரவர் துறையின் செயல்பாடுகளைப் பற்றி விவாதித்து, அதன் அடிப்படையில், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான, புதிய திட்டங்களை தீட்டியுள்ளேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் மாநாட்டைக் கூட்டி, அவர்களுடன் மூன்று நாட்கள் விவாதித்து, அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், பல்வேறு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முக்கியமான சிலவற்றின் மீது, ஏற்கெனவே அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிய விவரங்கள் சிலவற்றை, உங்கள் முன்பு தெரிவிக்க விரும்புகிறேன். நாளை முதல் நடைபெறவிருக்கும், சட்டமன்ற நிதிநிலை கூட்டத் தொடரில், பல முக்கிய புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட உள்ளன.

* பரம்வீர் சக்ரா போன்ற, வீரச்செயல் விருதுகளைப் பெற்ற, முப்படை வீரர்களுக்கு, சிறப்பு பரிசுத் தொகை வழங்க வேண்டும் என்ற மத்திய அரசின் பரிந்துரை, பல ஆண்டுகளாக தமிழகத்தில், ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்தது. இந்த அரசு, மத்திய அரசின் பரிந்துரையை ஏற்று, அண்மையில் ஆணையிட்டுள்ளது. வீரச் செயல் விருது பெற்ற 32 பேர், இன்றைக்கு இந்த விழாவிலே, மொத்தம் 17.5 இலட்சம் ரூபாய் சிறப்பு பரிசாக பெறுகின்றார்கள்.

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின், சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு, இந்த அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. இவர்களுக்கான கல்வி திட்டத்தை மேம்படுத்தி சீரமைப்பதுடன், இந்த மாணவர்கள் தங்கிப்படிக்கும் விடுதிகளைச் சீரமைத்து, அவற்றில் மேம்படுத்தப் பட்ட வசதிகளை அளிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

* கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சியை, ஊக்குவிக்கும் வகையில், தொழிற் படிப்பு கல்லூரிகளில், கிராமப்புற மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள், 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தி ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

* ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக, வெளிப்படையான, தெளிவான, இடமாற்ற வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, கலந்தாலோசித்தல்

அடிப்படையில், ஆசிரியர்களுக்குப் பொது மாறுதல்கள், உடனுக்குடன் வழங்கப்பட்டுள்ளன.

★ சேமித்தலும், சேமித்ததை இல்லாத நேரத்தில் சிக்கனமாக செலவிடுதலும், நாம் தொன்றுதொட்டு கடைபிடித்து வரும் பழக்கமாகும். ஆனால், புழலேரி வற்றிய போது கூட, சிக்கன நடவடிக்கையை கடைப்பிடிக்காமல், முந்தைய ஆட்சியாளர்கள், சூழ்நிலைக்கேற்ப செயல்படாமல் இருந்ததன் மூலம், சென்னையில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டது. ஒரு புறம் ஆந்திராவில், கண்டலேறுவிலிருந்து குடிநீரை பெறுவதற்கு, முயற்சி மேற்கொண்டதோடு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து, லாரி மற்றும் ரயில்கள் மூலமாகவும், தண்ணீர் கொண்டு வந்து, போர்க்கால அடிப்படையில் பிரச்சினையை சமாளிக்க, இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. புதிய வீராணம் திட்டத்தை, விரைவில் நிறைவேற்றுவதன் மூலமும், இன்னும் சில முக்கியமான திட்டங்கள் மூலமும், சென்னை குடிநீர்



பிரச்சினையை, நிரந்தரமாக போக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ மேலும், சென்னை மாநகரில், குடிநீர் தட்டுப்பாட்டைத் தீர்க்க, பாலாறு நதியின் முகத்துவாரத்தில் உள்ள கல்பாக்கம் அருகே, 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். புதிய வீராணம் திட்டத்தினை அமல்படுத்தும்போது, வீராணம் ஏரியின் ஆயக்கட்டு பகுதியைச் சார்ந்த விவசாயிகளுக்கு, தற்போது கிடைத்து வருகின்ற நீர்ப்பாசனம், எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்ற உறுதியை, அரசு அவர்களுக்கு வழங்குகிறது என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

★ இது மட்டுமன்றி, மாநிலத்தில், தருமபுரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் உள்ளிட்ட மற்ற பகுதிகளிலும், குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாக போக்க, இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.


★ சென்னை மாநகரின் குடிநீர் தட்டுப்பாட்டை தீர்க்க, தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதே நேரத்தில், மாநகரின் குடிசைப் பகுதிகளில், சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், 100 ஆழ்குழாய் கிணறுகள் தோண்டவும், அவற்றை நீர் இறைக்கும் மின்சார மோட்டார்களுடன் இணைத்து, சின்டெக்ஸ் தொட்டிகளில் (Sintex Tanks) நீரை நிரப்பி, அதை பாத்திரம் கழுவுதல் போன்ற, குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு, மக்கள் பயன்படுத்துவதற்காக, உத்தரவிட்டு இருந்தேன். 76 இலட்ச ரூபாய் செலவில், நிறைவேற்றப்படுகின்ற இத்திட்டத்தின்படி, ஏற்கெனவே 37 ஆழ்குழாய் கிணறுகள் தோண்டப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள 63 ஆழ்குழாய் கிணறுகள், வருகிற ஆகஸ்டு 25ஆம் தேதிக்குள்

தோண்டப்பட்டு, அவற்றையும் பயன்பாட்டுக்கு கொண்டு வர, உத்தரவிட்டுள்ளேன். இந்த புதிய முயற்சியினால், குடிசைப் பகுதிகளில் வாழும், **50** ஆயிரம் குடும்பங்கள், வீட்டு உபயோகத்திற்கான, தண்ணீர் பற்றாக்குறையிலிருந்து விடுபட்டுள் ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையை கருத்தில் கொண்டு **30–9–2001**க்குள் கூட்டுறவு கடன்களை செலுத்தும் விவசாயிகளுக்கு **310.51** கோடி ரூபாய் அளவுக்கு வட்டி மற்றும் அபராத வட்டியை முழுமையாக தள்ளுபடி செய்து இந்த அரசு ஆணை வெளியிட்டு உள்ளது.

★ வெளிச்சந்தையில், விவசாயிகளின் நெல்லுக்கு, நல்ல விலை கிடைப்பதற்கு ஏதுவாக TKM-9 ரக நெல் மற்றும் அரிசியை, தமிழ்நாட்டிலிருந்து வெளியே கொண்டு செல்வதற்கு, லெவியிலிருந்து (levy) விலக்களித்து அரசு ஆணையிட்டுள்ளது. இனி TKM-9 ரக நெல்லையோ அல்லது அரிசியையோ வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதற்கு விவசாயிகளோ அல்லது வியாபாரிகளோ எந்த அனுமதியும் பெற வேண்டியதில்லை.

★ 'ஊட்டி (Ooty) என்ற பெயரில், அரசு சார்ந்த, இன்கோசர்வ் (INCOSERVE) நிறுவனம் தயாரிக்கும், பதனிடப்பட்ட தேயிலைத் தூளை, தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தும், நியாய விலைக் கடைகளில், விநியோகம் செய்யப்படும். நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்யும் தேயிலைக்கு, உரிய விலை கிடைப்பதற்கு, இது பெரிதும் உதவும்.




★ தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை, மிகப் பெரிய அளவில் செயல்படுத்துகின்ற வகையில், நான் அறிவித்துள்ள ஒரு மாபெரும் திட்டத்தின் மூலம், **20** இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள, வறண்ட, பயன்படுத்தப்படாத தரிசு நிலம், முற்றிலும் மேம்படுத்தப்பட்டு, பண்ணைத் தோட்டங்களாக மாற்றி அமைக்கப்படும். ஒவ்வொரு வருடமும், **4** இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு உள்ள தரிசு நிலம், இந்த திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, **5** ஆண்டுகளில், இந்தத் திட்டம் நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாபெரும் பண்ணைத் தோட்ட மேம்பாட்டு திட்டத்தின்படி, தற்போது தரிசாக உள்ள நிலம், **200** ஏக்கர் முதல் **1000** ஏக்கர் வரை பரப்பளவு கொண்ட பண்ணைகளாக உருவாக்கப்படும். அரசு இந்தத் திட்டத்தினை, தனியார் தொழில் முனைவோர், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், கிராமப்புற மக்கள் ஆகியோரது பங்கேற்புடன் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக ஊரகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மிகப் பெரிய ஊக்கம் அளிக்கப்பட்டு, அதன் விளைவாக கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

★ மேலும், தமிழகத்தின் வனப் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் 20 மாவட்டங்களில் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் மரங்களை வளர்த்து பாதுகாத்திட அரசு உத்தேசித்துள்ளது.

★ அடிப்படை வசதிகளை, மக்களுக்கு ஏற்படுத்தித் தருவது எந்த அளவுக்கு முக்கியமானதோ, அதே அளவிற்கு அவர்களுக்கு மாசு இல்லாத சுற்றுப்புற சூழலை உருவாக்கித் தருவதும் அவசியமாகிறது. காற்று மற்றும் நீர் மாசுபடுவதின் தீய விளைவுகளைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திடவும், பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதை தடை செய்திடவும் அரசு முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ளும்.

★ சுற்றுச் சூழல் பராமரிப்பு குறித்த முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள இந்த அரசு மக்கள் முழுமையாக பங்கேற்கும் வகையில், ஒரு இயக்கமாக, இதை செயல்படுத்த வேண்டும் என விரும்புகிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இது தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய திட்ட

அறிக்கை ENVIRO VISION-2005, தயாரிக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேம்பட்ட சுற்றுப்புற சூழலை ஏற்படுத்த இந்த ENVIRO VISION-2005 பயன்படுத்திக் கொள்ளப்படும். மேலும், மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றுப்புற சூழல் பராமரிப்பு குறித்த பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டு, சிறப்பாக செயலாற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு நடப்பு ஆண்டு முதல் ''பசுமை விருது'' வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ புகை பிடிக்கும் பழக்கத்தால் புற்றுநோய் போன்ற உடல்நலக் கேடு உண்டாவதுடன், அது சுற்றுப்புற சூழலையும் பெரிதும் மாசுபடுத்துகின்றது. புகை பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையான ஏழை எளியோர் பொருளாதார ரீதியிலும் பாதிக்கப்படுகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்ய அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ கடந்த சில ஆண்டுகளாகவே, போதுமான மழையின்மை காரணமாகவும், முறையற்ற வகையில் நிலத்தடி நீர், வீணாக்கப்படுவதாலும், தற்போது பாசனத்திற்கும், குடிநீருக்கும், மக்களின் பிற அன்றாடத் தேவைகளுக்கும், கடுமையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சிறுபாசன ஏரிகள், திருக்கோவில் குளங்கள், சமுதாயக் கிணறுகள் ஆகியவை முறையாக பராமரிக்கப்படாததாலும் மழை நீர் சேமித்தல் போன்ற நீர் மேலாண்மை பணிகள் முறைப்படி மேற்கொள்ளப்படாததாலும் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, நீர் வளத்தினை மேம்படுத்தி, மக்களின் அனைத்து தேவைகளுக்கும் எப்போதும் தட்டுப்பாடின்றி நீர் போதிய அளவு கிடைப்பதற்கு வழிவகை செய்வதற்கு ஏதுவாக புதிதாக "நீர் வளப் பாதுகாப்புத்துறை'' (Water Resources Conservation Department) ஒன்றினை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ மழை நீரை சேமிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படும். கிராமப்புறங்களிலும், நகரங்களிலும் உள்ள ஏரிகள், கோயில் குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றின் கொள்ளளவை மேம்படுத்தி, அவை சிறந்த மழைநீர் சேமிப்பு இடங்களாக விளங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



★ நெடுஞ்சாலைகளில் அடிக்கடி நடக்கும் விபத்துக்கள் நம் அனைவருக்கும் பெரும் கவலையை அளிக்கின்றன. சாலை விபத்துக்களைத் தடுத்திட சாலை பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படும். நெடுஞ்சாலைகளில் "விபத்து நிவாரண மையங்கள்'' ஏற்படுத்தப்பட்டு விபத்துக்குள்ளானோருக்கு உடனடி மருத்துவ வசதிகள் அளித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

★ தமிழ்நாட்டில் ஏழை எளியோர்களுக்கு தனியார் மருத்துவமனைகளுக்கு ஈடான மருத்துவ வசதிகள் இலவசமாக கிடைக்கும் வகையில், அரசு மருத்துவமனைகளின் செயல்பாட்டை சீரமைத்து, நவீனப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக "மருத்துவமனை ஆலோசனைக் குழு" அமைக்க அரசு முடிவு செய்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அரசு மருத்துவமனைகளில் நிலவும் சுற்றுப்புறத் தூய்மை, சுகாதாரம் மற்றும் அவை மக்களுக்கு சேவை செய்யும் விதம் ஆகியவற்றில் உள்ள குறைகளைக் கண்டுபிடித்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை இந்த ஆலோசனைக் குழு பரிந்துரைக்கும். இந்தக் குழுவில் மாவட்ட அளவிலான அலுவலர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், பெண்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது நலனில் ஆர்வம் உடையவர்கள் இடம் பெறுவார்கள்.

★ விவசாயிகளின் நலனுக்காக கொண்டுவரப்பட்ட "பட்டா பாஸ் புத்தக திட்டம்" முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

★ மாவட்டங்களில் வருவாய் நிர்வாகம் கணினி மயமாக்கப்படும். மக்களுக்குத் தேவையான சிட்டா, அடங்கல் போன்ற நில உடைமைச் சான்றுகள் மற்றும் இதர சான்றிதழ்களைக் கணினி மூலம் உடனுக்குடன் பெறும் வகையில் கணினி மையங்கள் (Computer Kiosks) நிறுவப்படும்.


★ 2001ஆம் ஆண்டு பெண்கள் அதிகாரப் பகிர்வு ஆண்டாக (Womens' Empowerment Year) அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான கொடுமைகளை அறவே ஒழித்திடவும், பெண்களைச் சமுதாயத்தில் தகுதி உடையவர்களாக தரம் உயர்த்திடவும் பச்சிளம் பெண் குழந்தை கொலையைத் தடுத்திடவும், அவர்களின் எதிர்கால வாழ்விற்கு ஏற்றமிகு திட்டங்களைத் தீட்டவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

★ முடக்கி வைக்கப்பட்டிருந்த அனைத்து மகளிர் காவல்நிலையங்களுக்கும் புத்துயிர் அளிக்கப்படும்.

★ பெண்கள் குழுவாக ஒருங்கிணைந்து தங்கள் கல்வி, தொழில் திறனை வளர்த்துக் கொண்டு சுய வேலைவாய்ப்பு பயிற்சி பெற்று, பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள நாங்கள் 5 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வந்து தற்போது வளர்ந்துள்ள திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்துவோம்.

★ சமையல் எரிவாயு பயன்படுத்தும் வசதி என்பது சமுதாயத்தில் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கக் கூடியதாக தற்போது இருந்து வருகிறது. ஏழை எளியவர்களுக்கு அதிக வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற எண்ணத்திலுள்ள இந்த அரசு வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களும், சமையல் எரிவாயு வசதிபெற வேண்டும் என்ற எண்ணத்துடன் முதற்கட்டமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் புதிதாக திருமணமான தம்பதியர்களுக்கு இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பு வழங்க முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" புதிய பொலிவுடன் செயல்படுத்தப்படும்.




★ பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நல்வாழ்வு அளித்திடும் 15 அம்ச திட்டம், 18 அம்ச திட்டமாக மீண்டும் செயல் வடிவம் பெறும்.

★ கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வேலையின்மையின் காரணத்தினால் கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் சரியான வழிகாட்டுதல் இன்றி, தங்கள் திறனை வீணடித்து ஆக்கப் பூர்வமான பணிகளில் ஈடுபட இயலாத நிலையில் உள்ளனர். அவர்களை அந்தந்த பகுதிகளில் குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்கள் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளவும், பயனுள்ள பொழுதுபோக்கு நடவடிக்கைகளில்

ஈடுபடவும், சமுதாயத்திற்குப் பயன்படும் ஆக்கப் பூர்வமான பணிகளைச் செய்திடவும் உதவும் வகையில் இளைஞர் மன்றங்கள் (Youth Clubs) நிறுவப்படும். இந்த மன்றங்கள் மூலம் இளைஞர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு சுயவேலை வாய்ப்பு வசதிகள் அளித்திட வழி வகுக்கப்படும். இந்த மன்றங்களில் பத்திரிகைகள், விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் உடற்பயிற்சிச் சாதனங்களும் வழங்கப்படும்.

★ வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், பாலூர் சிறுபாசன ஏரியில், கடந்த **25.7.2001** அன்று பெய்த அடை மழையால் உடைப்பு ஏற்பட்டதை அடுத்து, கிராமத்தை வெள்ளம் சூழ்ந்தது. இந்த நிலையில், கிராம மக்களின் உயிரைக் காப்பாற்ற தங்களது உயிரை துச்சமாக மதித்து, வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் மரணமடைந்த திரு.ஹரிகிருஷ்ணன் மற்றும் திரு.விஜயசீலன் ஆகியோரின் வீரதீர செயல்களைப் பாராட்டி நினைவுகூரும் வகையில் கடமை உணர்வோடு தீரச்செயல் புரிந்த அவர்கள் இருவருக்கும் "அண்ணா வீர விருது" வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைதியை நிலைநாட்டி, அரசின் ஆக்கபூர்வமான பணிகளுக்கு சுமூகமான சூழ்நிலையை உருவாக்குவதில் தமிழக காவல்துறையின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டபின்பு, பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் சக்திகளைக் கட்டுப்படுத்தி அவர்களின் நடவடிக்கைகளைக் கண்டிப்புடன் அடக்கியுள்ள தமிழக காவல்துறை பெரிதும் பாராட்டுக்குரியது. அவர்களின் தனித் திறமையை பாராட்டுவது மட்டுமல்லாமல், அவர்களது கைகளைக் கட்டிப் போடாமல், அவர்கள் சுதந்திரமாக செயல்படும் சூழ்நிலையை ஏற்படுத்தி தருவதும் நமது கடமையாகும் என்பதை பொறுப்புள்ள அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராக **15.8.1967** சுதந்திர தினத் திருநாளன்று ஆற்றிய பேருரையிலிருந்து சில கருத்துக்களை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

*வந்தது சுதந்திரம் வாழ்கின்றோம்; நம்மை நாம் ஆள்கின்றோம் என்ற உரிமையுடன் வாழ்கின்றோம்; ஆனால் வாழ்கின்றோமா? நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இது. வாழ்கின்றோம் என்பதற்கும் இருக்கின்றோம் என்பதற்கும் பொருள் வேறுபாடு மிகுதி. நம்மிலே மிகப் பெரும்பாலோர் இன்று ஏதோ இருக்கின்றோம் என்று கூறிடும் நிலையிலே உள்ளோம். வாழ்கின்றோம் என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ளும் நிலை இல்லை.*

*ஏழ்மையும் வறுமையும் ஒழிந்த நிலையிலேயே வாழ்கின்றோம் என்று கூறிட உரிமையுடைய நாளாகும். பேதமும் பிளவும் நீங்கி, எல்லோரும் ஒன்று என்ற நிலை பிறக்கும் நாளே வாழ்வில் ஓர் திருநாளாகும்*

– என்று இருக்கின்றோம் என்பதற்கும், வாழ்கின்றோம் என்பதற்கும் உள்ள வேறுபாட்டை பேரறிஞர் அண்ணா அவர்கள் விளக்கமாகத் தெரிவித்தார்கள்.

பேரறிஞர் அண்ணா வகுத்த நெறியில் நடைபோடும் புரட்சித் தலைவர் ஆட்சி, இன்று ஏழ்மையைப் போக்க, உறுதி எடுத்துக் கொண்டு உழைக்கிறது; வறுமையைப் போக்க சபதம் மேற்கொண்டு பாடுபடுகிறது. எல்லா வகை பிரிவினைகளையும், பிளவையும் மக்களிடம் இருந்து அறவே அகற்றவும், ஒற்றுமையையும், சமுதாய நல்லிணக்கத்தையும் கட்டிக் காக்கவும், பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தபடி வாழ்கின்றோம் என்ற உன்னதநிலையை ஏற்படுத்தவும் அரும்பாடுபட்டு வருகின்றோம்.

வள்ளுவர் பெருந்தகை எடுத்துரைத்தபடி உறு பசியும், ஓவாப் பிணியும், செறுபகையும் அற்ற செந்தமிழ் நாட்டை உருவாக்க ஆவல்கொண்டு அல்லும் பகலும் உழைத்து வருகின்றோம்.

இயற்கை வளம் கொஞ்சும் இனிய தமிழ் திருநாட்டைப் பொறுத்தவரை ஏழ்மை, வறுமை, இல்லாமை போன்ற நிலைமைகள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும்; வறுமைக் கோட்டுக்கும் கீழே வாடுபவர்கள், தமிழ்நாட்டில் அறவே இல்லை என்ற அளவிற்கு பொருளாதார மேம்பாட்டை உருவாக்குவதே தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றுவதே அரசின் இலட்சியமாகும்.

அந்த இலட்சியத்தை எட்ட, பொதுமக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" மக்கள் தீர்ப்பை பெருவாரியான அளவில் பெற்று மக்களுக்காக பணியாற்ற வந்த எங்களுக்கு மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் ஏற்படுத்தும் தடைகள் பல. ஜனநாயகத்திற்கு புறம்பான வழிகளைக் கையாண்டு, அவர்கள் மக்கள் தீர்ப்பைக் குலைத்திட மேற்கொள்ளும் முயற்சிகளை மக்கள் அறிவார்கள். எத்தகைய துன்பம் வந்தாலும் எண்ணற்ற இடர்கள் வந்தாலும் தமிழக மக்களின், தாய்மார்களின், ஏழை எளிய மக்களின், தாழ்த்தப்பட்ட மக்களின், பிற்படுத்தப்பட்ட மக்களின், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின், தொழிலாளர் உடன்பிறப்புகளின் நல்லாதரவு எங்களுக்கு இருக்கும் வரையில் எங்கள் பயணம் தொடரும் – நாங்கள் மக்களுக்காக மேற்கொள்ளும், தூய சிந்தனையுடனான திட்டங்கள் தொடரும் – என்பதை உறுதிப்படத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

★ ★ ★




மாநிலத்தில் நிலவும் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை மற்றும் ஏனைய தொடர்புடைய பொருள்கள் குறித்து விவாதிப்பதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடன் கூட்டம் ஒன்றினை இதற்கு முன்னர் நாம் நடத்தினோம். மாநிலத்தில் காவல்துறை நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து தற்போது விவாதிக்கும் பொருட்டு நாம் கூடியிருக்கிறோம். உங்களின் கருத்துக்களை மனந்திறந்து, தயக்கமின்றி நீங்கள் தெரிவிப்பதை நான் விரும்புகிறேன்.

கடந்த சில வருடங்களாக, காவல்துறை விமரிசனத்துக்குள்ளாகி வந்துள்ளது. இந்திய அரசு, காவல்துறை சீரமைப்புக் குழுத் தலைவருக்கு எழுதியிருந்த கடிதத்திலிருந்து : ''காவல்துறை வெகுவிரைவாக தனது மதிப்பையும், நம்பிக்கை யினையும் இழந்து வருகிறது. மக்களின் எதிர் பார்ப்பிற்கும், காவல்துறையின் செயல்பாட்டிற்கும், இடையேயான இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. சராசரி குடிமகன் காவல்துறையைக் கண்டு அஞ்சுவதும், காவல்துறை உதவியைத் தவிர்க்கும் வேளையில் குற்றவாளிகளோ, அச்சமின்றி சட்டத்தினை

# காவல்துறை அதிகாரிகளின் மாநாடு

**முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உரை**

மீறுகின்றனர். இன்னமும் காலனியாதிக்க காலத்திய முறையில் செயல்படும் இவ்வமைப்பினை நம்பிக்கையூட்டுவதாகவும், மக்களுடன் தோழமை உணர்வுடன் செயல்படுவ தாகவும், குற்றவாளிகளையும் சமூக விரோதிகளையும் மிகக் கடுமையாக ஒடுக்குவதாகவும், புத்தாயிரத்தின் தேவைகளை எதிர்கொள்வதாகவும் மாற்றிச் சீரமைக்க வேண்டியுள்ளது".

தேசிய காவல்துறை ஆணையம் மற்றும் பல்வேறு மாநில காவல்துறை குழுக்கள், இந்திய காவல்துறையில் உள்ள பலவீனங்களைப் பின்வருமாறு அடையாளங் காட்டியுள்ளன.

அ. காவல்துறையினரின் போக்கு நடத்தை மற்றும் மனநிலை.

ஆ பொதுமக்களை எதிர் காள்ளுதலில், குறிப்பாக குற்றங்களைப் புலன் விசாரணை செய்வதில் நேர்மையும், பாரபட்சமின்றியும் இல்லாமலிருப்பது.

இ. அரசியல் மற்றும் சமூகத்தில் உயர்நிலையில் இருப்போரின் நலனைக் காப்பதற்காக உள்ள ஓர் அமைப்பு என்பதே பெரும்பாலோரின் எண்ணம்.

ஈ. ஆட்சியிலிருக்கும் கட்சிக்கேற்ப செயல்பட விரும்பும் தன்மை.

உ. பல்வேறு மட்டங்களில் நிலவும் ஊழல் மற்றும் குற்றங்களைப் பதிவு செய்யாமை.

மேற்காணும் கருத்து, அனைத்திந்திய அளவிலானது என்றாலும் மற்றவற்றை காட்டிலும் சிறப்பாக நிறுவப்பட்ட, சீரமைப்புடனும், ஒழுங்குடனும் விளங்கும் தமிழக காவல்துறைக்கு முழு அளவில் பொருந்தாது. ஆயினும், காவல்துறை யினைச் சீரமைக்க கோரும் வேண்டுகோள், பொதுமக்களிடமிருந்து மட்டுமின்றி, காவல்துறை யிலிருந்தும் எழுந்துள்ளது.

அண்மைக் காலத்தில், முன்னணியிலிருக்கும் ஒரு முக்கிய விஷயம் யாதெனில், காவல் நிலையத்தில் காவலில் இருக்கும்போது இழைக்கப்படும் சித்திரவதை, காவலில் இருக்கும்போது இறப்பது ஆகியவை உட்பட காவலில் இருக்கும்போது நடத்தப்படும் வன்முறைச் செயலாகும். இது சட்டத்திற்கே ஒரு பெரும் சவாலாக உள்ளது. காவலில் இருக்கும்போது வன்முறையாக நடந்து கொள்வது என்பது, குறிப்பாக குடிமக்களின் பாதுகாவலர்களாக இருக்க வேண்டிய காவல் துறையினரே இவ்வாறு நடந்து கொள்வது வருந்துதற்குரியதாகும்.

சட்டப்பூர்வ நடவடிக்கை தொடரும்போது காவல்துறையினர், குற்றவாளியைக் கைது செய்யவும், புலன் விசாரணையின்போது அவரை விசாரிக்கவும், சந்தேகமேயின்றி, காவல்துறையினருக்குச் சட்டப் படிக்கான உரிமை உள்ளது. ஆனால், குற்றத்திற்குத் தீர்வு காணும் நோக்குடன், காவல்துறையின் பொறுப்பிலிருக்கும் குற்றம் சாட்டப்பட்டவர் மீது மூன்றாந்தர வழிகளை உபயோகிப்பதையோ அல்லது துன்புறுத்துவதையோ, சட்டம் ஒரு போதும் அனுமதிப்ப தில்லை. இறுதி விளைவு, முறையற்ற வழியை நியாயப்படுத்தாது.

ஆயினும், கடுங்குற்றவாளிகளின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகளைப் பாதுகாப்பது குறித்து



அதிகப்படியாக வலியுறுத்துவதனாலும், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்து விடலாம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எனவே, அத்தகு சூழலில் சரியான அணுகுமுறையினை மேற்கொள்ளலாம்.

மேற்காணும் கருத்தினை வலியுறுத்தும் வகையில் நீதியரசர் ஹேண்ட் என்பாரின் கூற்றும் உள்ளது. அது வருமாறு: ''தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் பழிபாவத்திலிருந்து ஒரு தனி மனிதனுக்கு காவல்துறை மற்றும் சட்டத்தைச் செயல்படுத்தும் ஏனைய அலுவலர்கள் பாதுகாப்பு அளிப்பது என்பது உண்மையில் ஒரு சுதந்திரமான சமுதாயத்தில் ஒரு முக்கிய கடமையாகும். ஆயினும் குற்றங்கள் குறித்து திறம்பட வழக்குத் தொடர்வதிலும், அதுபோன்றே இருக்க வேண்டுமென்றிருந்தபோதிலும் சில சமயங்களில் அத்தகைய கடமை மறக்கப்பட்டு விடுகிறது. மனிதாபிமான அடிப்படையிலான ஏனைய அமைப்புகள் போன்றே குற்ற நடைமுறைகளும் சமரச இணக்கமாக இருக்க வேண்டும் என்பதை முழுமையாகச் செயல்படுத்துவது சாத்தியமல்ல".

இம்முரண்பாட்டினை, லூயிஸ் மேயர்ஸ் மிகச் சரியாய் குறிப்பிட்டுள்ளார்.

''தராசின் ஒரு தட்டில் சட்டத்தை செயல்படுத்தும் அமைப்பின் தேவைகளும், மறு தட்டில் அவ்வமைப்பின் கொடுமை, அநீதியிலிருந்து குடிமகனைக் காப்பாற்றும் பொறுப்பையும் வைத்து இவையிரண்டுக்குமிடையே சரிசமமான நிலையை ஏற்படுத்த முயற்சிப்பது மாநில அரசுக்கு இருந்து வரும் நெடுங்கால பிரச்சினையாகும்". கடந்த ஆண்டுகளில் சட்டத்தைச் செயல்படுத்தும் அமைப்பு சரிவர செயல்பட்டு வந்துள்ளது.

காவல்துறையின் செயல்பாடும், மனோபாவமும், பெருமளவிற்கு, முறையான ஆட்தேர்வு, பயிற்சி, பொதுமக்களிடையே பழகுதல் மற்றும் நன்மதிப்பு ஆதரவு பெறுதல், ஊக்கம் மற்றும் ஒழுங்குணர்வு முதலியவற்றையே சார்ந்துள்ளது.

துரதிருஷ்டவசமாக, சமீப காலங்களில், காவல் பணியாளர் தேர்வு குறித்து, அதற்கென ஒரு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் இருந்தும், அதிகமான எண்ணிக்கையில் புகார்கள் வந்துள்ளன. மனித ஆற்றல் தவறாக நிருவகிக்கப்படுதல், வலிமை காட்ட வேண்டுமென்பதில் நம்பிக்கை, சட்டம், ஒழுங்கு நிலையைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை, ஆகியவையே காவல்துறையினர் தங்களுடைய பலத்தைக் காட்ட வேண்டியுள்ளது.

காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத்துறை ஆகியவற்றிற்கு பொதுவாக ஆட்தேர்வு செய்வதும், உடற்பயிற்சி திறனறியும் சோதனை மற்றும் நேர்காணலுக்கான மதிப்பெண்களைக் காட்டிலும், எழுத்துத் தேர்விற்கு அதிக மதிப்பெண்களை அளிப்பதன் மூலம் தவறுகள் நிகழ்வதைக் குறைப்பதன் வாயிலாகவும் பணியாளர் தேர்வைச் சீரமைப்பதே தற்போது நமது முக்கிய பணியாகும்.

மேலும், கடந்த சில காலமாக, காவல்துறையில் பெருமளவு சீர்கேடுகள் மலிந்துவிட்டன. அனைத்து மகளிர் காவல் நிலையங்களே இதற்கு முக்கியமான சான்று. எனவே, காவல்துறையில் ஜூன் மாதம் நடைபெற்ற விரிவான சீராய்விற்குப் பின் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் தற்போது பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் மாற்றப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக, அவர்கள் ஆற்றும் பணி தொடர்பாக, அவர்களின் திறமையை மேம்படுத்திய பின்னர் புதிய பணியாளர்களை பணியமர்த்த, நாம் முடிவெடுத்துள்ளோம். சென்னையில் உள்ள காவலர் பயிற்சி மையத்தில், 4,200 பெண் காவலர்களுக்கு, தொகுதிகளாகப் பிரித்து பயிற்சி அளிக்க ஒரு திட்டம் விரைவில் தொடங்கப்படும். தனியாக, மற்ற பணியாளருக்கும், மாவட்டங்களில் வழக்கமான காவல்துறை கண்காணிப்பாளர்கள் மூலம் திறமையை மேம்படுத்தும் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியை உண்மையில், பயனளிக்கக்கூடியதாகச் செய்யப்படும் வகையில், பயிற்சி அளிப்பவர்களின் பணிகள் பாடத் திட்டமும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

காவல்துறையினை நவீனப்படுத்தும் பணி, நமக்கு, வருங்காலங்களில் கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான களமாக அமையும். 50:50 என பங்கிட்டுக் கொள்வதன் பேரில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் "ரூ.210 கோடி செலவில் காவல்துறையை நவீனப்படுத்துதல்'' பணிக்குரிய 2001 – 2002–ஆம் ஆண்டுக்கான செயற்குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தனியாக தமிழக காவல்துறையினை உலகிற் சிறந்த எந்த அமைப்புடனும் ஒப்பிடும் வகையில் அதன் திறனை அதிகரிக்கும் செயற்குறிப்பினை காவல்துறை தலைமை இயக்குநர், தனது அலுவலர்களுடன் அதிரடி கலந்தாலோசனைக்குப் பின்னர் தயாரித்துள்ளார்.

அரசு, காவலர் பயிற்சி, மோப்ப நாய்ப்படை ஏற்படுத்தல், கணினி மயமாக்கல், கணினி இணைய வகை குற்றங்களில் பயிற்சி, குற்றப் புலன் விசாரணை வசதிகள் மற்றும் தரங்களை மேம்படுத்துதல், கமாண்டோ படைப் பயிற்சி மற்றும் முக்கிய கருவிகளை அவர்களுக்கு அளித்தல் முதலியவற்றை உள்ளடக்கிய செயற்குறிப்புகளை அரசு பரிசீலித்து வருகிறது.

தீயணைப்புத் துறை மற்றும் சிறைத்துறையில் பல்வேறு திருத்தங்கள் கொண்டு வரப்படும். இவை குறித்து விரிவான விபரங்கள் 16.8.2001 அன்று தாக்கல் செய்ய உள்ள நிதிநிலை அறிக்கையில் இடம் பெறும்.

நீங்கள் பாராட்டும் வகையில், காவல்துறையில் நாம் பல்வேறு சீர்திருத்தங்களுக்கான வழிமுறைகளை மேற்கொண்டு வருகிறோம். தீவிரவாத அமைப்புகள் தலைதூக்குதல், ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் தொடர்பான குற்றங்கள் பரவுதல், காலங்கடத்தும் நீதித்துறையின் அமைப்பு, சுற்றுலாத்துறை வளர்ச்சி, திட்டமிட்டு குற்றங்கள் புரிதல் மற்றும் சமீபமாக எழுந்துள்ள குற்றங்கள் ஆகியன. காவல் துறையின் செயல்பாட்டிற்கு சவால்விடும் வகையில்

அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. காவல்துறை தனது பணியினை முறையாகச் செய்யத் தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கான அவசியத்தை நாம் புறக்கணிக்கவில்லை. காவல்துறை பணியாளர்களின் நலனே, என் மனதில் மேலோங்கி உள்ளது. எனவேதான், ஏற்கெனவே குறிப்பிட்டபடி, ஜுன் மாதம் நடைபெற்ற காவல்துறை சீராய்வில், முடிவெடுத்தவாறு, காவல், தீயணைப்பு மற்றும் சிறைத்துறைகளில் பணியாளர்கள் வரவேற்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வுள்ளன. இவை குறித்த விரிவான விவரங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும்.

விரைவில் மேற்கொள்ளப்பட உள்ள பல்வேறு நலத்திட்டங்கள், நிதிநிலை அறிக்கையில் இடம்பெற உள்ளதால், தற்போது நான் விரிவாக இங்கு அறிவிக்கவில்லை. காவல்துறையைப் பற்றி நல்ல மான பலத்தை பயன்படுத்துதல் தவிர்க்கப்பட வேண்டும். சட்டபூர்வமான மற்றும் நியாயமான சக்திக்கும்கூட அடிபணிவதை எவரும் விரும்புவ தில்லை. பொதுவாக, மக்களின் குறைகள் நிறைவு செய்யப்பட்டாலோ, பலத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் எழுவதில்லை. மேலும், போராட்டங்கள், சட்ட ஒழுங்கு நிலைமை சீர்குலைவது ஆகியவை தடுக்கப்படலாம். எனவே, சட்ட ஒழுங்கு நிலைமை சீர்குலைவதற்கான சாத்தியக் கூறுகள் தோன்றுவதற்கு முன்னரே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மக்களின் குறைகளை கவனித்து நிறைவு செய்வது மிகவும் முக்கியமாகும். அவ்வாறு செய்யத் தவறுவதால், தேவையற்ற வன்முறையில் முடிவதோடு, சட்டம் – ஒழுங்கை பாதுகாக்க பலத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. அதே சமயத்தில், குற்றவாளிகளும் சட்டத்தை மீறுபவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்படல் வேண்டும். காவல்துறை ஒரு பக்கம் கனிவான முகத்துடன்




எண்ணத்தை ஏற்படுத்துவது உங்களின் பொறுப்பாகும். அப்போதுதான் காவல்துறை தனது வழக்கமான பணிகளை செய்யும்போது, பொதுமக்களிடம் எழும் எதிர்ப்பினைத் தவிர்க்கலாம். சீருடையும் பரவலான அதிகாரங்களும் கொண்ட நிலைகள், அரசு அதிகாரத்தின் வல்லமை மிக்க சின்னமாகும். எதிர்மறையான காவல் கடமையையும், பலத்தையும் குறைக்கவோ அல்லது தீவிரவாதத்தைக் குறைக்கவோ செய்யமுடியாவிட்டாலும், சில பயனுள்ள பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. அப்போதுதான் சமூக சேவையில் உங்களின் பங்கு பணியை நோக்கமாக கொண்டதாக இருக்கும். அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் இருக்கும். அதனால் சமூகத்திற்கும், காவல்துறைக்கும் இடையே இணக்கமான உறவினை ஏற்படுத்தும். தேவைக்கதிக மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வேளையில், குற்றவாளிகளையும் சட்டத்தை மீறுவோரையும் தண்டிக்கும் போது தனது கடுமையான முகத்தையும் காட்ட வேண்டிய இரு விதமான அணுகுமுறை தவிர்க்க முடியாததாகவுள்ளது.

நிகழ்ச்சி நிரலில் உள்ள பொருள்கள் மீதும் அதில் இடம்பெறாத ஏனைய பொருள் மீதும் உங்களின் கருத்துக்களைத் தெரிவிக்க ஏதுவாக நான் என்னுடை உரையினை முடித்துக் கொள்கிறேன்.

*– காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்*
*2–8–2001 அன்று முதலமைச்சர்*
*செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*
*ஆற்றிய உரை.* ●

# மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்தும் திட்டம்

தமிழ்நாடு அரசு, பின்லாந்து நாட்டின் தெர்மோ புராஜெக்ட் ஓஒய் (M/s.Thermo Projects OY, Finland) என்னும் நிறுவனத்துடன் இணைந்து ரூ.86 கோடி மதிப்பில், தமிழகத்திலுள்ள மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இதற்கான ஒப்பந்தம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர்



செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் 10.8.2001 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. தமிழ்நாடு அரசின் சார்பாக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை செயலாளர் திரு.சையது முனீர் ஹோதா, இ.ஆ.ப., அவர்களும், பின்லாந்து, தெர்மோ புராஜெக்ட் ஓஒய் நிறுவனத்தின் சார்பாக அதன் தலைவர் திரு.ஜான்.எச்.ப்ரீண்ட் (Thiru M.Jon H.Freund) அவர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

அப்போது முதலமைச்சர் அவர்கள், இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் என்றும், இது ஒரு ஆரம்பம் மட்டுமே, இதுபோல மேலும் மேலும் பல கூட்டு முயற்சிகள் இரு நாடுகளுக்கிடையே தொடரும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

இத்திட்டத்தின்படி, தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளைச் சிறப்பான முறையில் மேம்பாடு செய்திட, பின்லாந்து நாட்டின் தெர்மோ புராஜெக்ட் ஓஒய் நிறுவனம்,

நிதியுதவியும் தொழில்நுட்ப உதவியும் வழங்கிட முன்வந்துள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.86 கோடி ஆகும். இந்த நிதி உதவியில் 70% கடனாகவும், 30% மானியமாகவும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் கடுமையாக பாதிப்பு ஏற்படுத்தும் இதய நோய், சிறுநீரகக் கோளாறு, நரம்புத் தளர்ச்சி, மூளைக் கோளாறு, பால்வினை நோய்கள் முதலான பல்வேறு நோய்கள் குறித்து உடனுக்குடன் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையிலான உயிர்காக்கும் நவீன மருத்துவக் கருவிகள் அனைத்து மருத்துவமனைகளுக்கும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் மருத்துவமனைகள் அனைத்திலும் பரவலாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எஸ்.செம்மலை, தலைமைச் செயலாளர் திரு.பி.சங்கர், இ.ஆ.ப. ஆகியோரும், தெர்மோ புராஜெக்ட் நிறுவனத்தின் பின்லாந்து திட்ட அலுவலர் திரு.எஸ்.ஜெயராமன், சென்னை திட்ட ஆலோசகர் திரு.எஸ்.வெரியா (Thiru S.Veriah) சென்னை திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.எஸ்.ஜி.இராதாகிருஷ்ணன் ஆகியோரும் உடனிருந்தனர்.


# The Hind Matches Limited

# &

# Standard Match Industries (P) Limited

*Manufacturers of*
'The Train & Sun Flower' Brands
Cardboards & Veneers Safety Matches

☎ : 75142, 76173, 74952
Fax : 04562-72378

*Regd. Office :*
5-2-15-C, Sattur Road,
Sivakasi - 626 123.

# சென்னையில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

சென்னையில் உருவாகவுள்ள உயிரியல் தொழில்நுட்ப பூங்காவிற்கான (Bio-Technology Park) தொழில்நுட்ப சேவை ஒப்பந்தம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கும் (TIDCO) அமெரிக்க கார்னல் பல்கலைக்கழகத்திற்கும் இடையே, **25–8–2001** அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. அப்போது முதலமைச்சர் அவர்கள் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது குறித்து மிகுந்த மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டார். இந்தியாவில், இத்தகைய முன்னோடி உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்ததற்கு கார்னல் பல்கலைக்கழகத்திற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்.

தமிழகத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், புதிய வேலைவாய்ப்புகளை அதிக அளவில் உருவாக்கவும் பெருத்த நம்பிக்கை அளிக்கக் கூடிய துறையாக உயிரியல் தொழில்நுட்பம் விளங்குகிறது. டிட்கோ நிறுவனத்தின் மூலம், உயிரியல் தொழில்நுட்ப பூங்கா உருவாக்கப்படுவது, இத்தகைய உயிரியல் தொழில்நுட்பத் தொழிற்சாலைகள், தமிழகத்தில் வளருவதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்களில் உலகின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றாக 'கார்னல்' பல்கலைக்கழகம் விளங்குகிறது. இந்தத் துறையில் இதன் பல்வேறு கண்டுபிடிப்புகள் காப்புரிமை பெறப்பட்டு, வர்த்தக ரீதியில் உரிமம் பெற்று திகழ்கின்றன. கார்னல் வணிக மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்கள், பல்லாண்டுகளாக நிலைபெற்று இருப்பதுடன், தொழில்நுட்ப அடிப்படையிலான பல்வேறு புதிய முயற்சிகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றன.

சென்னையில் தற்போதுள்ள டைடல் பார்க் அருகில் **5** ஏக்கர் நிலப்பரப்பில், இந்த உயிரியல் தொழில்நுட்பப்



பூங்கா அமைக்கப்படும். இந்தப் பூங்காவை உருவாக்க, தொழில்நுட்ப உதவியும் அத்துடன் இணைந்த சேவைகளையும் பெற்றிட, டிட்கோ நிறுவனம் அமெரிக்க கார்னல் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

சிறந்த தொழில்நுட்பங்களும், உயிரியல் வளங்களும் வர்த்தக அடிப்படையிலான வாய்ப்பினைப் பெற்றிட அனைத்து வசதிகளும் இருந்தால் மட்டுமே இத்தகைய உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்கள் வெற்றிகரமாக செயல்பட இயலும். கார்னல் பல்கலைக்கழகத்தின் அனுபவம், இத்தகைய வளர்ச்சியை சென்னையில் உருவாகவுள்ள உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவுக்கு அளிக்கும். இந்தியாவின் மற்ற மாநிலங்களில் அமைக்க எண்ணியுள்ள உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்கள், தொழில் தொடங்குவோருக்கு கட்டிட வசதியை மட்டுமே வழங்குகின்ற இடமாக அமைந்துள்ளது. ஆனால், சென்னையில் அமைந்திடும் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஆக்கப்பூர்வமான அறிவு சார்புடைய மையமாக விளங்கும்.

இந்த உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா, 18 ஆயிரம் சதுர அடி பரப்பிலான உயிரியல் வாய்ப்பு மையம் (Bio Resource Centre) மற்றும் புதிய உயிரியல் தனியார் தொழில் நிறுவனங்கள் தொழில் தொடங்க 1 இலட்சத்து 20 ஆயிரம் சதுர அடி பொது வாடகைக் கட்டிடப் பகுதி (Common tenancy area) ஆகிய இரண்டு பெரிய வசதிகளைக் கொண்டிருக்கும்.

இந்த உயிரியல் தொழில்நுட்ப பூங்காவின் மூலம் உயிரியல் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை மற்றும் கட்டுமான வசதிகள், தொழில்நுட்ப தேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற முடியும். தொழில்நுட்ப பரிமாற்றம், தொழில் ஆலோசனை, ஆராய்ச்சி கூட்டமைப்பு, குத்தகை ஆராய்ச்சி பணிகள், ஆராய்ச்சி பணிகளுக்கு அரசு அங்கீகாரம் கிடைக்கச் செய்தல், பொருட்களின் காப்புரிமை பெறுதல், ஆவணங்கள் தயாரித்தல், ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை வர்த்தக மயமாக்கல், உயிரியல் தொழில்நுட்ப பயிற்சிகள் ஆகிய பணிகளை இந்தப் பூங்கா வழங்கும்.

இந்தியாவிலுள்ள குறைந்த செலவிலான தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் விஞ்ஞானிகளை பயன்படுத்தி, உயிரியல் வளங்களை கண்டறிந்து அதன் மரபணு ஆராய்ச்சி (genetic research) மேற்கொள்ள இந்தப் பூங்கா பெரிதும் பயன்படும்.

இந்த தொழிற் பூங்காவில் இடம் பெறுகின்ற 50 புதிய தனியார் நிறுவனங்களிடமிருந்து 1,000 கோடி ரூபாய் புதிய முதலீடுகளைப் பெறும்வகையில், இந்த உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா அமைய உள்ளது.

கார்னல் பல்கலைக்கழகத்தின் உதவியுடன், இந்த திட்டத்தை செயல்படுத்த சாத்தியக் கூறு அறிக்கை முன்பே தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மொத்த செலவு ரூ.62.50 கோடி ஆகும். டிட்கோ நிறுவனம், இந்த திட்டத்தில் தனது பங்குத் தொகையாக ரூ.9 கோடியை முதலீடு செய்யும். இந்த திட்டத்திற்காக ரூ.33 கோடி நிதிஉதவி வழங்கக் கோரி, இந்திய அரசு நிறுவனமான தொழில்நுட்ப வளர்ச்சி வாரியம், பன்னாட்டு நிதிக் கழகம், எக்ஸிம் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி ஆகியவற்றை டிட்கோ நிறுவனம் ஏற்கெனவே அணுகியுள்ளது. இந்த உதவி விரைவில் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 25–8–2001 அன்று கையெழுத்தாகியுள்ள தொழில்நுட்ப சேவை ஒப்பந்தம், உயிரியல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பது தொடர்பான பல்வேறு பணிகளை முடிவு செய்திட டிட்கோ நிறுவனத்திற்கு பெரிதும் உதவும்.

டிட்கோ நிறுவனம் முதலீடு செய்யும் 9 கோடி ரூபாய் மற்றும் சலுகை விலையில் 5 ஏக்கர் நிலம் வழங்குவது ஆகியவை, உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கின்ற பணிக்கு மிகப் பெரிய ஊக்கம் அளித்து, இந்த பெருமைமிகு திட்டம் ஆகஸ்ட் 2001–ல் தொடங்கி விரைவாக ஜூலை 2002–க்குள் முழுமையாக கட்டி முடிக்க வழி வகுக்கும்.

இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் இத்தகைய உயிரியல் தொழில்நுட்ப பூங்கா அமைத்திட, அமெரிக்க கார்னல் பல்கலைக்கழகம் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது. சென்னையில் இப்பூங்கா செயல்படுத்திய பின்னரே, வேறு மாநிலங்களில் இத்தகைய பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்று கார்னல் பல்கலைக்கழ்கம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது.

இந்த உயிரியல் தொழில்நுட்ப பூங்கா "டைசல்" பூங்கா (TICEL - TIDCO Centre for Life Sciences) என அழைக்கப்படும். இத்தகைய உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்படுவது, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையின் கீழ், தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உயிரியல் தொழில்நுட்பத் தொழிற்சாலைகளை வளர்த்திட எடுக்கின்ற முக்கிய முயற்சி ஆகும்.

இந்த நிகழ்ச்சியின்போது தொழில்துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்திலிங்கம், தலைமைச் செயலாளர் திரு.பி.சங்கர், வேளாண்மைத்துறை செயலர் திரு.எம்.பி.பிரானேஷ், தொழில்துறை செயலர் திரு.எம்.ஏ.கௌரிசங்கர், நிதித்துறைச் செயலர் திரு.ஆர்.சந்தானம், டிட்கோ நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.மாதவன் நம்பியார், அமெரிக்க கார்னல் பல்கலைக்கழக டீன் (Dean) டாக்டர் ரோனி காஃப்மேன், இணை இயக்குநர் (சிறப்புத் திட்டங்கள்) டாக்டர் கே.வி.ராமன், இந்திய ஒருங்கிணைப்பாளர் திரு.கே.விஜயராகவன் உடன் இருந்தனர். ★

பஞ்சாபி சிறுகதை

*மூலம் :* **துக்கால் கர்தார்சிங்**

*தமிழில் :* **பின்னலூர் மு. விவேகானந்தன்**

# திரும்பி வா! எஜமானனே!

நீலி பாலில் கழுவிய வெண்ணெய்யைப் போல் அவ்வளவு வெண்மை. அழகும், வலிமையும் அதன் அணிகலன். நல்ல ஆரோக்கியமான பசுவின் பால் சிறப்பு வாய்ந்தது என்பதால் நீலியைத் தேர்ந்தெடுத்து அதனிடம் கறந்த பாலினை வாங்குவது என் மனைவியின் வழக்கம். தினமும் காலையில் பால்காரன் நீலி என்னும் அந்தப் பசுமாட்டை ஒட்டிவந்து வீட்டிற்குமுன் உள்ள வேப்பமரத்தின் கீழ் கட்டி, அதற்குத் தேவையான தீவனத்தைத் தந்து பாலைக் கறந்து அப்படியே தந்துவிட்டுப் போய்விடுவான்.

பால் கறக்கும்போது நீலிக்குத் தேவையான பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, தவிடு போன்ற தீவனங்களை அதிகம் கொடுக்கும்படி என் மனைவி பால்காரனிடம் கூறுவாள். அவன் கையோடு எடுத்துவரும் தொட்டியில் இவையெல்லாம் குறைவின்றி நிறைந்துள்ளதா என்றும் அவள் அடிக்கடி சரிபார்ப்ப துண்டு. சத்தான தீவனம் தந்தால்தான் தரமான பாலும் அதிகமான வெண்ணெய்யும் கிடைக்கும் என்று என் மனைவி பால்காரனுக்கு அடிக்கடி ஆலோசனை கூறுவதுண்டு.

ஒவ்வொரு நாளும் காலைப்பொழுதில் எங்கள் வீட்டிற்கு வந்து பொலிவைத் தந்துவிட்டுப் போகும் நீலி ஒருநாள் பால்தர மறுத்துவிட்டது என்றான் பால்காரன். பிறகுதான் காரணம் தெரிந்தது.

ஒரு சில வாரங்கள் ஓடின. ஒருநாள் அதிகாலை வழக்கம்போல நீலி வந்தது அதனுடைய இளங்கன்றுடன். கண்களின் பிரகாசம் மின்ன வெள்ளை வெளேரென்று பரவசமூட்டியது கன்றுக்குட்டி.

கன்றுக்குட்டிக்குக் கூட பால் மிஞ்சாத அளவிற்குப் பாலைக் கறந்து கொடுத்தான் பால்காரன். ஒருநாள் என் மனைவி பால்காரனின் ஈவிரக்கமற்ற இச்செயலைப் பார்த்துவிட்டு, "கன்றுக்குட்டிக்கு ஒரு சொட்டு பால்கூட வைக்காமல் கறந்து விற்றுவிடுகிறான் பாவம் கன்று. இவன் இப்படியே இதைப் பால்கூட கொடுக்காமல் பட்டினிப்போட்டுக் கொன்றுவிடுவானோ" என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துவதுண்டு. அவள் பயந்ததுபோலவே கன்றுக்குட்டி பட்டினியால் இறந்தது.

சேயை இழந்த தாய்ப்பசு நீலி சோகத்தில் மூழ்கியது. அதனழகிய உருவை நாளுக்குநாள் இழந்து எலும்பும் தோலுமாயிற்று. எப்பொழுதும் வீட்டின் சுற்றுச்சுவர் கதவு சாத்தியிருந்தாலும் தன் கொம்பால் முட்டித் தள்ளிவிட்டு ஆர்வமாக வரும் நீலி கதவின் வெளிப்பக்கமே நின்றது. பால்காரன் வந்து கதவைத் திறந்துவிட்டதும் அவன் பின்னாலேயே வந்தது. அதற்குப் பிடித்தமான பிண்ணாக்கும், பருத்திக் கொட்டையும், தீவனமாக வைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மீது நீலி ஆர்வம் காட்டவில்லை.

தாழ்வாரத்தில் அமர்ந்தபடி நானும், கைக்குழந்தையை சுமந்தபடியே என் மனைவியும் இதைக் கவனித்துக் கொண்டிருந்தோம்.

நீலிக்குமுன் தொட்டியை வைத்தும் அது தின்பதற்கு ஆர்வம் காட்டாததனால் சிறிது புண்ணாக்கை எடுத்து அதன் முகத்தருகே நீட்டினான் பால்காரன். அதற்கு மிகவும் பிடித்த புண்ணாக்கின் வாசத்தைக் கொண்டு அதைத் தின்றுவிடச் செய்துவிடலாம் என்று எண்ணியவனின் நோக்கம் பலனளிக்கவில்லை. எந்தவிதத் தூண்டுதலும் நீலியின் சோகத்திலிருந்து அதைத் தனிமைப்படுத்த முடியவில்லை. ஆயினும் மீண்டும் ஒருமுறை தொட்டியிலிருந்த தீவனத்தைக் கைநிறைய அள்ளி அதன் முகத்தருகே நீட்டினான். ஆவலுடன் உண்ணும் நீலி, அதை மறுத்து முகத்தைத் திருப்பி கீழே தட்டிவிட்டது.

பால்காரன் பொறுமையை இழந்தான். கோபத்தின் உச்சத்திற்கே சென்றவன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு அதன் நெற்றியினை லேசாக வருடிக் கொடுத்தவாறே மீண்டும் தொட்டியில் இருந்த தீவனத்தைக் கையால் கிளறி விட்டான். புண்ணாக்கின் மணம் நீலியைக் கவர்ந்தது. அது தொட்டியில் முகத்தை நுழைத்தது. ஆனால் என்ன நினைத்ததோ உண்ண வில்லை. சிறிதுநேரத்தில் தலையை மேலே நிமிர்த்தி அப்படியே நின்றது. நீலியின் செய்கையால் குழப்பமடைந்த பால்காரன் அதைப் பார்வை மூலம் எங்களுக்கு உணர்த் தினான். உடனே தொட்டி யைத் தூக்கி தலைமேல்

வைத்துக்கொண்டு வெளியேறினான். நீலியும் அவனைத் தொடர்ந்து சென்றது.

''சிறிதளவு பால் கூட கிடைக்கும் என்பதற்காக கன்றுக்குட்டிக்குரிய பாலை அதற்குக் கொடுக்காமல் கொன்றுவிட்டான் பால்காரப்பாவி" என்று சோகத்தோடு சொல் உதிர்த்த என் மனைவி, வீட்டு வேலைக்காரனை நோக்கி, "வெளியில் சென்றாவது பால் வாங்கி வா" என்று கட்டளையிட்டாள்.

தாழ்வாரத்தில் இருந்தபடியே பால்காரனும் நீலியும் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நீலி மிக மெதுவாக கடுமையான சோகத்தின் சாயலில் இருளில் நடப்பதுபோல சென்று கொண்டிருந்தது.

"பால் வாங்கி வரும்போது பசுஞ்சாணம் கொஞ்சம் எடுத்து வா. நாளை புனித சங்கராந்தி (பொங்கல்), அடுப்பு மெழுகவேண்டும்" என்று என் மனைவி வேலைக்காரனிடம் கூறியது காதில் விழுந்தாலும், என் பார்வையிலிருந்து மறையும் வரை நீலியை கவனித்தபடியே இருந்தன என் கண்கள்.

அடுத்தநாள் காலை, வழக்கம் போல கதவு திறக்கும் சப்தம் கேட்டு தாழ்வாரத்திற்கு வந்து பார்த்தேன். பால்காரனைத் தொடர்ந்து நீலி வந்து கொண்டிருந்தது. நீலியின் கவனமெல்லாம் தொட்டியில் உள்ள தீனியின் மேலிருந்தது.


தொட்டியிலிருந்த தீவனத்தை மிக ஆவலாக நீலி உண்ணத் தொடங்கியதுதான் தாமதம், பால்காரன் தயாராக பால் சொம்புடன் பாலை கறப்பதற்கு அதன் மடி அருகே அமர்ந்தான். ஆனால் நீலி ஒதுங்கி நின்றது. மீண்டும் அதனருகில் நெருங்கிச் சென்று பால் கறக்க முயற்சித்தான். நீலி அப்போதுதான் முதல் வாய் தீவனத்தைத் தின்னத் தொடங்கியது. பாவம் அது இரண்டு நாட்களாகத் தீனியின்றி பட்டினியாகவே கிடந்தது.

பால்காரன் அதன் மடியில் கைவைத்து பால் கறக்கத் தொடங்கியபோது ஒரு துள்ளலுடன் அது நகர்ந்து நின்றது. மெதுவாக எழுந்து ஆறுதலாக அதன் முதுகில் தனது விரல்களால் தடவிக் கொடுத்தான். சிறிது நேரம் சென்று மீண்டும் ஒரு முறை அதன் மடி அருகே அமர்ந்து மடியைத் தொட்டு பால் கரக்கத் தொடங்கியபோது அது சட்டென்று பின்னங்காலால் இடறியது. தடுமாறிய நிலையில் பால்காரன் முற்றிலும் பொறுமை இழந்தான். நீலி தின்று கொண்டிருந்த தொட்டியை வெடுக்கென இழுத்துத் தன் தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டு ஆவேசமடைந்தவனாய் விடுவிடுவென்று வெளியேறினான்.

நீலி திகைத்து நின்றது. அவன் சென்ற திசையைப் பார்த்து பரிதாபமான குரலில் "....ம்மா.." என்று கத்தியது. அதன் கதறலைக் காதில் வாங்கிக் கொள்ளாமலேயே பால்காரன் சென்று கொண்டிருந்தான்.

நீண்ட நேரம் அவன் சென்ற திசையினை துக்கம் தோய்ந்த கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தது. அவன் திரும்ப வருவான் என்று நினைத்து அவனுடைய வருகையை எதிர்பார்ப்பதுபோல ஆவலுடன் அவன் சென்ற திசையைப் பார்த்தபடியே முணங்கியபடியே நின்ற நீலிக்கு அழுகை பொங்கிக் கொண்டுவந்தது.

"எஜமானனே, திரும்பி வா!...திரும்பி வா என்னுடைய எஜமானனே! என்னுடைய குழந்தையை, என் ரத்தத்தின் ரத்தத்தை, என் சதையின் சதையை இழந்து இரண்டு நாட்கள்கூட ஆகவில்லை. என் மனத்தில் கப்பியுள்ள ஆழ்ந்த துயரத்தைப் புரிந்துகொள்ளாமல் என்னை ஏன் இப்படி சித்திரவதை செய்கிறாய். நான் பால்தர மாட்டேன் என்று கூறினேனா ?...எஜமானே, உனக்குப் பால் தராமல் நான் யாருக்குக் கொடுக்கப் போகிறேன். இன்னும் ஓரிரு



நாட்களில் என் அன்புச் செல்வத்தின் பிரிவு, ஞாபகம் எல்லாம் ஓரளவு மறந்துவிடும். மறந்து விடுவேன்; அதற்குப் பிறகு நீ என்னிடம் பால் கறந்து கொள்.

பட்டினியாய்க் கிடந்த என் முன்னே எனக்கு மிக விருப்பமான தீனியை வைத்துவிட்டு நான் தின்னப் போகின்ற வேளையில் பால் கொடுக்கவில்லை என்று பறித்துக்கொண்டாயே, எஜமானனே! திரும்ப வா! எனக்குத் தீனியைக் கொடு! என் கடைசி சொட்டு இரத்தம் பாலாகும் வரை கறந்து கொள்! எஜமானனே கறந்து கொள்! என்னைப் பட்டினிப் போடாதே! ஏற்கெனவே பட்டினி கிடந்து களைத்துபோன எனக்கு மிகவும் பசிக்கிறது...வா!...எஜமானனே! திரும்ப வா!...என்று வேதனையோடு அழைப்பதுபோல அந்தப் பால்காரன் சென்ற திசையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது நீலி.

ஆனால், அந்தப் பால்காரன் திரும்பவே இல்லை!

***நன்றி :*** இந்தியலிட்டரேச்சர்

# பொதுமக்கள் தகவல் அறிய தொடுதிரை வசதியுடனான வெளிப்புற கணினி மாடம்

பொதுமக்களுடன் அதிக அளவில் தொடர்பு கொள்கின்ற துறை வருவாய்த்துறையாகும். வருவாய் நிர்வாகத்தில் நிலப் பதிவுருக்களை கணினி மயமாக்கும் திட்டம் பொதுமக்கள் தொடர்பில் ஒரு குறிப்பிடப்பட்ட இடத்தைப் பெறுகிறது. பொதுமக்கள் தங்கள் உரிமை ஆவணங்களை பெற விரும்புவதுடன், 'அ' பதிவேடுகள், சிட்டா நகல்கள், புலப்பட மாதிரிகள் மற்றும் பட்டாவிற்கான புள்ளி விவரங்கள் போன்றவை துல்லியமாக அவர்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே நிலப் பதிவுருக்களை கணினி மயமாக்கும் திட்டத்தின் பயன்களை நிலைநாட்டுவதற்குத் தேவையான தகவல் அமைப்பை அரசு ஏற்படுத்தி தரவேண்டும். தற்போது பின்பற்றப்படும் முறையில் கால தாமதம் ஏற்படுவதுடன் புள்ளி விவரங்களும் தெளிவாக கிடைப்பதில்லை. கணினி அமைப்பு தற்போதுள்ள முறையை இலகுவாக்கி யுள்ளதுடன், மாவட்ட நிர்வாகத்திற்கு புள்ளி விவரங்களை அளிப்பதன் மூலம் மக்கள் தொடர்பில் உதவி புரிகிறது. வெளிப்புற கணினி மாடங்கள் தொடுதிரை மூலம் மக்களுக்குத் தேவையான புள்ளி விவரங்களை பெறுவதற்கான எளிய வழியை அமைத்துத் தருகிறது. ஆகவேதான் வெளிப்புற கணினி மாடங்கள் தொடுதிரை வசதியுடன் வட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைப்படுகின்ற இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. இது இவ்வரசு ஒளிவு மறைவற்ற வெளிப்படையான அரசு என்ற இவ்வரசின் தன்மையை நிரூபிக்கும் விதத்தில் செயல்படும். இவ்வசதியை பரவலாக்க வட்டங்களை தெரிவு செய்கின்ற விதத்திலேயே இவ்வரசின் மனப்பான்மை பிரதிபலிக்கின்றது. பொதுமக்கள் அரசின் நலம் பயக்கும் திட்டங்களுடன் தங்களை ஐக்கியபடுத்தி பயன்பெறுவதற்கு வெளிப்புற கணினி மாடங்கள் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. நடப்பு நிதி ஆண்டில் மாநிலம் முழுவதும் 29 வட்ட அலுவலகங்களில் இந்த வசதிகள் தரப்பட உள்ளன.

• • •

## பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் பயில உதவி

தமிழகத்திலுள்ள பொறியியல், மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் பயில இடம் கிடைத்தும் அங்கு சேருவதற்கான பூர்வாங்க கல்விக் கட்டணம் மற்றும் இதர கல்வி செலவுகளுக்கு போதிய நிதிவசதியின்றித் தவித்த 22 ஏழை மாணவ மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதி"யிலிருந்து தலா ரூ.25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.5 இலட்சத்து 80 ஆயிரம் நிதியுதவியை 11-8-2001 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த டி.தேசிகா ராணி, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.ரவிவர்மன், பி.செல்வேந்திரன், ஆர்.சீனிவாசன், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த டி.சசிகலா, ஜி.தனலட்சுமி, ஆர்.லோகேஷ்பாபு, சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சி.கலைச்செல்வி, என்.சரவணன், என்.மாரிமுத்து, எஸ்.ஜெயலட்சுமி, எஸ்.மோகன்ராஜ், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ராஜகலாவதி, தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.ஜெயசங்கர், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.அய்யப்பன், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.பாரதி, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.பார்வதிதேவி ஆகியோருக்கு பொறியியல் கல்லூரிகளிலும், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். உதயசூரியன், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த பி.கணேஷ்பெருமாள், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த என்.தனபால், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கே.கலைச்செல்வி ஆகியோருக்கு மருத்துவக் கல்லூரிகளிலும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பி.சிவபிரகாசம் என்பவருக்கு கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் பயில இடம் கிடைத்தும் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் கல்லூரிகளில் சேர முடியாமல் உதவி கோரி முதலமைச்சர் அவர்களுக்கு மனு அளித்திருந்தனர்.

**மனுக்கள் பரிசீலனை**

இந்த மனுக்களை பரிவுடன் பரிசீலனை செய்த முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட மாணவ மாணவியர்களின் கல்வி தடைபடாமல் அவர்கள் அனுமதி பெற்றுள்ள கல்லூரிகளில் சேர்ந்து பயில வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் நிதி வழங்க அனுமதி அளித்தார்கள். இதன்படி, மேற்கண்ட 22 மாணவ-மாணவியர்களுக்கும் மொத்தம் ரூ.5 இலட்சத்து 50 ஆயிரம் நிதியுதவினை முதலமைச்சர் அவர்கள் 11-8-2001 அன்று தலைமைச் செயலகத்தில் மாணவ-மாணவிர்களிடம் வழங்கினார்கள்.

**மாண்புமிகு முதல்வருக்கு நன்றி**

உயர்கல்வி பெறுவதற்காக நிதியுதவி பெற்றுக் கொண்ட இந்த மாணவ-மாணவிகள் தகுந்த நேரத்தில் நிதியுதவியை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். •

# தலைகள் அறுபட்டன! மனிதநேயம் உயிர்பெற்றது!

## ஏர்வாடி மனநலக்காப்பகங்களை முறைப்படுத்த முதல்வர் நடவடிக்கை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் மனநலக் காப்பகத்தில் சமீபத்தில் நடந்த தீவிபத்தையடுத்து, மனநல நோயாளிகளுக் கென நடத்தப்படுகின்ற இல்லங்களுடைய செயல்பாட்டினை முறைப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து 10.8.2001 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடி மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள 16 மனநலக் காப்பகங்களை உடனடியாக மூடிவிடுவதென முடிவு செய்யப்பட்டது. அங்கு அனுமதிக்கப் பட்டவர்கள் அரசால் பாதுகாக்கப்படுவார்கள். இதில் உண்மையிலேயே மனநிலை பாதிக்கப் பட்டவர்கள் அரசால் நடத்தப்படும் மனநல மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவார்கள். அவ்வாறு மனநிலை பாதிக்கப்படாத நபர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய குடும்பங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள பிற மனநல காப்பகங்கள் அனைத்தையும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக தணிக்கை செய்து ஆய்வு மேற்கொள்வார்கள். எதிர்காலத்தில் இத்தகைய மனநல காப்பகங்களைத் தொடங்கும் முன்பாக அரசிடமிருந்து அதற்கான உரிமம் பெறவேண்டும். தற்போது தமிழகத்திலுள்ள அனைத்து மனநல காப்பகங்களும் ஒரு மாதத்திற்குள் உரிய உரிமம் பெறவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையின் கீழ் ஒரு கண்காணிப்புக்குழு அமைக்கப்படும். இந்தக் குழுவில் இணை இயக்குநர் சுகாதாரம், பயிற்சி பெற்ற மனநல நிபுணர் மற்றும் இதர மருத்துவ அலுவலர்கள் உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள். இந்தக் குழு இத்தகைய மனநல காப்பகங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து அவை தக்க விதிமுறைகளின்படி நடத்தப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கும். தமிழ்நாட்டில் இதுபோன்று கீற்றுக் கொட்டகைகளில் நடத்தப்படுகின்ற அனைத்து மனநல காப்பகங்களும் உடனடியாக மூடப்படும். மேலும் எங்கெங்கு இத்தகைய மனநல நோயாளிகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்கள் அவற்றி லிருந்து உடனடியாக விடுவிக்கப்படுவார்கள். அவர்களில் மூர்க்கத்தனமாக நடந்து கொள்பவர்கள் மட்டும் அரசு மருத்துவமனைகளில் தொடர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவார்கள்.

மனநிலை பாதிக்கப்படாமல் ஆனால் குடும்பத்தினரால் கைவிடப்பட்டு மனநலகாப்பகங்களில் அனுமதிக்கப் பட்டவர்களுக்கு, ஆதரவற்றோருக்கான முதியோர் உதவித் தொகை உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இத்தகையோரை திரும்ப அழைத்துக் கொள்ளவோ, தங்களுடன் வைத்துப் பராமரிக்கவோ யாரும் இல்லையெனில் அவர்களை மாநில அரசு மற்றும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் காப்பகங்களிலும் ஆதரவற்றோர் காப்பகங்களிலும் அனுமதிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் ரு.2 கோடி செலவில் "மாவட்ட மனநல பாதுகாப்புத் திட்டம்" உடனடியாக செயல்படுத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள 25 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் 11 மருத்துவமனைகளில் மட்டும் தற்போது மனநல நிபுணர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதமுள்ள 14 மாவட்ட மருத்துவமனைகளிலும் மனநல நிபுணர்களை உடனடியாக நியமிக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

தேசிய மனித உரிமை ஆணையம் மற்றும் மாநில மனித உரிமை ஆணையம் ஆகியவை இதுகுறித்து தெரிவித்துள்ள அனைத்து பரிந்துரைகளும் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. மேலும் ஏர்வாடியில் ஏற்பட்ட தீ விபத்தினால் நிகழ்ந்த இறப்புகள் குறித்து விசாரணை செய்வதற்காக ஒய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணை கமிஷன் ஒன்று நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.எஸ்.செம்மலை, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. அ.அன்வர் ராஜா, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி பா.வளர்மதி, தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர், சமூக நலத்துறை செயலாளர் மற்றும் உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மாநில ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

• • •

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்.*

*– திருக்குறள்*

# சுற்றுச் சூழலுக்கு உகந்த பொருட்கள் குறித்த நடமாடும் கண்காட்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.8.2001 அன்று தலைமைச் செயலகத்திற்கு அருகில் காமராஜர் சாலையில் "பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச் சூழலுக்கு உகந்த பொருட்கள்" குறித்த நடமாடும் கண்காட்சியை (MOBILE EXHIBITION) தொடங்கி வைத்தார்கள். சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு உறுதி அளிக்கும் அரசின் ஆக்கப்பூர்வமான எண்ணத்தை இக்கண்காட்சி வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.


கண்காட்சியில் அன்றாடம் நாம் பயன்படுத்துகிற பிளாஸ்டிக் பொருட்களும், அதற்கு மாற்றாக நாம் பயன்படுத்தக் கூடிய எளிதில் கிடைக்கக் கூடிய பொருட்களும் அழகாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தன.

ஒரு முறை பயன்படுத்தி தூரவீசும் பிளாஸ்டிக் டம்ளர்களுக்குப் பதிலாக காகிதக் கோப்பைகள், பிளாஸ்டிக்கினால் ஆன பெட் ஜார்களுக்குப் பதிலாகக் கண்ணாடிக் குடுவைகள், பிளாஸ்டிக் டம்ளர்களுக்குப் பதிலாக கண்ணாடி மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள், தேநீர் வடிகட்ட துணியாலான வடிகட்டிகள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்களிடத்தில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் எடுத்துக் காட்டினார்.

## முதல்வர் பாராட்டு

அடுத்து, கடைகளிலிருந்து பொருட்கள் வாங்கிவர தற்போது பயன்படுத்தப்படுகின்ற பிளாஸ்டிக் பைகளுக்குப் பதிலாக காகிதத்தால் ஆன பைகள், பிளாஸ்டிக் முறங்களுக்குப் பதிலாக மூங்கில் பட்டைகளால் தயாரிக்கப்பட்ட முறங்கள் ஆகியவற்றையும் முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். பின்னர் சிற்றுண்டி உண்ண பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தட்டுகளுக்குப் பதிலாக பாக்கு மட்டைகளைப் பதப்படுத்தி தயாரிக்கப்பட்ட தட்டுகளைப் பார்வையிட்டு மிகவும் நன்றாக இருக்கிறது என்று பாராட்டுத் தெரிவித்தார்கள்.

பழங்கள் வாங்கிவர பின்னலாடைத் துணியால் ஆன பைகள் பயன்படுத்தலாம் என்றும், சோடா முதலிய பானங்களைக் கண்ணாடி பாட்டில்களில் அடைத்து விற்கலாம், அதற்குரிய மூடியைக் கூட பிளாஸ்டிக் இல்லாமல் வைத்திருக்கலாம் என்றும் எடுத்துக்காட்டப்பட்டிருந்ததை முதலமைச்சர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள். கண்ணாடி பாட்டிலில் இருந்த பன்னீர் சோடாவை முதலமைச்சர் அவர்கள் சுவைத்து மகிழ்ந்தார்கள்.





அடுத்து, வீடுகளில் தரைகளைச் சுத்தம் செய்வதற்காக பிளாஸ்டிக் துடைப்பங்கள் பயன்படுத்துவதை முற்றிலுமாக நீக்கி, நாம் காலங்காலமாகப் பயன்படுத்தி வரும் தென்னை மட்டை ஈர்க்குச்சிகளால் ஆன துடைப்பங்களையே பயன்படுத்தலாம் என்று எடுத்துக்காட்டப்பட்டிருந்ததை பார்வையிட்ட முதலமைச்சர் அவர்கள், தமது வீட்டில் தென்னைமட்டை ஈர்க்குச்சி துடைப்பங்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

கண்காட்சியில், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு காட்சியையும் முதலமைச்சர் அவர்கள் கூர்ந்து பார்த்து பாராட்டு தெரிவித்தார்கள். பொதுமக்கள் அனைவரும் இக்கண்காட்சியை தவறாமல் பார்த்து பயனடைய வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

பிளாஸ்டிக் பொருட்கள் மக்கும் தன்மை அற்றது. மறுசுழற்சி செய்ய இயலாது. அவற்றை எரிக்கும்போது வெளியாகும் 'டயாக்சின்' என்ற நச்சுப் பொருள் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது. எனவே, பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகப்படுத்துவது தீங்கானது என்பதையும், அதற்கு மாற்றாக சுற்றுச் சூழலுக்கு உகந்த பொருட்கள் என்னென்ன, அவற்றைப் பயன்படுத்த வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதையும் மக்களுக்கு உணர்த்த வேண்டியது இன்றைய முக்கிய தேவையாகும். இத்தகைய விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் உருவாக்க, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இந்த நடமாடும் கண்காட்சியை அமைத்துள்ளது.

சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் இந்த நடமாடும் கண்காட்சி காண்பிக்கப்பட உள்ளது. குறிப்பாக பள்ளிகளில் இந்த கண்காட்சி காண்பிக்கப்படுவதுடன், மாணவ மாணவியர்கள் இது குறித்த வினாக்களை எழுப்பி விளக்கங்கள் பெறுகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாணவ மாணவியர்கள் பங்கேற்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பலவகையான போட்டிகளும் நடத்தப்படும். இதே போன்ற கண்காட்சியை மாவட்டங்கள் தோறும் அமைத்து நடத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களுக்கு, கண்காட்சி அரங்கில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் பற்றி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர் திருமதி ஷீலாராணி சுங்கத் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். செய்தி – விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் திரு.எஸ்.எஸ்.திருநாவுக்கரசு அவர்கள், வனம் மற்றும் சுற்றுச்சூழல் செயலர் திரு வை. பழனிசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

• • •

# தினமும் மக்களைச் சந்திக்கும் முதல்வர்!

# உடனடியாய் அவர்கள் குறை தீர்ப்பதிலும் முதல்வர்!

தமிழக மக்களின் பேராதரவோடு மாநிலத்தின் முதலமைச்சராகப் பதவி யேற்ற நாளிலிருந்து, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இமைப்பொழுதும் சோராது, தமிழகத்தின் மேம்பாட்டுக்காக அரிய பெரும் திட்டங்களைத் தீட்டி செயலாற்றி வருகிறார். அதே சமயம், தமிழ் மக்களில் பலர் வறுமையிலும், சமூகக் கொடுமையிலும் அகப்பட்டு அல்லல்படுவதை மறவாது, தானே தினமும் பொதுமக்களைச் சந்திக்கிறார். அவர்கள் துயர்நிலையை நேரில் காண்கிறார். உதவி பெறத் தகுதியான ஏழை, எளிய மக்களுக்கு – முதியோர் முதல் இளைஞர் வரை – முதலமைச்சர் அவர்களின் நேரடி நடவடிக்கையால் வாழ்க்கையில் வசந்தம் பிறக்கிறது. நலத்திட்ட உதவிகள் பெறுவோரை வரவழைத்துத் தானே நேரில் உதவிகளை வழங்குகிறார். ஏழை மாணவர்க்கு நிதியுதவி, ஏழை, எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு, ஊனமுற்றோர்க்கு உதவி, தியாகிகளுக்கு ஓய்வூதியம் என்று முதலமைச்சர் அவர்களால் பயன்பெறும் தமிழக மக்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகிறது. கேட்டது கிடைக்கும் என்ற செய்தி மாநிலம் முழுவதும் பரவி, பசியெடுத்தால் தாயைத் தேடி ஓடிடும் குழந்தைகள் போல், முதலமைச்சரைத் தேடி வரும் ஆதரவற்ற மக்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது.

மகிழ்ச்சியிலும், நன்றியிலும் நெஞ்சம் நிரம்பியிருக்க, மாண்புமிகு முதலமைச்சரின் திருக்கரங்களால் தாங்கள் உதவி பெற்ற நிகழ்ச்சியை நம்மோடு பகிர்ந்து கொள்கின்றனர் நலத்திட்ட உதவி பெற்றவர்களில் சிலர்.

திருநெல்வேலி மாவட்டம், அதிசயபுரத்தைச் சேர்ந்த ஒரு ஏழைத் தொழிலாளியின் மகள் செல்வி மரியாள். சென்னையில் பிறந்து வளர்ந்தவர். அவருடைய வாழ்வில் 15.6.2001 அன்று முதல் ஒளி வீசத் தொடங்கியது.

தனது தந்தை திரு.எம். தேவதாஸ் ஒரு கூலித் தொழிலாளியாக வாழ்க்கையை நடத்தி வந்ததால் ஏற்பட்ட வறுமையிலும் தளராமல், கால்கள் சரிவர நடக்க இயலாத ஊனமுற்ற நிலையிலும் மனம் தளராமல் சென்னை பாரதி மகளிர் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தவுடன் தன் கல்விப்பாதை முடிந்துவிட்டது எனக் கருதாமல், ஆசிரியர் பயிற்சி கல்வியை (பி.எட்.) வேப்பேரி கிருத்துவக் கல்லூரியில் முடித்தார்.



எதிர்கால வாழ்க்கை ஏற்றம் பெற வேண்டுமானால் மேலும் ஒரு படி ஏற வேண்டும் என்று எண்ணி, பட்டமேல் படிப்பு (எம்.ஏ.) முடித்து தேர்வு எழுதியுள்ளார்.

கற்ற கல்வி சிறந்ததாயினும் உரிய வேலை கிடைக்க வேண்டுமே! ஊனமுற்ற நிலையிலும் கடந்த 4 வருடங்களாகத் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்ததையும், திடீரென ஒரு நாள் தன் வாழ்வில் ஒளி பிறந்ததையும் இப்போது நினைவு கூர்கிறார்.

வயதான தாய் தந்தையோடு வறுமையில் போராடும் இத்தருணத்தில் தன் நிலையை நேரில் விளக்கிக் கூற, 15.6.2001 அன்று மாண்புமிகு முதலமைச்சரை சந்திக்க சென்னை கோட்டையை வந்தடைந்த அவர், கொண்டுவந்த மனுவைத் தருமாறு அதிகாரிகள் கேட்டபோது, இல்லை! நான் அம்மாவிடம் தான் கொடுப்பேன் என்று கூற, இந்த உரையாடல் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போது, இதனைக் கவனித்த முதலமைச்சர் அவர்கள் மரியாள் இருந்த இடம் நோக்கி வருகிறார். முதலமைச்சர் தம்மை நோக்கி வருவதைக் கவனித்த மரியாள் இருகரம் கூப்பி தன் மனுவை மாண்புமிகு முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கிறார்.

உங்கள் கையில் மனுவைக் கொடுத்தால்தான் தனக்கு முழு மனநிறைவு 'என்று கூறிய மரியாளின் மனுவைப் பெற்றுக் கொண்ட முதலமைச்சர் அவர்கள் மரியாளின் நிலையை நேரில் கண்டதும் உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தர விடுகிறார்.

மனுவைப் பரிசீலித்தவுடன், அவருடைய கல்வித் தகுதியையும் கருத்தில் கொண்டு ஆசிரியப் பணியே சிறந்தது எனமுடிவு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மரியாளுக்கு அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணி வழங்க உத்தரவிட்டு, பணி நியமன ஆணையை செல்வி டி.மரியாளிடம் 25.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கி அந்த ஏழையின் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கிறார்.

சென்னை, எம்.பி.டி. காலனி மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் சமூகவியல் ஆசிரியராக மாணவர்களுக்கு சிறந்த கல்விப் பணி ஆற்றிவரும் மரியாள் தனக்கு வேலைவாய்ப்பு அளித்த மாண்புமிகு முதலமைச்சரை நெஞ்சாரப் பாராட்டினார். மேலும் அவர் கூறுகையில், வயதான தாய் தந்தையோடு வறுமையில் வாழ்கின்ற இந்தச் சூழ்நிலையில் தங்கள் ஏழ்மை நிலையைப் போக்கி, தனக்கு வேலை கொடுத்த முதலமைச்சருக்கு தன் நன்றியை தெரிவித்து, தன் தாய் தந்தையைப் போல தானும் சந்தோஷமடைவதாகக் கூறி ஏழை எளிய மக்களுக்கு அன்போடு உதவிகளை வழங்கி வருகின்ற முதலமைச்சருக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

★ ★ ★

**க**டலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த கிளியனூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் வறுமையான சூழ்நிலையில் வளர்ந்த மாணவர் கலைமணி தனது பெற்றோருக்கு மூன்றாவது மகன். விவசாயக்கூலி வேலை செய்து தமது குழந்தைகளைப் படிக்க வைத்த தந்தை சிவப்பிரகாசமும் தாய் அம்பிகாவும் மகன் கலைமணிக்கு அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்ததும் எல்லையில்லா மகிழ்ச்சி எய்தினார்கள். வசதியில்லாததால் கல்லூரிக் கட்டணம் செலுத்த கையில் பணம் இல்லாத கவலையும் கூடவே வந்தது. அங்கும் இங்கும் அலைந்து முயற்சித்தும், பணம் கிடைக்கவில்லை. அப்போதுதான், தன்னைச் சந்தித்து முறையிடுகின்ற ஏழை, எளிய மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உதவிகள் பல செய்வது அவர்கள் காதில் விழுந்தது. சென்னை வந்து நேரடியாக முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்து தமது நிலையை விளக்கினார்கள். மாணவர் கலைமணியின் கல்வித் தகுதி, ஆர்வம், முயற்சி ஆகியவற்றைக் கண்ட முதலமைச்சர் அவர்கள் கலைமணியின் படிப்புக்காக ரூ.1 இலட்சம் நேரடியாக வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அளித்த பணத்தைக் கொண்டு, மாணவர் கலைமணி, திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து தற்போது விடுதியில் தங்கிப் படித்துவருகிறார்.

தமது மகன் வாழ்வில் ஒளியேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேருதவியை நினைக்கும் போது கலைமணியின் பெற்றோருக்கு ஏற்படும் நன்றிப் பெருக்கைச் சொல்ல வார்த்தைகளில்லை. கலைமணி பிற்காலத்தில் டாக்டராகி ஏழை மக்களுக்கு சேவை செய்ய வழிகாட்டிய முதலமைச்சர் அவர்களுக்கு, சமுதாயத்தில் எந்த விதமான உதவியும், வாய்ப்புமின்றி வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகளின் சார்பிலும், தம் குடும்பத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள் கலைமணியின் பெற்றோர்கள்.

★ ★ ★

**வி**ழுப்புரம் மாவட்டம் மாம்பழப்பட்டு கிராமத்தில் பிறந்து, உள்ளூர் மேனிலைப்பள்ளியில் பயின்று, அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தும் சேர வசதியின்றித் தவித்த, தேர்வு நேரத்தில் தந்தையை இழந்த மாணவன் ஆ.ராஜகுமார், தன் வாழ்வின் பற்றுக்கோலாய் வந்து கிடைத்த பேருதவியை நினைவு கூரும்போது, "நான் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். என் அப்பா, அம்மா கூலிவேலை செய்து என்னைப் படிக்க வைத்தார்கள். நான் பிளஸ் 2 தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றேன். நுழைவுத் தேர்வு எழுதும் போது திடீரென என் தந்தை காலமானார். இருந்தும் மனம் தளராமல் நுழைவுத் தேர்வு எழுதி 90 சதவீதம் பெற்றேன். எனக்கு சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது. கல்லூரிக்கு கட்டணம் செலுத்தப் பணம் இல்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தபோது, இதுமாதிரி கஷ்டப்படுகின்ற மாணவர்களுக்கு முதலமைச்சர் அம்மா உடனடியாக உதவி செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டு நான் என் அம்மாவுடன் சென்று



கொடுத்த 15 நாட்களில் முதலமைச்சர் என்னை அழைத்து வரச் சொன்னதாக அழைத்துச் சென்றார்கள். முதலமைச்சர் அவர்கள் எனக்கு நேரில் மாதம் ரூ.3000 பெறுவதற்கான பென்ஷன் ஆர்டரைக் கொடுத்து விட்டு, இன்னும் ஏதாவது உதவி வேண்டுமா என்று கேட்டார்கள். எனக்குக் கால் வலி அதிகமாக இருக்கிறது என்றேன். உடனே மருத்துவச் செலவுக்கும் நிதியுதவிக்கு ஏற்பாடு செய்தார்கள். இத்தனை வருடங்களாக அலைந்தும் கிடைக்காத பென்ஷனை 15 நாட்களில் கொடுத்ததோடு மட்டுமில்லாமல் என்னை நேரில் வரவழைத்து மரியாதை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். அவர்கள் நல்லா இருக்கணும். இன்னும் என்னை மாதிரி ஏழை ஜனங்களுக்கு உதவி எல்லாம் செய்யணும் என்று வாழ்த்தினார் அந்த மூதாட்டி.

கோட்டையில் 13.7.2001 அன்று மனு கொடுத்தேன். வீட்டுக்கு வந்து ஓரிரு நாட்களில் கலெக்டர் ஆபீஸிலிருந்து தேடி வந்து, முதலமைச்சர் அழைத்துவரச் சொன்னதாகக் கூறி அழைத்துச் சென்றார்கள். சென்னையில் அம்மா என்னுடைய மேற்படிப்புக்காக 18.7.2001 அன்று ரூ.1 இலட்சம் கொடுத்தார்கள். என்னை நன்றாகப் படிக்கவேண்டும் என்று கூறி ஆசீர்வதித்தார்கள். எங்களைப் போல உள்ள ஏழை ஜனங்களுக்கு உதவி செய்து வருகின்ற அம்மாவுக்கு நாங்கள் ரொம்ப நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்" என்று நன்றிப் பெருக்கோடு கூறினார். கணவரைப் பிரிந்த துக்கத்திலும் மகன் டாக்டராகப் போகின்ற செய்தி அளித்த மகிழ்ச்சியும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய நிதியுதவியும், ஊக்கமும் ஏற்படுத்திய நன்றிப்பெருக்கும் நிரம்ப மாணவர் ராஜ்குமாரின் தாயார் தனலட்சுமி பெருமை பொங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறினார்.

★ ★ ★

**வி**ழுப்புரம் மாவட்டம் திருமங்கலம் – மதுரா புதுக்குப்பம் கிராமத்தில் வசிக்கின்ற சுதந்திரப் போராட்ட வீராங்கனை திருமதி க.ஜானகி மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செய்த உதவியை நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்ந்து கூறியது. "எனது கணவர் திரு ஆர்.கவிராஜன் அவர்களும் சுதந்திரப் போராட்டத் தியாகி. அவர் 1972–லிருந்து தியாகிகள் பென்ஷன் பெற்றுவருகிறார். நான் என் கணவருடன் பல போராட்டங்களில் ஈடுபட்டுள்ளேன். அப்போது மகாத்மா காந்தியைச் சந்தித்திருக்கிறேன். எனக்கு தியாகிகள் பென்ஷன் கேட்டு 1983–இல் மனுக்கொடுத்து அதிலிருந்து இத்தனை வருடங்களாக அலைந்தும் ஓய்வூதியம் கிடைக்கவில்லை. கடைசியாக, மாண்புமிகு முதலமைச்சரிடம் நேரில் ஒரு மனு கொடுத்தேன்.மனு

★ ★ ★

**வி**ழுப்புரம் மாவட்டம் ராம்பாக்கம் கிராமத்தில் வசித்துவரும் சுதந்திரப் போராட்ட வீரர் திரு. சி.கிருஷ்ணசாமி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது மனுவைப் பரிவுடன் ஏற்றுக் கொண்டு 1983–லிருந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும் கிடைக்காத தியாகிகள் பென்ஷனைத் தனக்கு வழங்கியதை பெரிய கௌரவமாகக் கருதுவதாகக் கூறினார். 1941–ஆம் ஆண்டு தனிப்பட்ட சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு, பிரிட்டிஷாருக்கு படைக்கு ஆள் அனுப்பக்கூடாது என்று போராட்டத்தில் ஈடுபட்டதால், சுதந்திரத்திற்குப் பின் தியாகிகள் பென்ஷன் கோரி விண்ணப்பிக்கவில்லை. நெடுநாள் கழித்து 1983–இல் தான் மனுச் செய்ததாகவும், அதற்குப் பிறகும் பென்ஷன் வர இத்தனை ஆண்டுகள் ஆயின என்றும் கூறியவர், மாண்புமிகு முதலமைச்சர் நேரடியாக தனது மனுவைப் பரிசீலித்ததால் தனக்கு பென்ஷன் கிடைத்திருப்பதாகக் கூறி மகிழ்கிறார்.

தமக்குரிய அங்கீகாரமும், உதவியும் கிடைக்காமல் இருக்கும் தன்னைப் போன்ற சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் செய்கின்ற உதவி பெரிதும் பாராட்டப்பட வேண்டியது என்று கூறி தனது நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்.

★ ★ ★

# வாழ்க்கை முறையை மாற்றினால் மாரடைப்பு வராமல் தடுக்கலாம்

முதன்மை ஆட்கொல்லி நோயான மாரடைப்பு நோயானது ஐரோப்பியர்களுக்கும், அமெரிக்க நாட்டவர்களுக்கும் ஏற்படுவதைப் போல நான்கு மடங்கும் ஜப்பானியர்களுக்கு ஏற்படுவதைப் போன்று இருபது மடங்கும் இந்தியர்களுக்கு ஏற்படுகிறது.

ஒவ்வோராண்டும் ஒன்றரைக் கோடி முதல் இரண்டு கோடி இந்தியர்கள் மாரடைப்பு நோயினால் துன்புறுகின்றனர். இவற்றில் 30 சதவீதத்தினருக்கு சில நிமிடங்களிலே திடீரென மரணம் ஏற்படுகிறது. இந்த மாரடைப்பு நோய் இந்திய மக்களில் 40 வயதுக்கு முன்னரே முக்கியமாக 30 வயதிலும் ஏற்படுகிறது. இது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

## இதய நோய்க்கான காரணங்கள்

மன உளைச்சல் மற்றும் மன அழுத்தம் போட்டியிட்டு வெல்ல வேண்டும் எனும் பேராவல் கொண்ட மனப்பாங்குடையவர்கள், சுற்றியுள்ளவர்களுடன் தொடர்ந்து போராடும் நிலையில் உள்ளவர்கள் ஆகியோருக்கு ஏற்படும்.

புகைபிடித்தல் மாரடைப்பிற்குள்ளாகும் வாய்ப்பு மற்றவர்களுக்கு ஐந்து மடங்கு அதிகம் உள்ளது. அண்மைக் காலமாக இந்தியாவில் புகைபிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருகிறது. ஆனால் உலகில் எஞ்சியுள்ள பகுதியில் இது குறைந்து வருகிறது.



இரத்தத்தில் கொழுப்புச் சத்து சேர்வது 4 வகையாக உள்ளது. அதாவது, மொத்தக் கொழுப்புச் சத்து, டிரைகிளிசிரைட்ஸ், எல்டிஎல் மற்றும் எச்டிஎல் முதல் மூன்று வகையான கொழுப்புச் சத்து உயர்வு இதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாயில் அடைப்பு ஏற்படுத்துவதாகும்.

ஆனால் எச்டிஎல் (நற்பயன் தரும் கொலஸ்டிரால்) உயர்வது மார்பு அடைப்பைக் குறைக்கிறது. கல்லீரலில் இருந்து தயாரிக்கப்படும் கொலஸ்ட்ரால் என்னும் மாரடைப்பு நோய்க்கூறு மனஅழுத்தம், புகைபிடித்தல் மற்றும் மதுப்பழக்கத்தால் அதிகரித்து விடுகிறது.

உயர் இரத்த அழுத்தம் - 140/90 mmHg க்கு அதிகமாக இருப்பது.

டயாபடிஸ் (சர்க்கரை நோய்) மெல்லிடஸ் - ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரித்தல்.

உடற்பருமன் (தொந்தி) குறிப்பாக வயிற்றுப் பகுதி - ஆப்பிள் வடிவான தொந்தி.

அலுவலகத்தில் உட்கார்ந்து பணிபுரியும் வாழ்க்கை முறையும், மரபும் கொலஸ்டிரால் சேர்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அபாயகரமான பழக்கங்கள் ஒவ்வொன்றும் இதய நோயை 2 முதல் 3 மடங்காக அதிகரிக்கின்றன.

அவை ஒன்று சேரும்போது, நோயின் அபாயத்தைப் பன்மடங்காக உயர்த்துகின்றன.

என்னிடம் வந்த நோயாளிகளில் பொறியியல் பட்டதாரி ஒருவர், (வயது 23) கடுமையான மாரடைப்பால் பாதிக்கப்பட்டார். புகைபிடித்தல் மற்றும் குடும்பப் பிரச்சினை ஆகியவை காரணமாக மாரடைப்பால் பாதிக்கப்பட்டார். இத்தகைய போக்கு தற்போது பெருகிக் கொண்டே வருகிறது. இதைத் தடுக்க தடுப்பு நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்.


மாரடைப்புத் தொடக்க நிலையிலேயே தடுத்தல் என்பது முதல் கட்டம். பின்னால் அபாயகரமான நிலைக்குக் கொண்டு செல்லும் அளவுக்குப் போய்விடக் கூடிய பழக்கங்களை முதலிருந்தே தடுத்தல் வேண்டும்.



முதல் முறை ஏற்படுவதைத் தடுத்தல் : நெஞ்சுப்பைச் சுவரின் தசைக்கு குருதி வழங்குவது தடைப்படும்போது மாரடைப்பு நோய் ஏற்படுவதால் இதற்கு கடுமையான பணிகளை குறைக்க வேண்டும். மேலும் மாரடைப்பு நோய் தொடர்ந்து ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

இந்நோய் முதல்முறை ஏற்படுவதையும், இரண்டாம் முறை எற்படுவதையும் தடுத்தல் தொடர்பாக மேற் கொள்ளும் வாழ்க்கை முறை மாறுதல்கள் தொடர்பான செயல்முறைகள் பெரும் பலனை ஏற்படுத்தும்.

எப்போதும் மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் வாழ முற்படவேண்டும்.



பணிபுரியும் போது புத்துணர்வு பெறச் சிறிது ஓய்வு எடுக்க வேண்டும்.

தானும், தன்னைச் சுற்றியுள்ளவர்களும் அமைதியான வாழ்க்கை வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

### புகை பிடித்தல் ஆபத்து

எந்த முறையிலும் சரி புகை பிடிக்கும் பழக்கத்தை உடனே நிறுத்த வேண்டும். அதனை நிலையாக விட்டுவிட வேண்டும். அறவே விட்டொழிக்க வேண்டும். அது மிகவும் முக்கியமானதாகும்.


### மருத்துவப் பரிசோதனை

30 வயதை அடைந்தவுடன், அனைவரும் இரத்தத்தில் அதிக அளவு கொழுப்பு உள்ளதா, இரத்தத்தில் அளவுக்கு மேல் சர்க்கரை உள்ளதா, உயர் ரத்த கொதிப்பு உள்ளதா என்பதை மருத்துவப் பரிசோதனை மூலம் அறிய வேண்டும். முறையாக உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, எடைக்குறைப்பு ஆகியவற்றின் மூலம் இந்நோய்களைக் கட்டுப்படுத்த இயலாத ஒரு சிலருக்கு மட்டுமே மருந்துகள் மூலம் சிகிச்சை அளிப்பது அவசியமாகிறது.

### உடற்பயிற்சி :

சுறுசுறுப்பான நடைப்பயிற்சி, மிதிவண்டி ஓட்டுதல், நீச்சல் போன்ற திறந்தவெளி உடற்பயிற்சி செய்வதால் ஏற்படும் படிப்படியான பயன்கள் பின்வருமாறு :

- உள்ளத்திற்கு புத்துணர்வு
- உடல்நிலை நன்றாக இருப்பதாக உணர்தல்
- எச்.டி.எல். இரத்தத்தில் கொழுப்பு அதிகரிக்கிறது மற்றும் மொத்த கொழுப்பு அளவு எல்.டி.எல்., ட்ரைகிளிரைட்ஸ் அளவை குறைக்கிறது.
- உடற்பருமன் அதிகரித்தல், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகிறது.
- இதயத்தின் தசைக்குக் குருதி வழங்கும் நாடியின் இடையிலும், உட்புறத்திலும் இயற்கையாகவே சீராகப் பாய உதவுகிறது.



சில யோகாசனப் பயிற்சிகள், தியானம், மனஅழுத்தத்திலிருந்து விடுபடச் செய்கிற சிகிச்சை, ஆஞ்சியோ பிளாஸ்டி மற்றும் ஸ்டென்டிங் போன்ற இரத்த ஓட்டத்தை சீராக்கும் சிகிச்சை நடைமுறைகள் அனைத்தும் இதய நோய்க்கு தற்காலிக நிவாரணம் மட்டுமே அளிக்கின்றன.

முதல் நிலையிலேயே மாரடைப்பைத் தடுப்பது, வாழ்வியல் முறையை மாற்றியமைத்துக் கொள்வதன் நோக்கமாகும். இரண்டாவது முறையாக மாரடைப்பு ஏற்படுவதைக் கட்டுப் படுத்தவும், தடுத்து நிறுத்தவும் இது உதவுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் டீனஆர்னிஷ் சமீபத்திய ஆய்வுகளும், என்னுடைய சொந்த அனுபவங்களும் இவை 6 மாதங்களிலிருந்து 1 ஆண்டுக்கு மாரடைப்பைக் குறைப்பதற்கு வழிகோலு கின்றன.

முடிவாக இதய நோயில் தொடக்கநிலை, இரண்டாவது நிலை என்பதின் முக்கிய அம்சம் நோய்த் தடுப்புப் பணியில் வாழ்வியல் முறையை மாற்றிக் கொள்வது மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. ●

Veppolodai Chemicals

*Manufacturers & Exporters of*
**"Sprinkle" Iodised Free Flow Salt and Iodised Crystal Salt**

☎ 323301
321491
327600


13-A/1, Pillaiyar Koil Street,
Meenakshipuram West,
Tuticorin - 628 002.

Grams : Sahayam
Fax : 0461-321650

# இரும்பும் எஃகும்

**வா**ழ்க்கையில் நமக்கு மிகவும் பயன்படுவது இரும்பு. ஊசி, ஆணி முதலியவற்றைச் செய்ய இரும்பு வேண்டும். அதைப்போலவே பெரிய பெரிய கட்டடங்கள் கட்டுவதற்கும், எந்திரங்கள் செய்வதற்கும் இரும்பு வேண்டும். உலோகங்களில் மிகவும் அதிகமாகக் கிடைப்பது இரும்பு தான்.

இரும்பு மிகவும் கடினமானது, எளிதில் தேயாது. இரும்புடன் தேவையான அளவு கரியைச் (கார்பன்) சேர்ப்பதால் எஃகு கிடைக்கும். எஃகு இரும்பைவிடப் பல மடங்கு கடினமானது: உறுதியானது. இது எளிதில் துருப் பிடிக்காது. எஃகுக்கு உருக்கு என்று பெயர்.



இரும்பு ஒரு தனிமம். சுரங்கங்களில் இரும்பு தனியாகக் கிடைப்பதில்லை. இதன் ஆக்சைடு,மண்,கல் போன்ற வற்றுடன் கலந்தே காணப்படுகின்றது. இந்தக் கலப்புப் பொருளுக்கு இரும்புத் தாது என்று பெயர். இரும்புத் தாதுக்களில் பலவகை உண்டு. ஹேமட்டைட்டு, மாக்னட்டைட்டு என்பவை அவற்றுள் சில. பெரும்பாலும் இவற்றிலிருந்துதான் இரும்பைப் பிரித்து எடுக்கின்றார்கள்.

இரும்பைத் தாதுவிலிருந்து பிரித்தெடுக்க உதவும் உலைக்கு ஊது உலை என்று பெயர். ஊதுலைகள் மிகவும் பெரியவை. சில 100 அடி உயரமும் இருப்பதுண்டு. ஊதுலைச் சுவர்களின் உட்புறத்தைத் தீச்செங்கற்களால் பாவியிருப்பார்கள். இந்தச் செங்கற்கள் மிகுந்த வெப்பத்தைத் தாங்கக் கூடிய தீக்களி மண்ணால் ஆனவை. இச்சுவர்களின் வெளிப்புறத்தின்மேல் கனத்த எஃகுத் தகடு அடித்திருப்பார்கள்.

இரும்புத் தாது, சுண்ணாம்புக் கற்கள், கரி இவற்றைக் கலந்து ஊதுலையில் கொட்டுவார்கள். உலையின் அடியிலுள்ள குழாய்களின் மூலம் மிகவும் வெப்பமான காற்றை உலைக்குள் செலுத்தி எரிப்பார்கள். உலையை எரிக்க நிலக்கரி, மண்ணெண்ணெய், மின்சக்தி இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துவதுண்டு. உலையில் சூடு ஏற ஏற இரும்புத் தாது உருகத் தொடங்கும். தாதுவில் கலந்துள்ள ஆக்சிஜன் கரியுடன் கலந்து கார்பன்–டை – ஆக்சைடாக மாறி வெளியேறி விடுகின்றது. தாதுவிலிருந்து அசுத்தம் சுண்ணாம்புடன் கூடிக் கசடாகப் பிரிந்து தேங்குகின்றது. நன்றாக உருகிய இரும்புக் குழம்பு இக்கசட்டின் கீழ்த் தங்கும்.

உலையின் அடியில் உள்ள குழாய்களின் மூலம் இக்குழம்பை அடிக்கடி வடித்துக் கொள்ளுவார்கள். இக்குழம்பு தகதகவென்று மின்னும்: இதன் ஒளி கண்ணைப் பறிக்கும். இரும்புக் குழம்பு ஆறினவுடனே கருப்பாகிவிடும்: கடினமாகவும் மாறிவிடும். இந்த இரும்பையும் சுத்தமானதென்று கூற முடியாது. மிகவும் சுத்தமான இரும்பைப் பெறுவது எளிதன்று. இரும்பில் மூன்று வகைகள் உள. வார்ப்பிரும்பு, தேனிரும்பு ,எஃகு என்பன அவை.

★ ★ ★


(சென்ற இதழ் தொடர்ச்சி)

# தமிழ் வளர்த்த சங்கம்

அடுத்துத் தமிழ் வளர்த்த சங்கம் எத்தனை, ஒன்றா, மூன்றா என்பதை ஆய்வோம். கபாடபுரம் பாண்டியனுடைய தலை நகராய் இருந்து பிறகு தென்மதுரை தலைநகராக மாறியதற்கு இராமாயணம், மகாபாரதம், கௌல்டியரின் அர்த்த சாத்திரம் ஆகிய நூல்களில் சான்றுகள் கிடைக்கின்றன. கன்னியாகுமரிக்குத் தெற்கில் துறைமுகம் ஒன்று இருந்ததாகப் பிளினி கூறுகின்றார். 'மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வெளவலின், மெலிவு இன்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப் புலியொடு வில்நீக்கிப் புகழ் பொறித்த தென்னவன்' என்று முல்லைக் கலியிலும், 'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ளை, வடதிசைக் கங்கையுங் இமயமுங் கொண்டு தென்றிசை யாண்ட தென்னவன்' என்று சிலப்பதிகாரத்திலும் இதைப்பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. இவற்றின் அடிப்படையில் நோக்கின் வடமதுரையானது பாண்டி நாட்டின் தலைநகராவதற்கு முன்பு பாண்டியர்கள் அதற்குத் தென்பால் கபாடபுரத்தில் அமர்ந்தும், அதற்கும் முன்பு, மேலும் தெற்கில் அமைந்திருந்த தென்மதுரையிலிருந்தும் ஆட்சி புரிந்து வந்தனர் என்ற வரலாறு உண்மை என்பது உறுதியாகின்றது.

தென்மதுரை ஒன்று செயற்பட்டு வந்ததற்குப் புறச்சான்று வேறொன்றும் உண்டு. இலங்கையின் வரலாற்றைக் கூறும் 'மகாவமிசம்' என்னும் நூலில் அந்நகரம் குறிப்பிடப் படுகின்றது. விஜயன் என்னும் மன்னனும் அவன் தோழர்களும் அங்கிருந்துதான் தமக்கு மணப்பெண்கள் தேடிப் பெற்றனராம். சிங்கள மொழியில் கி.பி.14ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட 'சத் தர்மாலங்கார்ம் ' என்னும் நூலிலும் 'தட்சிண மதுரான்' என்ற ஒரு குறிப்புக் காணப்படுகின்றது

பாண்டி நாட்டின் தலைநகரம் இருமுறை மாற்றப்பட்டிருப்பினும், மாறியமைந்த நகரங்களில் மீண்டும் மீண்டும் தமிழ்ச் சங்கம் ஒன்றைப் புதிதாக நிறுவியதன் காரணம் காண இயலாது. எனினும் செவிவழிச் செய்திகளும், தமிழ் இலக்கியங்களில் காணக் கிடைக்கும் அகச்சான்றுகளும் மூன்று சங்கங்கள் இயங்கி வந்த செய்தியை உறுதிப் படுத்துகின்றன. தொல்காப்பியர் இரண்டாம் சங்கக் காலத்தில் வாழ்ந்தவர். தொல்காப்பியத்தில் பல நூற்பாக்களில் 'என்ப, 'மொழிப', 'என்மனார் புலவர்', 'பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை' என்று கூறித் தமக்கு முற்பட்டிருந்த இலக்கண ஆசிரியர்களின் முடிபுகளின் மேல் தொல்காப்பியனார் தம் முடிபுகளைச் சார்புறுத்து கின்றார். எனவே, தொல்காப்பியத்துக்கு முன்பு இலக்கண நூல்கள் வழங்கி வந்திருக்க வேண்டு மென்றும் அவ்விலக்கணங்கள் தோன்றுவதற்குக் காரணமாக உயர்வகை இலக்கியம் தமிழ் மொழியில் பெருகியிருக்க வேண்டுமென்றும் கொள்ளுவது தான் பொருத்தமாகும். இவ்விலக்கியப் படைப்புகள் யாவும் முதற் சங்க காலத்திலோ, அன்றி அதற்கு முன்போ, பின்போ தோன்றியிருக்க வேண்டும். எனவே, கடைச் சங்கத்துக்கு முன்பு இரு சங்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இயங்கி வந்தன என்பதைத் திட்டமாக மறுக்கவே முடியாது. ஆனால், இச்சங்கங்கள் ஒவ்வொன்றும் பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்து நடைபெற்று வந்தன என்பதையும் ஒவ்வொன்றுக்கும் இடையில் இத்தனை யாண்டுகள் ஓடின என்பதையும் தக்க சான்றுகள் இன்றி ஒப்புக் கொள்ளுதல் ஆராய்ச்சி முறைக்கே முரண்பாடாகும்.



மூன்றாம் சங்கம் எப்போது கூடிற்று, எத்தனை யாண்டுகள் செயற்பட்டு வந்தது என்னும் கேள்விகளுக்கு உடன்பாடான விடை இன்னும் ஆய்வாளரிட மிருந்து வரவில்லை. மூன்றாம் சங்கத்தின் காலம் கி.மு.500 முதல் கி.பி.500 வரை

நடந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் பலவாறு கருதி வந்துள்ளனர். சிலர் இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கடைச்சங்கம் நடைபெற்றது என்றும் கூறுவர். பரிபாடலிலும் சிலப்பதி காரத்திலும் காணப்படும் சில நிகழ்ச்சிகளைக் கொண்டு வானவியல் கணிப்பின்படி கணக்கிட்டுக் கடைச் சங்கம் நடைபெற்ற காலம் கி.பி.7 அல்லது 8-ஆம் நூற்றாண்டாகத்தான் இருக்க வேண்டுமென்று எல்.டி.சுவாமிக்கண்ணு பிள்ளை யவர்கள் கூறுவார். அந்நூல்களில் கொடுக்கப் பட்டுள்ள காலக் குறிப்புகளைத் திருத்தமாக கணித்தறிவதற்குத் தேவையான குறிப்புகள் அவற்றுள் கிடைக்கவில்லையாகலான் அவருடைய முடிவை ஏற்றுக்கொள்ள வியலாது.

சமுத்திரகுப்தர் காலத்திய தூண் ஒன்று அலகாபாத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. அதன்மேல் காணப்படும் கல்வெட்டில் 'மந்தராஜா' என்னும் சொல் சேர்ந்துள்ளது. சில ஆய்வாளர் இந்த மந்தராஜாவே சங்க கால மன்னன் 'மாந்தரஞ்சேரல்' ஆவன் என்று கூறுகின்றனர். வெறும் பெயர்மட்டுங் கொண்டே எதையும் துணியலாகாது, சமுத்திர குப்தர் கி.பி.4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவருடைய உடன் காலத்தவர் மாந்தரஞ்சேரல் என்று கொள்ளுவதற்குச் சான்றுகள் இல. சேர நாட்டின்மேல் சமுத்திரகுப்தர் படையெடுத் ததாகத் திட்டமாகத் தெரியவில்லை. மணி மேகலையில் 'குச்சரக்குடிகை', குச்சரக்குடிகைக் குமரியை மரீஇ' என்னும் சொற்கள் வருகின்றன. அவை கூர்ச்சரம் என்னும் நாட்டைக் குறிக்கின்றன என்றும், கூர்ச்சரர் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும், சங்க இலக்கியம்அவர்கள் காலத்திற்றான் எழுந்தது என்றும் மு.இராகவையங்கார் உரைப்பார். இச்சான்றும் சொல் ஒற்றுமையின் அடிப்படையிற்றான் நிறுவப்பட்டுள்ள தாகையால் இஃதும் ஏற்புடையதாக இல்லை. இந்திய அரசாங்கத்தின் புதைபொருளாய்வு இயக்குநரான டாக்டர் என்.பி.சக்கரவர்த்தியவர்களும், இராகவையங்கார் முடிவை ஒப்புக் கொள்ளுகின்றார். தமிழகத்தில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகள் யாவும் கி.மு. மூன்று, இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இப்பிராமி எழுத்துகள் வளர்ச்சியுற்றிராத நிலையில் காணப்படுகின்றன. ஆகையால், நன்கு வளர்ந்து இலக்கிய இலக்கண வளம் செறிந்து விளங்கும் சங்க நூல்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பு தோன்றியிருக்க முடியாது என்பது டாக்டர் என்.பி.சக்கரவர்த்தியவர்களின் கருத்தாகும். கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளும், சொற்களும் இலக்கண அமைதி யில்லாதவை என்பதும், கல்வியறிவில்லாதவர்கள் செதுக்கியவை என்பதும் அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். இவற்றை நோக்கி இவை பொறிக்கப்பட்ட காலத்திய தமிழின் தரத்தை ஆய்ந்தறிவது தவறாகும். இந்தப் பிராமிக் கல்வெட்டுகள் யாவும் சமணத் துறவிகளுக்கும், பௌத்த பிக்குகளுக்கும் குகைப் பள்ளிகள் அளந்தளிக்கப்பட்ட செய்திகளையே குறிப்பிடுகின்றன. இலக்கியத் தமிழுக்கும் இக் கல்வெட்டு மொழிக்கும் தொடர் பேதுமில்லை. ஒரு காலத்தில் செதுக்கப்பட்ட கல்வெட்டு மொழியைக் கொண்டு அக்காலத்தில் வழங்கி வந்த மொழியின் வளத்தை அளந்தறிதல் ஆய்வு முறைக்கு எலாது. ஒரு மொழியின் பழைய வடிவத்தைக் கொண்டும் மக்கள் பேச்சு வழக்கைக் கொண்டும் அம்மொழியின் வளர்ச்சியை அளந்தறிய முடியாது.

எஃது எப்படியாயினும் இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை போன்ற கேரள ஆசிரியர்கள் சங்க இலக்கியத்தைக் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு ஒதுக்குவது சாலப் பொருத்தமற்றது என்று அறிதல் அரிதன்று. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி.630-600) காலத்தில் விளங்கியவர்கள். அவர்கள் பாடிய தேவாரப் பாடல்களில் யாக்கப்பட்டுள்ள சொற்கள் எளியவை; இக்காலத்துச் சொற்களுக்குற்ற இலக்கண விதியும், சொல்லமைப்பும், பொருளமைப்பும் ஏற்றுள்ளவை. சங்கத் தமிழ்ச் சொற்களுக்கும் அவற்றுக்குமிடையே ஆழ்ந்த வேறுபாடு உண்டு. சங்கத் தமிழ்ச் சொற்களில் பல வழக்கொழிந்தன. பல பொருள் மாறுபட்டுள்ளன. பல முற்றிலுமே உருமாற்றம் எய்தியுள்ளன. பலசொற்கள் பழைய இலக்கண விதிகட்குட் பட்டுள்ளன. எனவே, சங்கத் தமிழ் தொடர்ந்து ஆறாம் நூற்றாண்டு வரையில் வழங்கி வந்திருக்குமாயின், அது தன் வழக்கு மாறி, அடுத்த நூற்றாண்டிலேயே திடீரென்று தேவாரத் தமிழாக வளர்ந்து மாற்றமெய்திருக்க முடியாது. இலக்கண அமைதியிலோ, சொல்லமைப்பிலோ, பொருள் கூட்டிலோ தேவாரத் தமிழுக்கு ஒப்பானதொரு மொழி வடிவத்தை எட்டுத் தொகை, பத்துப்பாட்டுப் பாடல்கள் ஒன்றிலேனும் காணவியலாது. மேலும், தேவாரப் பாடல்களில் தமிழ்ச் சங்கத்தைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. திருஞான சம்பந்தர் தம் திருவாலவாய்த் திருப்பதிகத்தில் 'கூடல் ஆலவாய்' என்று குறிப்பிடுகின்றார். 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறிநற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன்...' என்று திருநாவுக்கரசரும் பாடியுள்ளார். ஆகவே, இவ்விரு சமய குரவரும் சங்க காலத்துக்குப் பிற்பட்டவர்கள் என்பது திண்ணம். மாணிக்கவாசகர் கி.பி.792 முதல் 835 வரை அரசாண்ட வரகுண பாண்டியனின் உடன் காலத்தவர். அவர் தம்முடைய திருக்கோவையாரில் 'வான் உயர் மதில்கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்...' என்று சங்கம் வளர்த்த தமிழைப் பாராட்டுகின்றார். கூடல் என்ற பெயர் வாய்ந்த ஒரு நகரத்தில் அமர்ந்து

தமிழாய்ந்த புலவர்கள் மதுரமான பாடல்களைப் பாடினராதலின் அந்நகரத்துக்கு மதுரை என்றொரு பெயர் வந்தது. இவ்வினிய பெயரே பிற்பாடு வழக்கில் நின்று விட்டதால் சொல் வழக்கில் கூடல் என்னும் பெயர் மறைந்து இலக்கியத்தில் மட்டும் காணப்படுகின்றது. முதல் எட்டுச் சைவகத் திருமுறை ஆசிரியர்கள் கூடலைப் பற்றித் தம் பாடல்களில் குறிப்பிட்டிருக்கின்றன. ஆகையால் கூடல் அல்லது சங்கம் அவர்களுடைய காலத்துக்குச் சில நூறு ஆண்டுகளுக்கு முன்பே நடைபெற்று மறைந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.



சங்க இலக்கியங்கள் கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவையல்ல என்பதற்கு அவ்விலக்கியங்களிலேயே அகச் சான்றுகள் கிடைக்கின்றன. சிங்களத்து மன்னனான கயவாகுவும் சேரன் செங்குட்டுவனும் உடன் காலத்தவர் என்பதற்குச் சிலப்பதிகாரம் சான்று பகர்கின்றது. இதைக்கொண்டு சேரன் செங்குட்டுவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் விளங்கியவன் என அறிகின்றோம். காலத்தால் இம்மன்னனுக்கு முற்பட்ட சேர மன்னரைப் பற்றியும் பல பாடல்கள் சங்க இலக்கியத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. ஆகையால், சங்கப் பாடல்கள் பல கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. கிரீஸ், ரோம் ஆகிய ஐரோப்பிய நாடுகளுடன் பண்டைய தமிழகம் கொண்டிருந்த வாணிகத்தைப் பற்றி அகநானூறு, புறநானூறு, பட்டினப் பாலை ஆகியவையும், சற்றே பிற்காலத்து எழுந்த இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பல செய்திகளைக் கொண்டு மிளிர்கின்றன. '...யவனர் தந்த வினைமாண் நன்கலம் பொன்னொட வந்து கறியொடு பெயரும்...' என்றும் 'யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல் பொன்செய் புனை கலத்து ஏந்தி, நாளும் ஒண்தொடி மகளிர் மடுப்ப...' என்றும், நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்...' என்றும், 'கலந்தரு திருவின் புலம் பெயர் மாக்கள் கலந்திருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்...' என்றும், 'யவ்னத் தச்சரும் தண்தமிழ் வினைஞர் தம்மொடுங் கூடி...' என்றும், இன்னும் பலவாறாகவும் தமிழர் யவனர் தொடர்பு பாராட்டப்பட்டுள்ளது. ஆதியில் யவனர் என்னும் சொல் கிரேக்கரையே சுட்டி நின்றது; பிறகு ரோமரையும், அடுத்து அயர்நாட்டினர் அனைவரையுமே அது குறிப்பிடலாயிற்று. தமிழர்-யவனர் வாணிகத் தொடர்பை இலக்கிய அகச்சான்றுகளும், கி.பி.1, 2-ஆம் நூற்றாண்டு களில் வாழ்ந்தவர்களான கிரேக்க, ரோம நூலாசிரியர் சிலரின் நூல்களும் மெய்ப்பிக்கின்றன. ஆர்மஸ் துறைமுகத்திலிருந்து இந்தியாவுக்குச் சுமார் நூற்றிருபது மரக்கலங்கள் பாய்விரித்தோடியதையும், அகஸ்டஸ் பேரரசின் அரசவைக்குப் பாண்டி நாட்டுத் தூதுவர் இருவர் சென்றிருந்ததையும் ஸ்டிராபோ தெரிவிக்கின்றார். 'எரித்திரியக் கடலின்பெரிப்ளூஸ்' என்னும் நூலின் ஆசிரியரும், பிளினியும் கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். அடுத்த நூற்றாண்டில் விளங்கியவர் தாலமி என்பார். தமிழகத்துத் துறைமுகப் பட்டினங்களைப் பற்றியும், மேலைநாடுகளுடன் தமிழகம் மேற்கொண்டிருந்த கடல் வாணிகத்தைப் பற்றியும் இவ்வயல்நாட்டு ஆசிரியர்கள் தத்தம் நூல்களில் விரிவாய் எடுத்துரைக்கின்றார்கள். இவர்கள் அளிக்கும் வரலாற்றுக் குறிப்புகளும், சங்க இலக்கியத்தில் காணப்படும் யவனரைப் பற்றிய செய்திகளும் இயைந்து காண்கின்றன வாதலால் பல சங்கப் பாடல்கள் கடல் வாணிகம்

செழித்தோங்கியிருந்த காலத்தில் பாடப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகின்றது. தமிழகத்தில் ஆங்காங்கு அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்துவரும் ரோமாபுரி நாணயங்களைக் கொண்ட ரோமரின் வாணிகத் தொடர்பானது உன்னத நிலையை எட்டியிருந்த காலத்தைக் கணித்தறியலாம். தமிழகத்தில் மிகவும் அதிகமாகக் கிடைப்பவை, அகஸ்டஸ், டைபீரியஸ் ஆகிய ரோமாபுரிப் பேரரசின் நாணயங்களேயாம்.

அரிக்கமேட்டுப் புதைபொருள்களானவை தமிழகத்துக்கும் ரோமாபுரிக்கும் இடையிட்ட கடல் வாணிகத்தின் விரிவையும் வளத்தையும் நமக்குப் பெரிதும் விளக்கிக் காட்டுகின்றன. புதுச்சேரிக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு மண் மேட்டுக்கு அரிக்கமேடு என்று பெயர். அது அரியாங் குப்பத்தாற்றை யணைந்தவாறு அமைந்துள்ளது. இம்மேட்டை யகழ்ந்தெடுத்து வியக்கத்தக்க 'செய்திகளைப் புதைபொருள் ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இவ்விடத்தில் சோழ நாட்டின் மிகவும் சிறப்பானதொரு துறைமுகம் அமைக்கப் பட்டிருந்தது. புதுச்சேரியை யவனர்கள் அக்காலத்தில் பொதுகை என்று பெயரிட்டழைத்தனர். கிறித்து ஆண்டின் தொடக்க காலத்தில் பொதுகை யவனர் ஈண்டி வாழ்ந்த மாபெரும் சேரியாகக் காட்சியளித்தது. சுட்ட செங்கல்லால் கட்டப்பெற்ற பந்தர்கள் என்னும் கடல் வாணிகப் பண்டசாலைகள், சாயத் தொட்டிகள், கண்ணாடி, பளிங்கு, பவழம், பொன் ஆகியவற்றால் ஆக்கப்பெற்ற மணிவகைகள், பல உருவங்களில் கல்லிழைத்த பதக்கங்கள் ஆகியவை அரிக்கமேட்டில் கிடைத் துள்ளன. தமிழகத்து நுண்கலிங்கங்கள் அயல் நாட்டுக்கு ஏற்றுமதியாகு முன் இங்குத் தான் வண்ணமூட்டப்பெற்றன. ரோமாபுரியிலிருந்து பல வகையான மண்பாண்டங்கள் இறக்குமதியாயின. அத்தகைய பாண்டங்கள் இங்கும் வனையப்பட்டன. அரிக்கமேட்டில் காணப்படும் மண்கல ஓடுகள் யாவும் இத்தாலியில் அரிஸ்ஸோ என்ற நகரத்துக் குயவர்கள் வனைந்து தம் வாணிக முத்திரைகளைப் பதித்து அனுப்புவித்த **அரிட்டைன்** என்ற பானை சட்டி வகைகளின் ஓடுகளாம். யவனர் இரட்டைப் பிடிகொண்ட ஒரு வகை மதுச்சாடிகளில் (Amphorae) உயர்வகைத் 'தண்கமழ் தேறல்' களைக் கொண்டுவந்து தமிழகத்தில் இறக்கினர். அவற்றுக் கீடாகத் தமிழகத்து மிளகு, இலவங்கம், கலிங்கம் முதலியவற்றை ஏற்றிக்கொண்டு சென்றனர். அத்தகைய இரட்டைப்பிடி மதுச்சாடிகளின் சிதைவுகளும், கண்ணாடியாலான மதுக் கிண்ணங்களும் அரிக்க மேட்டில் கிடைக்கின்றன. தமிழகத்தில் அறுக்கப்பட்ட சங்கு வளையல்களும், பலவகையான அணிகலன்களும் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழர் நாகரிகத்தின் தொன்மையை விளக்கும் இப் பொருள்கள் யாவும் தமிழர் தேடிக் கொண்டிருக்கும் சான்றுகளில் மிகவும் சிறந்தவையும், பயனுள்ளவையுமாகும். 'அரிட்டைன்' சட்டி வகைகளும், இரட்டைப்பிடி மதுச்சாடிகளும் ரோமாபுரியிலிருந்து கி.பி.20-50 ஆண்டுகளில் தமிழகத்தில் இறக்குமதியாகி யிருக்கக் கூடும் என்று டாக்டர் மார்ட்டிமர் வீலர் என்னும் புதைபொருள் ஆய்வாளர் கருதுகின்றார். இந்த யவனச் சேரி கி.மு. முதல் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கைவிடப் பட்டிருக்க வேண்டும். எப்படியாயினும் இச் சேரி கி.பி. இரண்டாம் நூற்றாண்டு இறுதிக்குள் பாழடைந்து போயிற்று. கிறித்துவ அப்தத்தின் முதல் இரு நூற்றாண்டுகளில் அரிக்கமேட்டுக் கடல் வாணிகம் மிகவும் உயர்ந்த நிலையில் செழிப்புற்று விளங்கியது. சங்கச் செய்யுள்கள் தரும் செய்திகளுக்கும், அகழ்வாராய்ச்சியில் வெளியாகியுள்ள புறச்சான்று களுக்கும், அயல்நாட்டு நூலாசிரியரின் கூற்றுகளுக்கும், உடன்பாடு காணப்படுவதால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சங்ககாலமானது மிகச் சிறந்த முறையில் நிகழ்ந்து வந்தது என்பதில் ஐயமேதுமில்லை. எனவே, இப்போதுள்ள ஆய்வு நிலையில், கடைச்சங்கம் கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகள் நிகழ்ந்து வந்தது என்று கொள்ளுவது சாலப் பொருத்தமாகும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும், கி.பி.முதல் நூற்றாண்டுக்கும் இடையில் இடைச்சங்கம் இயங்கி வந்ததென்றும், அதற்கும் முன்பு கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கும், இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் தலைச்சங்கம் நடைபெற்று வந்தது என்றும் கொள்ளலாம். இம்மூன்று சங்கங்களும் நீண்ட காலம் செயற்பட்டு வந்தன என்பதில் ஐயமில்லை. தலைச்சங்கம் தோன்றுவதற்கு முன்பும் தமிழ் வளர்ந்துகொண்டிருந்தது. பாணர்கள் ஊரூராகச் சுற்றிவந்து இசைப்பாடல்கள் பாடி வயிறு பிழைத்து வந்தனர்.

– டாக்டர் கே.கே.பிள்ளை எழுதிய
தமிழக வரலாறு மக்களும்,
பண்பாடும் நூலிலிருந்து...

வெளியீடு :
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

• • •




# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாநாடு

மாண்புமிகு

**தமிழக முதலமைச்சர்** அவர்களின் உரை

இன்று நான் உங்களைச் சந்திப்பதிலும் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் ஆண்டு மாநாட்டைத் தொடங்கி வைப்பதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த புதிய அரசு இவ்வாண்டு மே மாதம் பதவியேற்ற பிறகு நடைபெறும் முதல் மாநாடு இதுவாகும்.

1991–ஆம் ஆண்டு ஜூன் திங்களில், நான் முதல் முறை முதலமைச்சராகப் பதவி ஏற்று, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களிடையே உரையாற்றும் போது, சட்ட ஒழுங்கை அரசு திறம்பட பராமரிக்கும் என்பதில் மக்களின் நம்பிக்கையை மீட்டு எடுப்பதில் அரசு உறுதியாக உள்ளது என்று தெரிவித்தேன். இப்போது 10 ஆண்டுகளுக்குப் பிறகு உங்களிடையே உரையாற்றும் போதும் கூட அப்போது நான் என்ன கூறினேனோ, அதனையே மீண்டும் வலியுறுத்திக் கூற வேண்டியுள்ளது என்பது ஒரு வருந்தத்தக்க நிலையே ஆகும். தீவிரவாதிகளையும், பிரிவினைவாதிகளையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டியது புதிய அரசு மீண்டும் எதிர்கொள்ள வேண்டியுள்ள முக்கிய பணிகளில் ஒன்றாகும். ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளவாறு, போராளிகள், தேச விரோத மற்றும் பிரிவினைவாத கும்பல்கள் மீண்டும் இந்த மாநிலத்தில் தலைதூக்க



ஆரம்பித்துள்ளன. கடந்த 5 ஆண்டுகளாக சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனுடைய கூட்டத்தினர் பிடிபடாமல் சவாலாகவே இருந்து வந்துள்ளனர். அவர்கள் தேச விரோத கூட்டத்தினர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். சட்டத்திற்கு அப்பாற்பட்ட சக்திகளும் அரசமைப்புச் சட்டத்திற்கும் அப்பாற்பட்ட சக்திகளும் அதிகரித்து, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வாழும் குடிமக்களையும் அச்சுறுத்தி வருகின்றன. இத்தகைய சக்திகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இதுவே, மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் முதல் சவாலாக இருக்கும். நீங்கள் ஒட்டுமொத்த தீர்மானத்துடனும், செயல்திறனுடனும், செயல் நோக்கத்துடனும் ஈடுபட வேண்டுமென்று உங்களுக்கு நான் ஆணையிடும் முதல் பணி இதுவே ஆகும்.






கடந்த எட்டு வாரங்களாக, நான் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் அரசின் செயல்பாட்டை மதிப்பிட அனைத்து அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களுடன் விரிவான, பயனுள்ள விவாதங்களை நடத்தினேன். அதிகாரிகளின் உற்சாகத்தையும் பொறுப்புணர்வையும் கண்டு நான் மகிழ்ச்சியடையும் அதே நேரத்தில், பொது மக்களைப் பாதிக்கிற, அரசின் பல்வேறு முக்கியமான பணிகளில் போதிய அளவிற்குக் கவனம் செலுத்தாத நிலை, வழிகாட்டுதல் இன்மை மற்றும் முக்கியத்துவம் இல்லாத நிலை ஆகியன இருந்து வந்துள்ளது என்பதையும் நான் அறிய நேரிட்டது. அரசு இயந்திரம், சிறப்பான முறையில் செயல்பட மேலிடத்திலிருந்து முறையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும். கடந்த 5 வருடங்களாக இவ்விதம் அரசு செயல்படாத காரணத்தால் அரசு நிர்வாகம் திசை மாறிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய போக்கு, உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்த மாநிலம் மீண்டும் வளமான பாதையில் சென்று, நாட்டில் முதன்மையான இடத்தைப் பெற வேண்டும். அரசு நிதி மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பயன்கள் எவ்வித குறையுமின்றி அது சேர வேண்டிய பயனாளிகளுக்குச் சென்று அடையும் வகையில் செயல்படுத்தப் படுகிறதா என்பதைக் கண்டறிய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை நான், ஆய்வுகளின் போது அதிகாரிகள் அனைவருக்கும் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன் என்று நம்புகிறேன். அதே கருத்தை, மாவட்ட ஆட்சியர்களாகிய உங்களிடமும் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். 'அரசின் ஒவ்வொரு துறையின் முனைப்பான செயல்பாடு, மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின் கீழ் உள்ள மாவட்ட நிர்வாகம், ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்பு உணர்வோடும் செயல்படும் விதத்தில் அமைகிறது என்பது என்னுடைய தெளிவான கருத்தாகும். மாவட்ட ஆட்சியர்களின் கூட்டத்திற்கான விரிவான நிகழ்ச்சி நிரலில்' பல்வேறு இனங்கள் அடங்கியுள்ளன. இவற்றின்பால் மாவட்ட ஆட்சியர்களின்முழு கவனம் தேவைப்படும். இந்த நிலையில், இவை குறித்து நான் விரிவாக எடுத்துரைக்க விரும்பவில்லை.

இருப்பினும், அரசின் இந்த செயல் திட்டங்களில் உயர் முன்னுரிமை பெறுகின்ற சிலவற்றைப் பற்றி இந்த



சந்தர்ப்பத்தில் விளக்கிக் கூற நான் விழைகிறேன். இம்மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டாலன்றி, நாட்டில் நம் மாநிலத்தை முதல் இடம் பெறச் செய்ய வேண்டுமென்ற நம்முடைய உறுதிப்பாடு பயனற்றதாகிவிடும். ஆகையால், சமூக விரோத சக்திகளின் தீய நடவடிக்கைகளை ஒடுக்கவும், மாநிலத்தில் சமாதானம், அமைதி நிலவுவதை உறுதி செய்யவும், மாவட்ட நிர்வாகம் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு சாதியினரும், வகுப்பினரும், அமைதியாகவும், ஒற்றுமையுடனும் வாழ்வதற்குப் பெயர் பெற்ற மாநிலமான தமிழ் நாட்டில், கடந்த 5 ஆண்டுகளில், மக்களிடையே மோதல்கள் ஏற்பட்டு வந்துள்ளது என்பது தெரியவருகிறது. இதனை வெறும் சட்டம், ஒழுங்கு பராமரிப்புப் பிரச்சனையாக மட்டுமே பார்க்க முடியாது என்று நான் கருதுகிறேன். இவை குறித்த மூலகாரணங்களை முறையாகப் புரிந்து கொண்டு, சமூகப் பொருளாதார பிரச்சனைகள் குறித்து விரிவாகப் பேசி முடிவெடுப்பதே இதற்கான சரியான அணுகு முறையாகும். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, பிரச்சனைகள் அதிகமாக உள்ள பகுதிகளைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளில், மக்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக நடவடிக்கை எடுக்குமாறும், மக்களின் வாழ்க்கை, அர்த்தமுள்ளதாக இருக்கச் செய்யவும், சமூக விரோத, தேச விரோத சக்திகளின் தாக்குதல்களிலிருந்து அவர்களைக் காக்க நடவடிக்கை எடுக்கவும், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை ஆகிய சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன். இந்த மாநாட்டில், மாவட்ட ஆட்சியர்கள் விவாதம் செய்யும் போது, இது குறித்த அவர்களின் கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த அரை நூற்றாண்டில், மக்களுக்கு அடிப்படை வசதிகளையும், அடிப்படைக் கட்டுமான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க அடுத்தடுத்து வந்த அரசுகள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளன. இருப்பினும், கிராமப்புற மக்களின் தேவைகள் இன்னும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலேயே உள்ளன என்றும், ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ள வசதிகள் மன நிறைவளிக்கும் அளவில் இல்லை என்றும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. செலவுகள் செய்யப்பட்டு, ஆனால், அவை குறித்த பயன்கள் எவருக்குப் போய்ச் சேர வேண்டுமோ, அவர்களைச் சென்றடையாமல் உள்ளன என்ற நிகழ்வுகள் இன்னும் இருக்கின்றன. உருவாக்கப்பட்ட சொத்துக்களின் தரங்கள் குறித்தும், செய்து கொடுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்தும் தொடர்ந்து ஆய்வு நடத்த வேண்டியது அவசியமாகிறது. அவசியமான இனங்களில், இந்தத் தேவைகளின் நிலையை உயர்த்தவும், இடைவெளிகளை நிரப்பவும் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக அரசு பல்வேறு கால கட்டங்களில் மாணவர் இல்லங்களை உருவாக்கி யுள்ளது. அத்தகைய மாணவர் இல்லங்கள் போன்ற அடிப்படை வசதிகள் இங்கு மோசமான நிலையில் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து நான் வருத்தம் அடைகிறேன். ஆண்டுதோறும், கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டும், பெரும்பாலான மாணவர் இல்லங்கள், மின் வசதி, கழிப்பறை வசதி மற்றும் தண்ணீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை முழுமையாகப் பெற்றிருக்கவில்லை. மாணவர்கள் பரிதாப நிலையிலும், ஊக்கம் குறைந்த நிலையிலும், வருந்தத்தக்க நிலையிலும் இருந்து வருகின்றனர். அவர்கள், சிறப்பான கல்வி கற்று வாழ்க்கையில் உயர்நிலையை எய்த அவர்களுக்கு நாம் உதவி புரியும் வழி நிச்சயமாக இதுவல்ல. சமுதாயத்தில், நலிந்த பிரிவினர்கள் வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவதை உறுதி செய்ய அவர்களின் மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமையை எனது அரசு அளிக்க விரும்புகிறது. திட்டங்களின் உண்மையான நோக்கங்கள் எய்தப்படும் மற்றும் முனைப்பாக செயல்படுத்தப்படுவது நோக்கங்களையும், அதற்காக செலவிடப்பட்ட

நிதியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவை இரண்டிற்கும் இடையே பெருத்த இடைவெளி உள்ள நிலை உருவாகியுள்ளது. இந்த நிலை முற்றிலும் ஏற்கத்தக்கதல்ல.

திட்டத்தைச் செயல்படுத்துகின்ற அதிகாரிகளின் நேரடியான ஈடுபாடும், பொறுப்பும் இல்லாததால், இத்தகைய வருந்தத்தக்க நிலை சென்ற ஆட்சியில் ஏற்பட்டுள்ளது என்று மட்டுமே நான் கூறமுடியும். சமுதாய நலத் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளவர்கள் அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவர்களாகவும், தங்களுடைய பணியை, சிறப்பான முறையில் ஆற்ற வேண்டும் என்று கருதினால் மட்டுமே சமுதாய நலத்துறைத் திட்டங்கள் வெற்றி அடையும்; பயனையும் நல்கும். மக்களின் தேவைகளைப் பரிவுடனும், கருணையுடனும் புரிந்து கொள்ளவும், நம்முடைய நோக்கங்களை எய்தக் கூடிய சிறப்பாக செயல்படக்கூடிய புதுமையான திட்டங்களை உருவாக்கி, திறம்பட்ட வகையில் செயல்படுத்தும் திறனைப் பெறவும் உரிய மனப்பாங்கினை அதிகாரிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும். மாவட்ட நிர்வாகத்தை, மக்கள் எளிதில் அணுகுவதற்கு வழி வகை செய்வதன் மூலமாகத்தான் மக்களின் ஆதரவைப் பெற இயலும்.

25.5.2001–ஆம் நாளன்று ஆளுநர் உரையில் இடம் பெற்ற, அரசு அலுவலகங்களில் பணியை விரைவாக முடிப்பது பற்றிய அறிவிப்பின் மீது உங்களுடைய கவனத்தை நான் ஈர்க்க விழைகிறேன். இந்த அறிவிப்பின் நோக்கத்தைச் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்களின் பணி இன்றியமையாததாகும். மக்களின் குறைகளைக் களைவதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். மனுக்களை முறையாகப் பெறுவது, இறுதி நடவடிக்கை எடுப்பதற்குக் கால வரையறை நிர்ணயிப்பது, விரைந்து முடிவெடுக்க, சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் திறம்பட்ட வகையில் ஒருங்கிணைந்து பணியாற்றுவது ஆகியவை மக்கள் குறைகளைக் களையும் திறம்பட்ட நிர்வாக அமைப்பிற்கு இன்றியமையாத அம்சங்களாகும். இந்தத் திட்டங்களில் தொண்டு மனப்பான்மையுடன் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும்படி மாவட்ட ஆட்சியர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு பதவியேற்ற நாளிலிருந்து 31.7.2001 வரையில் 2,18,688 மனுக்கள் என்னால் நேரடியாக தலைமைச் செயலகத்திலும், முதலமைச்சரின் தனிப்பிரிவிலும் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 1,50,000 மனுக்கள் ஏற்கெனவே தக்க நடவடிக்கைகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கும், அந்தந்தத் துறை தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், 60,000 மனுக்கள் முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தக்க நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட உள்ளன. இவை உங்களிடம் ஒப்படைக்கப்படும். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் விரைந்து நடவடிக்கை எடுத்து இம்மனுக்களை முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து வருகின்ற மனுக்கள் மீது மட்டுமல்லாமல், பிற இடங்களிலிருந்து வருகின்ற மனுக்கள் மீதும் தனிக் கவனம் செலுத்தி அவற்றை விரைவில் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 1991 முதல் 1996 வரையிலான என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில்



மாவட்டங்களில் பொது மக்களின் குறைகளைத் தீர்க்கும் தனிப்பிரிவில் பணி புரியும் தனி துணை ஆட்சியர்களுக்குப் பரிசு ஒன்றை நிறுவினேன். ஆனால், அது முந்தைய ஆட்சியினால் கைவிடப்பட்டுள்ளது. இப்போது, மீண்டும் அத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இவ்வருடம் முதல், சிறந்த மாவட்டத்திற்கு ஆண்டுதோறும் கேடயம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தனது சீரிய முயற்சியால் கடமை தவறாது புதிய வழிகளால் மக்களின் குறைகளைத் தீர்க்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கு முதலமைச்சரின் பதக்கம் ஒன்று அடுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவுத் திட்டம் போன்ற திட்டங்களில், நேரடியான ஈடுபாடு

இல்லாததாலும், போதிய கவனம் செலுத்தாததாலும், கடந்தசில ஆண்டுகளாக, சென்ற ஆட்சியில் குழந்தைகளுக்கான உணவின் தரம் மோசமாகி யுள்ளது. இந்த மேன்மையான திட்டத்திற் குரிய பொருட்களை வழங்குவதில் கடத்தல் உள்ளிட்ட கடுமையான முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாக புகார்கள் வந்துள்ளன. மாவட்ட ஆட்சியர்களும், மாவட்டத்திலுள்ள ஏனைய அலுவலர்களும், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மையங்களுக்குக் குறைவில்லாமல் பார்வையிடும்படி கேட்டுக் கொள்கிறேன். பெருமளவிலான சத்துணவு மையக் கட்டடங்கள் மோசமான நிலையில் உள்ளன என்பதை மாநாட்டுக் குறிப்புகளிலிருந்து நான் அறிகிறேன். குறிப்பாக, நகர்ப் பகுதிகளிலுள்ள மையங்களை உடனடியாகப் பழுது பார்க்க வேண்டியது அவசியமாகிறது. மாவட்ட ஆட்சியர்கள் இத்தகைய சமுதாய நலத்துறைத் திட்டங்கள் அனைத்தையும் முக்கியமான பணியாகக் கருதி, அவற்றின் செயல்பாட்டின் தரத்தை மேம்படுத்துவதில் ஈடுபடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்றங்களைக் களைவது, கடந்த சில ஆண்டுகளாக சென்ற ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது ஒரு பெரிய அம்சமாகும். தற்போது, மகளிர், அரசியல் உரிமைகளைப் பெற்றுள்ளனர். அரசியல் அரங்கிலும் சிறிதளவு இட ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளனர். இத்தகைய முன்னேற்றங்களைக் கண்டுள்ள போதிலும், மகளிரின் நிலை தொடர்ந்து கீழான நிலையிலேயே இருந்து வருகிறது. மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களும் தொடர்ந்து அதிகரித்துள்ளன. கடந்த சில ஆண்டுகளாக மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்றங்களின் விகிதம் அதிகரித்துள்ளது என்பதைப் புள்ளிவிவரங்கள் உறுதி செய்கின்றன. மகளிரைப் பாதிக்கின்ற பிரச்சனைகள் தொடர்பான பல்வேறு சட்டங்கள், விதிமுறைகள், விதிகள் ஆகியவற்றை மாவட்ட நிர்வாகம் பொறுப்புடன் செயல்படுத்த வேண்டியது அவசியமாகிறது. தற்போது 2001–ஆம் ஆண்டு, மகளிருக்கு அதிகாரமளிக்கும் ஆண்டாக அறிவிக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மாவட்ட அளவிலான மகளிர் ஆலோசனைக் குழுக்களை முனைப்புடன் செயல்படுத்தும்படி மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மகளிருக்கும் அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன், என்னுடைய அரசு 1992 முதல் 1995 வரையிலான ஆண்டுகளில், இம்மாநிலத்தில் 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தியது. காவல் துறையின் வரலாற்றிலும், மகளிருக்கு நீதி வழங்குவதிலும் இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும், இந்தக் காவல் நிலையங்கள், மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள், பெண் – சிசுக் கொலை முதலிய குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் குடும்ப நீதிமன்றங்களைப் போன்று செயலாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. துரதிருஷ்டவசமாக, கடந்த ஐந்தாண்டுகளாக, இந்தக் காவல் நிலையங்கள் திட்டமிட்டே புறக்கணிக்கப் பட்டு வந்துள்ளன. அதன் விளைவாக அவை சீர்கேடு அடைந்துள்ளன. எனவே, செயல்திறன் பயிற்சி பெற்ற பணியாளர்கள் அடங்கிய ஒரு புதிய அமைப்புடன், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களைச் சீரமைக்க, நாங்கள் முடிவெடுத்துள்ளோம். துயரத்தில் உள்ள மகளிருக்கு உடனடியாகப் பணியாற்ற அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் அவசர உதவி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்படும். மாநிலத்திலுள்ள ஒவ்வொரு காவல் துறை உட்கோட்டத்திலும் ஒரு மகளிர் காவல் நிலையத்தையாவது ஏற்படுத்தவும் அரசு முடிவெடுத்துள்ளது. துயரத்தில் உள்ள மகளிரின் நலனைப் பாதுகாப்பதில், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வெற்றிகரமாகச் செயலாற்றுவதற்காக, மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் நெருக்கமாக ஒருங் கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிருக்குக் கல்வியும், வேலை வாய்ப்பும் அளிப்பதன் வாயிலாகவே சமுதாயத்தில் மகளிரின் நிலையை உயர்த்த முடியும். மகளிருக்குப் பொருளாதார அதிகாரமளிப்பது என்பது, ஏனைய அனைத்துத்

துறைகளிலும் அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்கான இன்றியமையாத ஒரு தகுதிக் கூறாகும். இந்நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, என்னுடைய முந்தைய ஆட்சியின்போது, வேளாண்மை மேம்பாட்டுக்கான பன்னாட்டு நிதியுதவியுடன், மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை, மாநில அரசு செயல்படுத்தத் தொடங்கியது. இத்திட்டம் வெற்றியடைவதற்காக, பெண்களை, ஒற்றுமையும், செயலாற்றலும் கொண்ட சுய உதவிக் குழுக்களாக உருவாக்குவது அடிப்படைக் கூறாகும். இந்தத் திட்டம், மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். சேமிக்கும் பழக்கத்தைப் பயிற்றுவித்து, திறமைகளை வளர்த்துக் கொள்வதுடன், இந்த சுய உதவிக் குழுக்கள், கிராமப் பகுதிகளில் மகளிரின் சமுதாய – பொருளாதார நிலையை மாற்றியமைப்பதில் அமைதியான, அதே சமயத்தில் பயனுள்ள பணியை ஆற்றுகின்றன. குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கூட்டம் நடத்துதல், ஆய்வு செய்தல், சுய உதவிக் குழுக்களுடன் கலந்தாலோசித்தல் ஆகியவற்றின் மூலம் இத்திட்டத்தைக் கண்காணிப்பதில் தங்களுடைய நேரடிக் கவனத்தைச் செலுத்தும்படி மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக வேளாண்மைத்துறையில் நீடித்து வந்த கொள்கை செயல்பாடு காரணமாக, உற்பத்தித் திறனை அதிகரித்தல், கிடைக்கின்ற நீரை திறம்பட்ட வகையில் நிர்வகித்தல், புதிய அறிவியல் தொழில்நுட்ப உத்திகளைப் பின்பற்றுதல், வேளாண்மையில் மூலதன முதலீடுகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மீது அரசு கவனம் செலுத்த முடிந்தது. இந்தத் துறைகளில் வளர்ச்சி வீதம் பெரும்பாலும் முன்னேற்றமின்றி ஒரே நிலையில் உள்ளதால், நமது மாநிலத்திலுள்ள தரிசு நிலங்களைச் சாகுபடியின் கீழ் கொண்டு வருவதற்கு நம்முடைய முயற்சிகளை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும். அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இம்மாநிலத்திலுள்ள 20 லட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்கள் அனைத்தையும் மேம்படுத்த மாநில அரசு கருதியுள்ளது. மக்களிடமிருந்து நாம் பெறுகின்ற ஆதரவு, ஒத்துழைப்பு திட்டத்தைச் செயல்படுத்தும் நடவடிக்கையில் அவர்கள் திறம்பட்ட வகையில் பங்கேற்பது ஆகியவற்றைப் பொறுத்து இத்திட்டத்தின் வெற்றி அமையும். இந்த மாபெரும் திட்டத்தில், அவர்களை ஊக்கப்படுத்தி, அவர்களுடைய ஆதரவைப் பெறுவதில் மாவட்ட ஆட்சியர்கள் பயனுள்ள முறையில் பணியாற்ற வேண்டும்.

**“இந்த மாநிலம் மீண்டும் வளமான பாதையில் சென்று, நாட்டில் முதன்மையான இடத்தைப் பெற வேண்டும். அரசு நிதி மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பயன்கள் எவ்வித குறையுமின்றி அது சேர வேண்டிய பயனாளிகளுக்குச் சென்று அடையும் வகையில் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்டறிய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது”**

‘உலகளாவிய கல்வி’ என்ற குறிக்கோளை எய்துவதற்கு, ஒருங்கிணைந்த முறையில் சில முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆலோசனைக் கூட்டம் நடத்துவதன் வாயிலாக பள்ளி ஆசிரியர்களை இடம் மாற்றுவது குறித்த நடைமுறையில், ஒளிவுமறைவற்ற வெளிப்படையான முறையினையும் ஆசிரியர்களுடன் தோழமையான அணுகுமுறையையும் பின்பற்றிய மாநிலம், நாட்டிலேயே, தமிழ்நாடுதான் முதலாவது மாநிலமாக இருக்கும் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். மேற்சொன்ன கொள்கையின் காரணமாக, இம்மாநிலத்திலுள்ள ஆசிரியர் சமுதாயத்தினரிடையே உருவாக்கப்பட்ட நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி, நாம், எழுத்தறிவுத் திட்டத்தை உறுதியாகச் செயல்படுத்தவும், அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் பணியாற்ற வேண்டும். கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்கள் இப்பணியில் பங்கேற்க வேண்டும்.

சாலை விபத்துகளும், அதன் விளைவாக மரணங்களின் எண்ணிக்கை சீராக உயர்ந்து வருவதும் மிகவும் கவலையளிக்கக்கூடிய மற்றொரு விஷயமாகும். மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை உயர்ந்து வருவது, குறித்த காலத்திற்கொருமுறை சாலைகளைப் பராமரிக்க இயலாதது, அச்சாலைகளின் மோசமான வடிவமைப்பு போக்குவரத்து விதிகள்– ஒழுங்குமுறைகள் குறித்து சாலையைப் பயன்படுத்துவோரிடையே விழிப்புணர்வு இல்லாமை, தொடர்புடைய சட்டங்கள், விதிகளைச் செவ்வனே செயல்படுத்தாதது ஆகியவை இத்தகைய விபத்துக்கள் நடக்க முக்கியக் காரணங்களில் சிலவாகும். மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்களின் வாயிலாக, பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச்

செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்கள் சீரிய பங்காற்ற வேண்டும்.

வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாகவும், முந்தைய ஆட்சியாளர்களின் திட்டமின்மையினாலும் சென்னை மாநகர் கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைச் சந்தித்து வருகிறது. இப்பிரச்சினையைச் சமாளிக்க அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இந்த ஆண்டு, தென்மேற்குப் பருவமழை பல மாவட்டங்களில் மனநிறைவு அளிப்பதாக இல்லை. வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிடுகிற சூழ்நிலை உருவானால், இம்மாநிலத்தின் பெரும்பாலான மாவட்டங்கள் கடுமையான குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கத் தயாராக இருக்க வேண்டியிருக்கும். எனவே, மாவட்ட ஆட்சியர்கள் குடிநீர் வழங்கலைப் பெருக்குவதற்கும், கிடைக்கக்கூடிய தண்ணீரைக் கவனமுடன் திட்டமிட்டு வினியோகிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணி வகிக்கும் அதே நேரத்தில், முக்கியத்துவம் வாய்ந்த சில துறைகளில் இம்மாநிலம் சரிவடைந்துள்ளது வருந்தத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக, குழந்தைகள் இறப்பு வீதம், தாய்மார்கள் இறப்பு வீதம் ஆகியவற்றைக் குறைப்பதிலும், ஏனைய குடும்ப நலத் திட்டங்களிலும் சாதனை அளவு சென்ற ஆட்சியில் பெரிதும் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டப் பணிகள் 13 சதவீதம் அளவுக்கு இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது என தேசியக் குடும்ப நல ஆய்வு குறிப்பிடுகிறது. மாவட்ட அளவில் சுகாதாரத் திட்டங்கள் உரியவாறு கண்காணிக்கப்படாதது, இந்தக் குறைபாட்டிற்குரிய காரணங்களில் ஒன்றாகும். இம்மாநிலம், குடும்ப நலத் திட்டத்தில், இலக்கு அல்லாத அணுகுமுறையைப் பின்பற்றினாலும் மாவட்ட ஆட்சியர்கள் குடும்ப நலத் திட்டத்தின் சாதனைகளைக் கண்காணித்து, அரசு மருத்துவ நிறுவனங்களில் மக்களுக்குத் தரமான சுகாதாரப் பணியினை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

மாநில அரசு, கடுமையான நிதி நிலைமையைச் சரி செய்வதற்குச் சிறு சேமிப்பு வசூல்களையே பெரிதும் நம்பியுள்ளது. இம்மாநிலம் கடந்த ஆண்டு, சிறுசேமிப்பு வசூலில் ரூ.1,800 கோடி என்ற இலக்கை எய்த முடிந்தது. பெரும்பாலான மாவட்ட ஆட்சியர்களின் செயல்பாடுகள் பாராட்டத்தக்கதாக உள்ளன. அதே போன்ற ஆர்வத்தைத் தொடர்ந்து காட்டி, நடப்பாண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.2,000 கோடி சிறு சேமிப்புத் திட்ட இலக்கை எய்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும், சென்னை மாநகராட்சி ஆணையரையும் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நிர்வாகம், அரசின் மிக முக்கியமான அடித்தளமாகும். பட்டாக்கள், சாதிச்சான்றிதழ்கள், இவை போன்ற அடிப்படை சேவைகளைப் பெறுவதில் இன்னும் கூட கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் பெரிதும் இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர் என்பது எனக்கு வருத்தமளிப்பதாக உள்ளது. கிராம மக்கள், கிராம நிர்வாக அதிகாரிகளைச் சந்திக்கக்கூடிய நிலையான அலுவலகம் ஒன்றை ஒவ்வொரு கிராமமும் கொண்டுள்ளதை உறுதி செய்யுமாறு நான் வருவாய்த் துறையை அறிவுறுத்தியுள்ளேன். அதே போல், நிலப் பதிவேடுகளைக் கணினிமயமாக்குவதை விரைவுபடுத்த வேண்டும் என்றும், பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டத்தை ஓராண்டில் முடிக்க வேண்டும் என்றும் நான் அறிவுறுத்தியுள்ளேன். சாத்தியமான குறைந்த கால அளவில் தங்களுடைய மாவட்டங்களில் இவற்றையெல்லாம் எளிதில் முடிக்க அவர்களிடையே ஆரோக்கியமான போட்டி ஒன்று உருவாவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

திட்டச் செயலாக்க நடைமுறையில் மாவட்ட ஆட்சியர்களும் ஏனைய கள அதிகாரிகளும் தங்களைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ளாவிட்டால், தலைமைச் செயலகத்தில், மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும் பல்வேறு திட்டங்களுக்காக, ஒதுக்கப்பட்ட வரி செலுத்துவோரின் பெருவாரியான தொகையும் வீணாகிவிடும். மாவட்ட ஆட்சியர்கள் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதோடு மட்டுமல்லாது, வளர்ச்சித் திட்டங்களைச்

செயல்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அந்தக் கோணத்தில் பார்த்தால், மாவட்ட ஆட்சியர்களாகிய நீங்கள் தான், மாவட்டங்களில், அரசின் நேரடி பிரதிநிதிகள். பல்வேறு துறைகளின் அதிகாரிகளுடன் குறித்த காலத்திற்கொரு முறை கூட்டங்களை நடத்தவும், அவர்களுடைய செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், தடைகளைக் கண்டறிந்து அகற்றவும், சிறப்பாகப் பணியாற்ற அவர்களுக்கு வழிகாட்டவும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிதி–திட்ட இலக்குகள் ஆகிய இரண்டும் எய்தப்படுவதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். அரசு, மாவட்ட நிர்வாகத்திற்குத் தன்னுடைய உதவிக் கரத்தை நீட்டும் என்றும், அதிகாரிகளின் நலன்களைப் பாதுகாக்க, அவர்களுடைய மன உறுதியை உயர்த்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.




மாவட்ட ஆட்சியர்களின் செயல்பாடு மற்றும் சாதனைகளை அங்கீகரிக்கின்ற ஒரு முறை தற்போது உள்ளது. திருத்தப்பட்ட முன்னுரிமைகள், அரசின் புதிய துறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இதனை முழுமையாக சீரமைக்க வேண்டியது அவசியமாகும் என்று நான் கருதுகிறேன். மகளிர், ஒடுக்கப்பட்டவர்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான நலத்திட்டங்களைச் செயல் படுத்துதல், குடும்பநலத் திட்டங்களைச் செயல் படுத்துதல், பட்டா பாஸ் புத்தகம் வழங்கலில் பணி முன்னேற்றம் முதலியவற்றுக்கு இந்த புதிய ஏற்பாட்டில், உரிய முக்கியத்துவம் அளிக்கப்பெறும். நல்ல பயன்களை அடைய நட்பு உணர்வுடன், போட்டி உணர்வுடன், ஒருவொருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்துவதில், இது மாவட்ட ஆட்சியர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன். அத்தகைய ஓர் உணர்வு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாக இருப்பதோடு மட்டுமல்லாது, மக்களின் நலனுக்காக, செலவிடப்படுகின்ற பொதுப் பணம், வேறொன்றுக்குத் திசைமாறி அல்லது தகாது சென்று விடாமல் இருப்பதை உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும்.



சட்டம் – ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த பல்வேறு பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை இங்கு அளிக்கப்பட்டுள்ள குறிப்பு களிலிருந்து நான் அறிகிறேன். என்னுடைய அரசின் செயல்திட்டத்தில் உள்ள பொருள் நிரலிலுள்ள முக்கியமான ஒருசிலவற்றை மட்டுமே இங்கு என்னால், குறிப்பிட முடிந்தது. இதன் மூலம் மற்ற பொருள்கள் முக்கியத்துவமற்றவை என்று கூறிவிட முடியாது. உங்களில் பலர் அண்மையில் தான் மாவட்டங்களுக்குப் பணியமர்த்தப்பட்டுள்ள போதிலும், பல்வேறு பொருள்கள் குறித்த பொருள் பொதிந்த விவாதத்திற்கு உங்களின் கருத்துக்களை முன்வைக்க நீங்கள் தயாராக வந்துள்ளீர்கள் என்று நான் நம்புகிறேன்.

*– மாண்புமிகு முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*1–8–2001 அன்று*
*மாவட்ட ஆட்சித்தலைவர்கள்*
*மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள்*
*மாநாட்டில் ஆற்றிய உரை.*

• • •

# நிதி நிலை அறிக்கை 2001–2002

*மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்*
*திரு.* ***சி. பொன்னையன்*** *அவர்கள் 18–8–2001 அன்று*
*சட்டப்பேரவையில் ஆற்றிய உரை.*

2001ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று பதவிப் பொறுப்பேற்ற பின்னர், புதிய அரசு அவை முன் வைக்கும் முதல் நிதி நிலை அறிக்கை இதுவே ஆகும். இத்தேர்தல்கள், தமிழ்நாட்டு மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், தொலைநோக்கு சிந்தனை நிறைந்த நமது மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் மீதும் கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய உறுதியான தீர்ப்பு அளித்தமைக்காக, தமிழ்நாட்டு மக்களுக்கு என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். மேலும், இவ்வரசு, தனக்கு அளிக்கப்பட்டுள்ள அளப்பரிய பொறுப்புகளை நன்கு உணர்ந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2001–2002ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத் திட்டத்தின் மதிப்பீடுகளை இப்பேரவையின் முன்னர் வைக்க நான் முன்வந்துள்ளேன். முந்தைய அரசு, 2001ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29ஆம் நாளன்று இடைக்கால வரவு–செலவுத் திட்டம் ஒன்றைத் தாக்கல் செய்து, நடப்பு நிதியாண்டின் முதல் ஆறுமாத செலவினங்களுக்கு "கணக்கு வாக்களிப்பு (Vote on Account)" அனுமதி பெற்றதை நினைவுகூர விரும்புகிறேன். எஞ்சியுள்ள ஆறு மாதங்களுக்கான வருவாய் மற்றும் செலவு மதிப்பீடுகளைக் கருத்திற்கொண்டும், தமிழ்நாடு அரசின் ஒட்டுமொத்த நிதிநிலைமையை ஆய்வுசெய்த பின்னரும் தயாரிக்கப்பட்ட நடப்பு நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு இந்தப் பேரவையின் ஒப்புதலை வேண்டுகிறேன்.

வெறும் புள்ளி விவரங்கள் மட்டுமேயல்லாது, மக்களின் வாழ்க்கைத்தரமே, ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை அறிய உதவும் அளவுகோல் என்பதை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. தமிழ்நாட்டு மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றம் என்பது, வேளாண்–பொருளாதாரம், தொழில் பொருளாதாரம் மற்றும் சேவைத்துறை ஆகியவற்றின் சமச்சீரான



வளர்ச்சியைப் பொறுத்தே அமையும். இம்மாநிலத்தின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான அடித்தளத்தை அமைப்பதே இவ்வரசின் தலையாய முயற்சியாக இருக்கும். இவ்வரசு, பொருத்தமான கொள்கைகளை வகுத்து, மக்களின் நீண்ட ஆயுள், நல்லறிவு, வாழ்க்கைத்தரம் ஆகிய மனித வள மேம்பாட்டுக் குறியீடுகளை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்ளும். இந்தக் குறிக்கோள்களை, சிறந்த, வெளிப்படையான, பொறுப்பான, மக்களுடைய பங்கேற்போடு செயல்படுகின்ற நல்லாட்சியின் மூலம் இவ்வரசு நிறைவேற்றும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பதவியேற்ற பின்னர், கடந்த சில மாதங்களில் அனைத்து நிருவாகத் துறைகளின் பணிகளையும் அத்துறைகளில் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களையும் விரிவாக ஆய்வு செய்துள்ளார். இதன் மூலம், அரசு எதிர்கொள்ள வேண்டிய முக்கியமான சவால்கள் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், இம்மாநிலத்தின் நீடித்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கானப் புதிய கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மக்களின் முழு ஆதரவுடன் இம்மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள சவால்களைத் துணிவுடன் சமாளிக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

## தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் உறுதி அளித்தபடி, "தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை" இந்த அவைமுன் வைக்கிறேன். கடந்தகாலத்திலிருந்து இந்த ஆட்சியின்மீது தற்போது சுமத்தப்பட்டுள்ள சீர்கேடான நிதி நெருக்கடி குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரிவிப்பதே இந்த வெள்ளை அறிக்கையின் நோக்கமாகும்.

வெள்ளை அறிக்கை பற்றி சில முக்கியமான தகவல்களைச் சுருக்கமாக இங்கே தெரிவிக்கிறேன். 1990களின் மத்தியிலிருந்து தமிழ்நாட்டின் பொருளாதார, நிதிநிலைமையை ஆய்வு செய்ததில், மிகுந்த கவலையளிக்கும் சில அம்சங்கள் தெரியவந்துள்ளன. ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பான, மாநிலத்தின் மொத்த உற்பத்தி வளர்ச்சி (Growth of Gross State Domestic Product) 1991–96 கால அளவில் ஆண்டு ஒன்றுக்கு 6.66 சதவீதமாக இருந்தது; ஆனால், அது 1996–2001 கால அளவில் 6.22 சதவீதமாகக் குறைந்துள்ளது. வேளாண் மற்றும் தொழில் துறைகளின் செயல்பாடு, 1991–96 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, 1996–2001 கால அளவில் குறைந்துள்ளது. உற்பத்தித் துறைகளின் செயல்பாட்டுக்கு நேர்மாறாக, இதே கால அளவில், சேவைத்துறையில் (Service Sector) தனியார் துறையின் பெரும் பங்களிப்பு காரணமாக வளர்ச்சி காணப்படுகிறது.

மாநிலத்தின் வருவாய்ச் செலவிற்கும் வருவாய் வரவிற்கும் இடையேயான இடைவெளியைக் காட்டுகின்ற வருவாய்ப் பற்றாக்குறை, 1995–96ஆம் ஆண்டில் ரூபாய் 311 கோடியாக இருந்தது; ஆனால், அது 2000–01ஆம் ஆண்டில் ரூபாய் 3922 கோடி எனும் ஒரு நிலையை அடைந்துள்ளது. இதற்குக் காரணம் சம்பளங்கள், ஓய்வூதியங்கள், வட்டி செலுத்துதல், உதவித்தொகைகள் மற்றும் மானியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அரசின் வருவாய்ச்செலவு கடந்த ஐந்தாண்டுகளில் இரட்டிப்பானதே ஆகும். இதற்கு நேர்மாறாக, வருவாய் வரவு, 1991–1996 ஆண்டுகளைக் காட்டிலும் 1996–2001 ஆண்டுகளில் சரிந்துவிட்டது.

மத்திய வரிகளில், தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் பங்கு, அரசின் ஒட்டுமொத்த வருவாய் வரவுகளில் ஒரு முக்கியக் கூறாக அமைகிறது. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நிதிக் குழுக்கள், மத்திய வரிப் பகிர்வில் தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய பங்கை வழங்க தொடர்ந்து மறுத்துவந்துள்ளன. மேலும், மாநில அரசின் வருவாய் வரவில் மத்திய வரிப்பங்கு 1992–93ல் 20 சதவீதமாக இருந்து, 1999–2000ல் 16 சதவீதமாகக் குறைந்துள்ளதிலிருந்து இது தெளிவாகிறது. பதினோராம் நிதிக்குழு, மத்திய வரிகளின் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பிலிருந்து, இம்மாநிலத்திற்குச் சேரவேண்டிய பங்கின் சதவீதத்தைக் குறைக்குமாறு பரிந்துரை செய்ததன் மூலமாக, தமிழ்நாடு போன்ற செவ்வனே செயல்படும் மாநிலத்தை உண்மையிலேயே தண்டித்துள்ளது. இதன் விளைவாக, நம் மாநிலம், 2000–05 ஆம் ஆண்டுகளில் ரூபாய் 2946 கோடியை இழக்க வேண்டியுள்ளது.

அரசு, அதன் ரொக்க இருப்புகளைப் பயன்படுத்தியோ அல்லது கடன் பெற்றோதான் தன்னுடைய வருவாய்ப் பற்றாக்குறையை ஈடுசெய்யமுடியும். இவ்வரசு, 1996–97ல் பதவி விலகியபோது, ரூபாய் 874 கோடி ரொக்க இருப்பை விட்டுச் சென்றது. தற்போது, ரொக்க இருப்பு முற்றிலுமாகக் கரைந்துவிட்ட ஒரு அவல நிலை உருவாகியுள்ளது. இந்நிலையில் இவ்வரசு இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து பெறப்படும் வழிவகை முன்பணங்கள் (ways and means advances) மற்றும் மிகைப்பற்று (Overdraft) போன்ற குறுகிய காலக்கடன் வசதிகளைப் பயன்படுத்திதான் அன்றாடச் செலவுகளைச் சமாளித்து வருகிறது.

முந்தைய அரசு 31–3–2001 நிலவரப்படி ஏற்கனவே முடிந்துவிட்ட பணிகளுக்கு சுமார் ரூபாய் 700 கோடி

பெறுமான தொகைப்பட்டிகளுக்கும் ஏனைய செலவுப் பொறுப்புகளுக்கும் பணம் வழங்காமல் விட்டுச் சென்றுள்ளது. ஒப்பந்தக்காரர்கள், பொருள்கள் வழங்குவோர் மற்றும் அரசுத் திட்டங்களைச் செயற்படுத்தும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கவேண்டிய பணச்சுமை, நடப்பு நிதியாண்டுக்குத் தற்போது மாற்றப்பட்டுள்ளது. அரசு, தன்னுடைய மூலதனச் செலவிற்காகவும் அல்லது மேம்பாட்டுச் செலவிற்காகவும், வருவாய்ப் பற்றாக்குறையின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்காகவும் பெருமளவு கடன்வாங்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இம்மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறை, அதாவது, அரசின் மொத்த நிகரக்கடன், **1995–96**ல் ரூபாய் **1255** கோடியாக இருந்தது என்ற நிலை மாறி, **2000–2001**ல் திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் **5781** கோடியாக ஒரு மோசமான நிலைக்கு உயர்ந்துள்ளது.

இம்மாநில நிதிச் சீர்கேட்டின் உடனடி விளைவுகளின் சுருக்கம் வருமாறு:–

★ மாநில அரசின், உற்பத்திச் சாரா வருவாய்ச் செலவின் வளர்ச்சி, முதலீடு செய்யத்தக்க மொத்த நிதித்தொகுப்பில் பெரும்பங்கை அபகரித்துக் கொண்டுள்ளது.

★ வரவு–செலவுத் திட்டத்தில், வளர்ச்சிப் பணிகள் தொடர்பான செலவின் பங்கு **1991–92**ல் **77.9** சதவீதமாக இருந்து, **2000–01**ல் **57.8** சதவீதமாகக் குறைந்துள்ளது.

★ பல்வேறு முகவரமைப்புகள், மாநில அரசுக்கு வழங்கிய பணிகள் வகையில் அவற்றுக்குச் செலுத்தவேண்டிய தொகைகள் குறித்த பட்டிகளுக்கு, அரசு, தொகை வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளது.

இந்த அரசு மிகப் பெரும் பொறுப்பை எதிர்நோக்கியுள்ளது. மாநில அரசின் பொருளாதாரத்தை மீண்டும் சரியான தடத்தில் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிபூண்டுள்ளார். தமிழ்நாட்டு மக்களுக்கு பெரிய அளவில் இடர்ப்பாடு இல்லாமல், அரசின் பொருளாதார நிலையிலும் நிதிநிலையிலும் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமையைமாற்றி சீரமைப்பதென இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. கருணை மற்றும் நீதியின் வழிநின்று நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. நிதிநிலைமை நலிவைக் காரணங்காட்டி, மக்களின் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுவதை இவ்வரசு எந்தச் சூழ்நிலையிலும் அனுமதிக்காது. இந்தப் பின்னணியில், இம்மாநிலத்தின் பொருளாதாரத்தையும் நிதி நிலைமையையும் மீண்டும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஒருமித்த கருத்தை உருவாக்க மாண்புமிகு உறுப்பினர்களும் அறிஞர் பெருமக்களும் தமிழக மக்களும் பயனுள்ள கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

## ஆண்டுத்திட்டம்

முன்னெப்போதும் இல்லாத அளவிலான சமச்சீரற்ற நிதிநிலைமை, இதன் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்கிடையேயும், இவ்வரசு, நடப்பு நிதியாண்டில் ரூபாய் **6040** கோடி திட்டச்செலவு செய்ய முடிவு செய்துள்ளது. **2000–01** ஆம் நிதியாண்டுக்கான திட்டச் செலவான ரூபாய் **5700** கோடியைக் காட்டிலும் சுமார் ரூபாய் **340** கோடி கூடுதலாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக, நான் தற்போது இவ்வரசின் கொள்கைகள் மற்றும் திட்டப் பணிகள் பற்றி விவரிக்க விரும்புகிறேன்.

## வேளாண்மை, பாசனம் மற்றும் தொடர்புடைய துறைகள்

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பான்மையினரின் முக்கியத் தொழில் வேளாண்மை ஆகும். மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் வேளாண்மைத் துறையின் சராசரி வளர்ச்சி **1991–96** காலகட்டத்தில் ஆண்டொன்றுக்கு **4.33** சதவீதமாக இருந்தது; ஆனால், அது **1996–2001** காலகட்டத்தில் **2.66** சதவீதமாகச் சரிந்துள்ளது.

வறுமையை ஒழிக்கவும், வேலைவாய்ப்பை உருவாக்கி வருமானத்தைப் பெருக்கவும், வேளாண் உற்பத்தியில் இம்மாநிலம் தன்னிறைவு அடைவதை உறுதி செய்யவும் வேளாண்மைத் துறையில் தொடர்ந்து பலதிறப்பட்ட வளர்ச்சி காண்பது இன்றியமையாதத் தேவையென இவ்வரசு உறுதியாக நம்புகிறது. இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமானம் அதிகரித்தால், தொழில் துறையிலும், சேவைத் துறையிலும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தேவை அதிகரித்து அவற்றின் விற்பனையும் அதிகரிக்கும்.


விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், வேளாண்மைத் துறையின் வளர்ச்சி வேகத்தை அதிகப்படுத்தவும், வேளாண்மை உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்தவும் உதவுகிறவகையில் புதிய வேளாண்மைக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், பாசன வசதி விரிவாக்கம், நீர்வரத்துப் பகுதி நிருவாகம், பயிர்களின் முன்னுரிமை அடிப்படையில் விரிவாக்கப் பணிகள், சிறந்த வேளாண் நடைமுறைகள், வேளாண் இடுபொருட்கள் தாராளமாகக் கிடைக்கச் செய்வது, சிறந்த விற்பனை வசதிகள் ஆகியவற்றின் மூலமாக, வேளாண் உற்பத்தித்திறன்

மேம்படுத்தப்படும். வேளாண்மை மற்றும் தொழில்துறைகளுக்குமிடையே உரிய தொடர்புகளை ஏற்படுத்தி, பண்ணை சாரா வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஊரக வேலைவாய்ப்பின்மையைக் குறைத்து வறுமையை ஒழிக்கும் நோக்கில், இவ்வரசு ஊரக அடிப்படை வசதிகளை வலுப்படுத்த உத்தேசித்துள்ளது.

மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பைப் பொறுத்தவரை, வேளாண்மைத் துறையும் தொழில் துறையும் பன்னெடுங்காலமாகவே தனித்தனிப் பிரிவுகளாகவே கருதப்பட்டு வந்துள்ளன. ஆயினும், இக்கருத்து தற்போது மாறிவருகிறது. வேளாண்மைத் துறையும் ஒருவித தொழிற்துறையே என்ற கருத்து மேலோங்கி வருகிறது. தொழில்நுட்பம், இயந்திரமயமாக்கல், அறிவியல் முறையிலான பண்ணை நிருவாகம் முதலிய பல்வேறு உத்திகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதன்மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், விளை பொருட்களின் தரத்தை மேம்படுத்தவும், அவற்றின் பயனாக, விவசாயிகளுக்குக் கிடைக்கும் வருமானத்தைப் பெருக்கவும் இயலும் என்று கருதப்படுகிறது. இம்மாநிலத்தில் தோட்டக்கலையையும், உணவுப்பொருள்கள் பதப்படுத்தும் தொழில்களையும் மேம்படுத்தும் வகையில், “வேளாண்–வணிகத்துறை” என்னும் புதியதொரு துறையை ஏற்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. வேளாண்–வணிகத்தையும், ஒப்பந்த அடிப்படையிலான பண்ணைத் தொழில்களையும் மேம்படுத்தும்பொருட்டு, நில உச்சவரம்புச் சட்டங்களைத் தளர்த்துவது பற்றியும் பரிசீலிக்கப்படும்.

இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிலவுகின்ற தட்பவெப்ப மண்டலங்களுக்கு ஏற்ப, வேளாண் நிலப் பயன்பாட்டு உத்தியை மாற்றி அமைத்து வேளாண் தொழிலை மேம்படுத்த வேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது. இம்மாநிலத்தின், மொத்த நிலப்பரப்பின் **43** சதவீதப் பகுதி தற்போது சாகுபடியில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பயிர் செய்ய ஏற்ற **20** இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் மேம்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் எனும் மிகப்பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டம் ஒன்றை ஏற்கனவே அறிவித்துள்ளார். இத்திட்டம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதுடன், மக்களின் பங்கேற்புடன் நுண்ணிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுப் பணியையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

தரிசுநிலச் சீரமைப்புத் திட்டம் மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டதாகும். உறுதியாக மழை பொழியும் பகுதிகளில் அமைந்துள்ள உயர்தர தரிசு நிலங்கள், மூலிகைகள் மற்றும் நறுமணச் செடிகள்




பயிரிடவும், பழத்தோட்டங்களை அமைக்கவும் பயன்படுத்தப்படும். நடுத்தர தரிசுநிலங்களில் சமையல் எண்ணெய் மற்றும் எரிஎண்ணெய் உற்பத்திக்குப் பயன்படும் பாரடைஸ் மரம் (Paradise Tree), ஜட்ரோஃபா (Jatropha) முதலிய எண்ணெய் வித்துத் தாவரங்கள் பயிரிடப்படும். தரம் குறைந்த தரிசு நிலங்களில் மின்சக்தி உற்பத்திக்கு உதவும் மரங்களான காட்டுக்கருவேல் (Prosopis), சவுக்கு (Casurina) போன்ற விறகு மரவகைகள் பயிரிடப்படும். இத்திட்டம், மக்களின் பங்கேற்புடனும் தனியார் துறையின் ஒத்துழைப்புடனும் செயற்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ஐந்து ஆண்டுகளில் கிராமப் பகுதியைச் சேர்ந்த **10** இலட்சம் மக்கள் பயனடையக்கூடும்.

பெரிய அளவிலான நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, மத்திய அரசு, ‘நபார்டு வங்கி’, தேசிய தோட்டக் கலை வாரியம் மற்றும் வெளிநாட்டு நிதியுதவி




நிறுவனங்களிடமிருந்து நிதி பெற, "தமிழ்நாடு நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டு முகவரமைப்பு" என்னும் புதியதோர் அமைப்பு ஏற்படுத்தப்படும். இதன் தொடக்கமாக, நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 200 முதல் 1000 ஏக்கர் (அதாவது 80 முதல் 400 எக்டேர்) பரப்பளவில் பெரிய தோட்டக்கலைப் பண்ணைகளை ஏற்படுத்துதல் மற்றும் சிறந்த நீர்வளப் பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியவற்றுக்கு ஊக்கமளிக்கப்படும். மக்களின் பங்கேற்புடன் கிராமங்களிலுள்ள மேய்ச்சல் நிலங்களையும் கால்நடைத் தீவன ஆதாரங்களையும் பேணிப் பாதுகாக்கவும், அழிந்துவரும் காடுகளை மீண்டும் வளர்ப்பதற்கும் இத்திட்டம் துணைபுரியும்.

தமிழ்நாட்டில் பாசனம் மற்றும் வீட்டுப் பயனுக்கான தண்ணீர்த் தட்டுப்பாடு மிகவும் கடுமையாக உள்ளது.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தனையில் உதித்தவாறு புதிதாக ஏற்படுத்தப்பட உள்ள நீர்வளப் பாதுகாப்புத்துறை உயர்நிலையில், நீர்வளப் பாதுகாப்பு தொடர்பான பணிகளை ஒருங்கிணைக்கும். இத்துறை நீர்க்கசிவுக் குட்டைகள், தடுப்பணைகள் முதலியவற்றின் மூலமாக, மழைநீரைச் சேமிப்பதில் கவனம் செலுத்தும்.


பாசனத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்காமை நம்முடைய விவசாயிகளை அச்சுறுத்தும் முக்கியப் பிரச்சினையாகும். பாசன நீரை சேமிக்கவும், வேளாண்மை மற்றும் தோட்டப்பயிர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் சொட்டுநீர்ப் பாசனத்திற்கு ஊக்கமளிக்க இவ்வரசு உத்தேசித்துள்ளது. பாசனத் திட்டத்தின் செயல் திறனை அதிகரிக்கும் விதத்தில், பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பாசனப் பகுதிகளில் நீர் நிருவாக நடைமுறைகள் சீரமைக்கப்படும். புதிய சொட்டுநீர்ப்பாசனத்




திட்டத்திற்காக ரூபாய் 18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாநிலம் முழுவதும், மண்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்காக ரூபாய் 23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டில் எங்களால் அறிமுகப்படுத்தப் பட்டு, தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் "நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்" (Water Resources Consolidation Project) 31–3–2002ஆம் நாளுடன் முடிவடைகிறது. முதல் திட்டத்தின் தொடர்ச்சியாக, நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம்–II என்கிற திட்டத்திற்கு ஏற்பளிக்குமாறு இவ்வரசு உலக வங்கியைக் கேட்டுக்கொள்ளும். முதல்கட்டப் பணியில் விடுபட்டுப்போன பாசனத் திட்டத்தின்கீழ் வரும் ஏரிகள் (System tanks), பாசனத் திட்டத்தின்கீழ் வராத ஏனைய ஏரிகள் (Non-system tanks), உயிரின வாழ்க்கைச் சூழல் புனரமைப்புப் பணிகள் மற்றும் பயனாளிகளின் தீவிர பங்கேற்புடன் செயற்படுத்தப்படும் அனைத்து ஏரிகள், குளங்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை நவீனப்படுத்தி, கொள்ளளவைப் பெருக்கும் பெருந்திட்டம் ஆகியவை இந்த இரண்டாம் திட்டத்தில் அடங்கும்.

வெளிமாநிலங்களுக்கு நெல்லை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை அகற்றி, சாகுபடி செய்யும் நெல்லுக்கு சிறந்த விலை பெற அனுமதிக்க வேண்டும் என்பது காவிரி வடிநிலப்பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையாகும். டி.கே.எம்–9 வகை நெல் மற்றும்



அரிசியைக் கட்டுப்பாடு ஏதுமின்றி எடுத்துச்செல்ல அனுமதிப்பதென அரசு அண்மையில் எடுத்துள்ள முடிவு விவசாயிகளுக்கு பெரும் பயனளிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இவ்வரசு, விவசாயிகளுக்குத் தொடர்ந்து குறைந்தளவு ஆதரவு விலை கிடைப்பதை உறுதி செய்யும். இதன்பொருட்டு, நடப்பு நிதியாண்டில், வடிநிலப் பகுதியில் நெல் கொள்முதல் செய்வதற்கு, நெல் உற்பத்தி ஊக்கத்தொகையாக ரூபாய் 50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன்பெற்று திருப்பிச் செலுத்தாமல் உள்ள தவணை கடந்த நிலுவைத் தொகையைத் திருப்பிச்செலுத்த, விவசாயிகளுக்கு





ஊக்கமளிக்கும் வகையில், அவர்கள் செலுத்தவேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டித் தொகையான ரூபாய் 310.50 கோடியைத் தள்ளுபடி செய்வதென இவ்வரசு முடிவு செய்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதற்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு உள்ளது. விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளுக்குத் திருப்பிச்செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டியை இவ்வரசே விவசாயிகள் சார்பில் செலுத்திவிடும்பொருட்டு, நடப்பு நிதியாண்டில் ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு, கிராமப்புற மக்களுக்கு ஒரு கூடுதல் வருமான ஆதாரமாக விளங்கி வருகிறது. கால்நடைகளின் தரத்தை உயர்த்தும் பணிகளுக்கும், சிறந்த கால்நடை மருத்துவப் பணிகளுக்கும் புதிய ஊக்கம் அளிக்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது.


கால்நடைகளைச் சரிவர வளர்ப்பதற்கு, கால்நடைத் தீவனம் போதிய அளவில் கிடைக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தொன்றுதொட்டு இருந்துவரும் மேய்ச்சல் நிலங்கள், கட்டுமானப் பணிகளுக்காகவும் ஏனைய பணிகளுக்காகவும் வரையறையின்றி பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மேய்ச்சல் நிலப்பகுதி தவறாகப் பயன்படுத்தப்பட்டு குறைந்து வருகின்ற நிலையை மாற்றிட, புறம்போக்கு மேய்ச்சல் நிலத்தை வேறெந்தவகை நிலமாகவும் மாற்றக் கூடாதென்று அரசு முடிவு செய்துள்ளது. அவ்வாறு மாற்றவேண்டுமென்ற கட்டாயம் ஏற்படும்போது, மாற்றப்படும் நிலத்திற்குச் சமமான பரப்புள்ள வேறு நிலம் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்த அளிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும். கால்நடைத் தீவன உற்பத்தியைப் பெருக்க, தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பொருத்தமான நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக மேம்படுத்தப்படும்.

கிராமப் பகுதிகளில் பண்ணை வருமானத்தைப் பெருக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் தம்பதிகளுக்கு கால்நடைப் பராமரிப்பு முறைகளில் பயிற்சி





அளிக்கப்பட்டு அவர்கள் மூலமாக விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வகை செய்கின்ற டென்மார்க் நாட்டின் நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் தற்போது 49 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்தில் கொண்டு, அடுத்த ஐந்தாண்டுகளில், எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மொத்தம் ரூபாய் 3.36 கோடி செலவில் இதனை விரிவுபடுத்த இவ்வரசு கருதியுள்ளது.

தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை நடப்பாண்டில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் நீட்டிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக ரூபாய் 12 கோடி நிதி ஒதுக்கப்படும்.




மீனளத்துறைக்கு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. இராமேஸ்வரத்தில், ரூபாய் 53.86 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம் ஒன்று அமைக்கவும், ரூபாய் 10.60 கோடி செலவில் பழையாறு மீன்பிடித் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை மேற்கொள்ளவும் மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கான தற்போதைய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், கடற்கரைக்கு அருகில் வசிக்கும் 3 சென்ட் நிலம் வைத்துள்ள மீனவர்கள் மட்டுமே




பயனீட்டாளர்களாகக் கருதப்படுகின்றனர். இத்திட்டத்தை, நிலமற்ற, கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கும் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கும் நீட்டிப்பதென அரசு முடிவு செய்துள்ளது. இவர்களுக்கென ஒவ்வொன்றும் ரூபாய் 37,000 செலவில், 4000 வீடுகள் கட்டித்தரப்படும்.

மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ், அளிக்கப்படும் பங்குத்தொகை நடைமுறையை மத்திய அரசு 1-4-2000 முதல் திருத்தியமைத்துள்ளது. இப்புதிய திட்டத்தின்படி,




மீனவர்கள் 8 மாதங்களுக்கு செலுத்தவேண்டிய பங்குத்தொகை ரூபாய் 45லிருந்து ரூபாய் 75 ஆகவும், மீன்பிடித்தொழில் இல்லாத 4 மாத காலத்தில் மீனவர்களுக்கு அளிக்கப்படும் நிவாரணத்தொகை ரூபாய் 1080லிருந்து ரூபாய் 1200 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மீன்பிடித் தொழில் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு ஏற்படும் கூடுதல் சுமைக்கு ஏற்ப இந்த நிவாரணத்தொகை இல்லாத நிலை உள்ளது. ஆகவே, மீனவர்கள் 8 மாத காலத்திற்கு மாதமொன்றுக்கு ரூபாய் 50 மட்டும் செலுத்தினால் போதும் என்றும், எஞ்சிய பங்குத்தொகை ரூபாய் 25ஐ மாநில அரசே ஏற்கும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது, கண்ணுக்குத் தெரியாத அயல்நாட்டு கடல் எல்லைக்கோட்டை தெரியாமல் கடந்துவிடும் நம் மீனவர்கள், ஸ்ரீலங்கா நாட்டு கடற்படையால் சுட்டுத்தள்ளப்படும் நிகழ்வுகள், அதிகரித்துக்கொண்டே வருகின்றன. நம் மீனவர்கள் நம்முடைய மீன்பிடிக் கடல் மண்டலப் பகுதியிலேயே மீன்பிடிக்க இயலும்வகையில், ஒவ்வொரு நான்கு கடல் மைல் தொலைவிற்கு ஒன்று வீதம், கடலில் பகலும் இரவும் கடல் எல்லை தெரியும் வகையில் வழிகாட்டும் விளக்குடன்கூடிய மிதவைகளை நிறுவ இவ்வரசு உத்தேசித்துள்ளது.

**ஊரக வளர்ச்சி**

இவ்வரசு முன்னுரிமை அளித்து வரும் பணிகளில் விரைவான கிராமப்புற மேம்பாடு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 12619 கிராம ஊராட்சிகள் அனைத்திலும், படிப்படியாக, மகளிர் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில், ஒருங்கிணைந்த மகளிர் துப்புரவு வளாகங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு வளாகத்திலும், போதிய மின்வசதி மற்றும் தண்ணீர் வசதியோடு அமைக்கப்பட்டுள்ள கழிப்பிட மற்றும் குளியல் வசதிகள் சுமார் ரூபாய் 2 இலட்சம் செலவில் செய்துதரப்படும். நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்திற்காக ரூபாய் 92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வளாகங்களில் அவசியமான இடங்களில் சிறு கழிவுநீர் சுத்திகரிப்புத் தளவாடங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறு பற்றியும் அரசு ஆராயும்.

கிராமப் பகுதிகளில் மக்களிடையே சுய வேலைவாய்ப்பு மற்றும் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இளைஞர் சுய உதவிக் குழுக்களை அமைக்க, இவ்வரசு, தக்க நடவடிக்கை எடுக்கும். இதனால், இச்சுய உதவிக் குழுக்களின் குடும்ப வருமானம் அதிகரிக்கும்; மேலும், இளைஞர்கள், தங்களின் ஆற்றலை ஆக்கபூர்வமான பணிகளில் செலுத்திட வாய்ப்புக் கிட்டும். மகளிரின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் அவர்களிடம் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கவும் விழையும் தற்போதைய சேமிப்பு இணைந்த சிறுகடன் வசதித் திட்டம் மேலும் சீரமைக்கப்பட்டு, விரிவுபடுத்தப்படும்.

கிராம நிருவாக அதிகாரிகளுக்கு அலுவலக கட்டிடம் இல்லாமை, அவர்கள் தங்கள் கடமையை சரிவர

நிறைவேற்றத் தடையாக இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். மேலும், இதனால் கிராம மக்கள் தங்கள் குறைகளைத் தீர்க்க கிராம நிருவாக அதிகாரிகளை எளிதில் அணுக முடியாத நிலையில் உள்ளனர். எனவே, கிராம நிருவாக அலுவலர்களுக்காக, ஒவ்வொரு ஊராட்சி




அலுவலகத்தை ஒட்டி ரூபாய் 60 ஆயிரம் செல்வில் அலுவலக கட்டிடம் கட்டித்தர அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூபாய் 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் சுமார் 4000 அலுவலகக் கட்டிடங்கள் கட்டப்படும்.


சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 77 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இதனை ரூபாய் 82 இலட்சமாக உயர்த்த இவ்வரசு முடிவு செய்துள்ளது என்பதும், இதற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 192.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்று நம்புகிறேன்.

பெரும்பாலான கிராம ஊராட்சிகளில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமலேயே கிராமச் சந்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நபார்டு வங்கியின் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியுதவியுடன் குடிநீர் வசதிகள், விளக்கு வசதி, பொதுக்கழிப்பிடம், இணைப்புச் சாலைகள் ஆகிய அடிப்பட்ட வசதிகளை இக்கிராமச் சந்தைகளில் ஏற்படுத்திக் கொடுக்க இவ்வரசு கருதியுள்ளது. இத்தகைய வசதிகள் செய்துதர ஒவ்வொரு கிராமச் சந்தைக்கும் ரூபாய் 7.48 இலட்சம் செலவிடப்படும்.

**சுற்றுச்சூழல்**


வனவளங்களைப் பாதுகாத்து மேம்படுத்துதல், தரிசு நிலங்களை உரிய அளவுக்குப் பயன்படுத்துதல், நீர்வரத்துப் பகுதிகளை மேம்படுத்துதல், பல்வகை உயிரினங்களைப் பாதுகாத்தல் போன்ற உயிரின வாழ்க்கைச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான அனைத்து பிரச்சினைகளிலும் ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். சுற்றுச்சூழல் பாதுகாத்தல் மற்றும் பேணுதல் ஆகியவற்றில் இந்த அரசு முழுமையான ஈடுபாடு காட்டும்.

இம்மாநிலத்தில் வனப்பகுதி போதிய அளவில் இல்லாதது குறித்தும் காடுகள் அருகி வருவது குறித்தும் இவ்வரசு கவலை கொண்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளில் பெரிய அளவில் காடு வளர்ப்புத் திட்டம் தொடங்க, இவ்வரசு




உத்தேசித்துள்ளது. இம்மாநிலத்தில் நிறைவேற்றப் பட்டு வரும் தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில், ரூபாய் 100 கோடி செலவில், 75250 எக்டேர் பரப்பளவில், வனத்தோட்டங் களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூட்டு வன நிருவாகக் கோட்பாட்டின்கீழ் 200 கிராமங்களில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளின் தேவைக்காக, இத்தொகையில் ஒரு பகுதி பயன்படுத்தப்படும்.


சுற்றுச்சூழலைப் பாதுகாத்து பேணிக்காக்க அரசு மேற்கொள்ளும் முயற்சிகளின் வெற்றி, மக்களின் விழிப்புணர்வையும் ஒத்துழைப்பையும் பொறுத்தே அமைகிறது. மாவட்டங்களில் உயிரின வாழ்க்கைச் சூழல் மன்றங்களை புதிதாக ஏற்படுத்துவதன் மூலமும் ஏற்கெனவேயுள்ள மன்றங்களை வலுப்படுத்துவதன் மூலமும், இம்மாநிலத்தில், இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இயக்கம் ஒன்றைத் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது.




பிளாஸ்டிக் பொருள்களைத் தொடர்ந்து பயன்படுத்தி வருவதால், நமது சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் கேடுகளை அரசு உணர்ந்துள்ளது. அன்றாட வாழ்வில், பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்த வேண்டாமென்று மக்களுக்கு அறிவுறுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

## தொழில்கள்

மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழில் துறையின் வளர்ச்சி, **1991–96** காலகட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு





**6.92** சதவீதமாக இருந்தது; ஆனால், அது கடந்த ஐந்து ஆண்டுகளில் சராசரியாக **4.14** சதவீதமாகச் சரிந்துள்ளது. இந்தச் சரிவைத் தடுத்து நிறுத்தி இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் மிகவும் முன்னேறிய மாநிலம் என்ற நிலைக்குத் தமிழ்நாட்டை உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிபூண்டுள்ளார்.

தொழில் உற்பத்தியிலும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் ஏற்றுமதிகளிலும் சிறுதொழில் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு போட்டிகள் அதிகரித்துவரும் சூழலில், சிறுதொழில் துறையின் வளர்ச்சிக்கும் துடிப்பான செயல்பாட்டுக்கும் அவற்றின் உற்பத்திப் பொருள்களின் தரத்தை உயர்த்துவதற்கும் உறுதுணையாக இருப்பதே இவ்வரசு பின்பற்றும் நடைமுறைத் திறனாக இருக்கும்.


நிதித்துறையின், **19–2–1997** ஆம் நாளிட்ட **75** ஆம் எண் அரசாணை தமிழ்நாட்டில், அரசின் கொள்முதல்களில், சிறுதொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு அளிக்கப்பட்டுவந்த விலை மற்றும் கொள்முதல் சார்ந்த முன்னுரிமைக் கொள்கைகளை ரத்து செய்ய வழி வகுத்தது. சிறுதொழில் வளர்ச்சிக்கு குந்தகமாக இருந்த இந்த அரசாணையைத் திரும்பப் பெறப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்திருந்தார். இதை நிறைவேற்றும் வகையில் நடப்பு சட்டமன்றப்பேரவை கூட்டத்தொடரில் தகுந்த சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும். இச்சட்டம், அரசின் கொள்முதல்களில் விலை மற்றும் கொள்முதல் வகையில் இம்மாநிலத்திலுள்ள சிறுதொழில் துறைக்கு மட்டுமல்லாது, சொந்தமாக உற்பத்திப் பிரிவுகளைக் கொண்டுள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டேன்செம்), தமிழ்நாடு சிறுதொழில்கள் நிறுவனம் (டான்சி) போன்ற அரசுத்துறை நிறுவனங்களுக்கும் முன்னுரிமை அளிக்க வகைசெய்யும். இம்மாநிலத்தில், தற்போது நலிவுற்ற நிலையிலுள்ள பெரும் எண்ணிக்கையிலான சிறுதொழில் பிரிவுகளுக்குப் புத்துயிரளிக்கவும் அதன்மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு மீண்டும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் இந்நடவடிக்கை உதவுமென நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

ஆவடிக்கு அருகில் திருமுல்லைவாயிலில், **290** ஏக்கர் பரப்பளவில் சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) மூலம் சிறு மற்றும் குறு தொழில்களுக்கான புதிய தொழிற்பேட்டை ஒன்றை




உருவாக்கும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. சிறு மற்றும் குறுதொழில் துறைகளில் பெண்களுக்கென்றே தனியாக தொழில் பூங்கா ஒன்றை சென்னைக்கு அருகில் ஏற்படுத்த தற்போதைய அரசு ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது. இது தவிர, மகளிர் தொழில் முனைவோருக்கென நான்கு தொழில் பூங்காக்கள் ஏற்படுத்தப்படும்.

புதிய தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிப்பதற்காக ரூபாய் 4 கோடி மதிப்பீட்டு செலவில், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை இவ்வரசு ஏற்படுத்த உள்ளது. தென் இந்தியாவிலேயே இந்த வகையிலான முதல்




நிறுவனம், இதுவாகத்தான் இருக்கும். இந்நிறுவனம், சிறு மற்றும் குறுதொழில்களில் ஈடுபட்டுள்ள, புதிய மற்றும் தற்போதுள்ள தொழில் முனைவோரின் தேவைகளையும் நிறைவு செய்யும். இத்திட்டத்திற்கு, மாநில அரசின் பங்காக ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.


வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குள்ள பெருத்த வாய்ப்பினைக் கருத்தில்கொண்டு, இவ்வரசு, இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்துள்ளது. முற்போக்கான தொழில் கொள்கை ஒன்று விரைவில் வகுக்கப்படும். மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில், வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்கள் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆளுநர் உரையில் உறுதியளித்தவாறு "வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் தொழில் முனைவோர் கூட்டமைப்பு" ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இம்மாநிலத்தில் முதலீடுகளைக் கவருவதற்கு உகந்த சூழலை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. ஏனைய முறைப்படுத்தும் துறைகளுடன் கலந்தாலோசித்து, அடிப்படை நிலையில் தொழில் பிரிவுகளின் செயல்பாட்டினை நெறிப்படுத்தும் சட்டங்கள், விதிகள் மற்றும் விதிமுறைகள் ஆகியவற்றைச் சீரமைக்க அரசு கருதியுள்ளது.

## கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

விரைவான மற்றும் நீடித்தப் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய போதிய தரமான அடிப்படை வசதிகள் அளிப்பதில் இவ்வரசு எண்ணற்ற சவால்களைச் சந்தித்து வருகிறது. இவற்றுள், தகவல் தொழில்நுட்பம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, எரிசக்தி போன்ற துறைகளும் அடங்கும்.

இந்தியத் தகவல்–தொழில்நுட்ப வரைபடத்தில், தமிழ்நாடு முதன்மையான இடம்வகிக்க இவ்வரசு உறுதிசெய்யும். "எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை" புதிதாக மாற்றி அமைத்து "எம்.ஜி.ஆர் அறிவு நகர்" என்று பெயர் மாற்றம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருதியுள்ளார். இம்மாநிலத்திலேயே, நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான சிறந்த களனாக "எம்.ஜி.ஆர் அறிவு நகர்" அமையும்வகையில் பெருந்திட்டம் ஒன்று புதிதாக வகுக்கப்படும். மேலும், அங்கு உலகத்தரம் வாய்ந்த மாநாட்டுக் கூடங்கள், அறிவுப் பூங்காக்கள் மற்றும் ஓட்டல்கள் போன்ற





வசதிகளும் உருவாக்கப்படும். தற்போதுள்ள டைடல் பூங்காவிற்கு அருகிலேயே புதிய டைடல் பூங்கா–II அமைக்க இவ்வரசு கொள்கையளவில் இசைவு அளித்துள்ளது. இவ்வளர்ச்சிப் பணிகளினால் சென்னை, இம்மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பப் புரட்சி மையமாக உருவெடுக்கும்.

மென்பொருள் தொழிற்பிரிவுகள் அமைக்கத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காக, இவ்வரசு, மும்முனை அணுகுமுறை ஒன்றைப் பின்பற்ற முடிவு செய்துள்ளது. முதலாவதாக, சென்னையிலும், இம்மாநிலத்தின் ஏனைய மாநகரங்களிலும் "டைடல் பூங்காவின்" மாதிரியான அடிப்படையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க, அரசே முயற்சிகளை மேற்கொள்ளும். இரண்டாவதாக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் சாத்தியமான பங்களிப்புடன் சென்னையின் புறநகர்ப்பகுதிகளிலும் ஏனைய முக்கிய நகரங்களிலும் மென்பொருள் பூங்காக்களை ஏற்படுத்த தனியார் துறையினருக்கு ஊக்கமளிக்கப்படும். மூன்றாவதாக, வெளிநாட்டு நிறுவனங்கள் உட்பட, மென்பொருள் நிறுவனங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை தனியார் துறையைச் சார்ந்த நிலம் மற்றும் கட்டுமான மேம்பாட்டாளர்களுக்கு, "டைடல்" (TIDEL) அமைப்பு வழங்கி உதவிடும்.


விரைவான வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சிக்கு உதவும் அறிவுக் களஞ்சியமாக உயிரியல் தொழில்நுட்பம் உருவெடுத்து வருகிறது. அறிவுத் துறையில் இது ஒரு மிக முக்கியமான வளர்ச்சியாகும். உயிரியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு துணைசெய்யும் வாய்ப்புகளை உருவாக்க இவ்வரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இம்மாநிலத்தில் ரூபாய் **62.50** கோடி மதிப்பீட்டுச் செலவில், முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பது தொடர்பாக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் **25–8–2001** அன்று அமெரிக்காவிலுள்ள கார்னெல் பல்கலைக்கழகத்துடன் தொழில்நுட்பப் பணி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடக்




கருதியுள்ளது. இப்பூங்கா, கார்னெல் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் செயல்படும் தனிச் சிறப்புவாய்ந்த ஆய்வகங்களைக் கொண்டிருக்கும். உயிரியல் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மரபணுசார் துறைகளில் உலகத்தரம் வாய்ந்த மரபணுசார் மையம் (Genomic Centre) ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான உடன்படிக்கை ஒன்று கடந்த ஆண்டு கையெழுத்தாகியது. இது நம்நாட்டில் சுகாதாரம் மற்றும் மருந்தாக்கத் தொழில்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். சென்னை அருகே கடல்சார் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றையும், திண்டுக்கல் அருகே மூலிகைத் தாவரங்கள் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றையும் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளையும் இவ்வரசு ஆய்வுசெய்து வருகிறது.


தொழில் முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மறுமலர்ச்சி ஆகியவை தொடர்ந்து சிறந்த முன்னேற்றத்தினை அடைந்திட சாலைவசதிகள்




முக்கியமான அடித்தளமாக விளங்குகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியவாறு, சாலைகள் மேம்பாடு குறித்து விரிவான கொள்கைத் திட்டம் ஒன்று வகுக்கப்படும். இதில், நெடுஞ்சாலைகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு குறித்த பொறியியல் மற்றும் பொருளாதாரக் கூறுகள் மட்டுமல்லாது சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும். சாலைகள் குறித்த புதிய கொள்கையின் நோக்கங்களில் பின்வருவனவும் அடங்கும்:–

- சமூக – பொருளாதாரப் பயன்களை அதிகரிக்கும் வகையில் சாலைமேம்பாடு.
- அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் நிதி ஆதாரங்களுக்கு வலுவூட்டுதல்.
- நவீனத் தொழில்நுட்பங்கள் மூலம் சாலைகளின் கட்டுமானம் வடிவமைப்பு, திட்டமிடல் மற்றும் செயலாக்கத்தின் தரத்தை உயர்த்துதல்.
- நெடுஞ்சாலைச் சொத்துக்களையும் ஆதாரங் களையும் சிறந்தமுறையில் நிருவகித்தல்.

மாநில நெடுஞ்சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள், ஏனைய மாவட்டச் சாலைகள்




ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தமிழ்நாடு சாலைத்துறைத் திட்டத்திற்கு உதவிசெய்யுமாறு, இவ்வரசு, **1994**ல் உலக வங்கியைக் கேட்டுக் கொண்டது. ஐந்தாண்டு இடைவெளிக்குப் பின்னர், புதிய எழுச்சியுடன் இத்திட்டத்தை மேற்கொள்ளும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்துள்ளது. இதற்கு மொத்தம் ரூபாய் **1900** கோடி திட்ட செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை, உலக வங்கி விரைவிலேயே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.


காவிரி வடிநில மாவட்டங்களில் நம்நாடு விடுதலை அடைவதற்கு முன்பு கட்டப்பட்ட பல பாலங்கள் பெருகி வரும் போக்குவரத்தை சமாளிக்க இயலாத நிலையில் உள்ளன. இத்தகைய **204** பாலங்களை தனியார் பங்கேற்புடனும், நபார்டு வங்கியின் உதவியுடனும் ரூபாய் **200** கோடி செலவில் புதுப்பித்துக் கட்ட இவ்வரசு கருதியுள்ளது.

பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சிக்கு, போதிய அளவு மின்சக்தி கிடைப்பது மிகவும் இன்றியமையாததாகும். இதற்காக, மின் உற்பத்தி அளவை உயர்த்தவும், மின் அனுப்பீடு மற்றும் விநியோகத்தை மேம்படுத்தவும் தொடர்ந்து முதலீடு செய்ய வேண்டியுள்ளது. **1996**ல் நாங்கள் ஆட்சியிலிருந்து விலகியபோது, தமிழ்நாடு மின்வாரியத்தில் வருவாய் உபரியாக இருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதிநிலை தொடர்ந்து சீர்கேடடைந்து **2001–02**ல் வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் **3000** கோடியை எட்டியுள்ளது. நடப்பு நிதியாண்டில், தமிழ்நாடு மின்வாரியத்திற்கு இலவச மற்றும் மானிய விலையில் மின்சாரம் வழங்குவதால் ரூபாய் **4938** கோடி இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு பெருத்த அளவுக்கு தொடர்ந்து பற்றாக்குறை ஏற்படுவதை நீண்ட காலத்திற்குத் தாங்க முடியாது. மின்துறையைப் பாதித்துவரும் கோளாறுகள் குறித்து மேலும் விரிவாக விவாதிக்கவும், அறிந்து கொள்ளவும் இயலும் வகையில் தமிழ்நாடு மின்வாரிய நிதிநிலை பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மின்வாரியத்திற்கு குறைந்தளவு ரூபாய் **2000** கோடியாவது மானியமாக வழங்கவேண்டுமென, அவ்வாரியம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால், அரசின் நெருக்கடியான நிதிநிலைமை காரணமாக, **2001–02**ல், ரூபாய் **500** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் தொடர்ந்து ஏற்பட்டு வரும் இழப்பின் காரணமாக பெரும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. இதற்கான காரணங்கள் வெள்ளை அறிக்கையில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கான இலவசப் பேருந்துப் பயணச்சீட்டுத் திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூபாய் **165** கோடி உதவித்தொகை வழங்கக் கருதப்பட்டுள்ளது. மேலும், நிருவாகச் செலவைக் குறைக்கும் நோக்கத்துடன் பல்வேறு அரசுப் போக்குவரத்து நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கான வாய்ப்புகளையும் இவ்வரசு ஆராய்ந்து வருகிறது.

**சுற்றுலா**


கடந்த ஐந்தாண்டுகளில் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு உரிய முக்கியத்துவம் தரப்படவில்லை. இம்முக்கியமான துறைக்காக **1996–97** வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் **4.89** கோடி, **2000–01**ல்




ரூபாய் **5.50** கோடி என்ற அளவில் மட்டுமே ஒதுக்கப்பட்டது. மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கான கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளதற்கு ஏற்ப, நடப்பு வரவு–செலவுத் திட்டத்தில், சுற்றுலாத்

துறைக்கு மொத்தம் ரூபாய் **17.50** கோடி என்ற அளவுக்கு கடந்த ஆண்டுகளைவிட கணிசமாக உயர்த்தி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இவ்வொதுக்கீடு மேலும் அதிகரிக்கப்படும்.

சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டில் உரிய கவனம் செலுத்த இவ்வரசு கருதியுள்ளது. புனிதத்தலங்களிலும், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய




இடங்களிலும் நட்சத்திர ஓட்டல்களை அமைப்பதில் தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதும் இதில் அடங்கும். இது தவிர, பல்வேறு சுற்றுலா மையங்களில் தற்போதுள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், புதிய வசதிகளை உருவாக்கவும் வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் **5** கோடி ஒதுக்கப்படுகிறது. தகுந்த விளம்பரம்மூலம் இம்மாநிலத்திற்கு சுற்றுலா பயணிகளை அதிக அளவில் ஈர்ப்பதற்காக, ரூபாய் **5.5** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரையில் மீண்டும் ஒலி–ஒளிக் காட்சிகளைத் தொடங்கவும், காஞ்சீபுரம், தஞ்சாவூர், மாமல்லபுரம் ஆகிய சுற்றுலா மையங்களில் ஒலி–ஒளிக் காட்சிகளை அறிமுகப்படுத்தவும் இவ்வரசு கருதியுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காக விரிவான, சிறப்பான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுக்க இவ்வரசு உத்தேசித்துள்ளது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தீவிரமாகவும், நவீன அணுகுமுறைகள்மூலமும் விளம்பரங்களை மேற்கொள்வதும் இத்திட்டத்தில் அடங்கும். இந்த சுற்றுலாத் திட்டங்களில் இயற்கைச்சூழல் நிறைந்த சுற்றுலா மையங்கள், ஆன்மீக சுற்றுலா மையங்கள் மற்றும் வீரதீரச் செயல்கள் உள்ளடங்கிய சுற்றுலா மையங்கள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**கல்வி**

“அனைவருக்கும் தொடக்கக் கல்வி” என்ற இலட்சியத்தை எய்தும் பொருட்டு, குழந்தைகள் பாதியிலேயே படிப்பை விட்டுவிடும் போக்கை முற்றிலுமாக ஒழிப்பதிலும், நூற்றுக்கு நூறு சதவீதம் குழந்தைகள் பள்ளியில் சேருவதை உறுதி செய்வதிலும் இவ்வரசு போதிய கவனம் செலுத்தும்.





இம்மாநிலத்தில் எஞ்சியுள்ள **22** மாவட்டங்களில், மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தைப் போன்றே, மைய அரசின் “அனைவருக்கும் கல்வி” (Sarva Shiksha Abhiyan) என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது.

பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுவிட்ட குழந்தைகளையும், பள்ளியில் இதுவரை சேராத குழந்தைகளையும் அரசின் கல்வி நிறுவனங்களில் சேர்ப்பதை உறுதிசெய்யும் நோக்கத்தோடு, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடி மேற்பார்வையின்கீழ் பேரியக்கம் ஒன்று தொடங்கப்படும்.

மாணவர்களிடையே பள்ளிப் படிப்பைத் தொடரவும், பாதியிலேயே பள்ளிப்படிப்பை விட்டு விலகுவதைக் குறைக்கவும் தரமான கல்விமுறை பெரும்பங்கினை வகிக்கிறது. தொடக்கப் பள்ளியாசிரியர்களின் அறிவாற்றலைப் பெருக்கி, திறமையை வளர்க்க அவர்கள் அனைவருக்கும் மூன்றாண்டுகளில் பயிற்சி அளிக்கும் பெருந்திட்டம் ஒன்றைத் தொடங்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும், இப்பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இனிமேல், நினைவுகூர் பயிற்சியில் பங்குபெறுபவர்களுக்கு மட்டுமே, ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படும். பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்படும். தொலைதூர மலைப்பகுதிகளிலுள்ள அரசினர் பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க, அப்பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்வதில் பெற்றோர்–ஆசிரியர் சங்கங்களுக்கு அதிகாரம் அளிக்க இவ்வரசு கருதியுள்ளது.

நம்முடைய பள்ளிகளில் காணப்படும் அடிப்படை வசதிகளின் தரம் மெல்ல மெல்ல சீரழிந்து வருகிறது. அரசினர் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், போதுமான வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், போதிய குடிநீர் வசதிகள் மற்றும்





கழிப்பிட வசதிகள் இல்லை. நம்முடைய பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியத்தின்கீழ் (Rural Infrastructure Development Fund) வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியிடமிருந்து (NABARD) நிதியுதவி பெறக் கருதியுள்ளோம். முதற்கட்டமாக, நடப்பாண்டில் இந்நோக்கத்தை நிறைவேற்றிட, ரூபாய் 30 கோடி கடன் பெற ஆவன செய்யப்படும்.

நம்முடைய குழந்தைகள் அனைவரும் எளிதில் சென்றுவர இயலும் தொலைவில், பள்ளிகளை ஏற்படுத்த இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, நடப்பாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசு நடத்தும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில், பயிற்சி ஆசிரியர் சேர்க்கைக்கு, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி, மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார். ஏனைய நிறுவனங்களில் அந்தந்த நிருவாகமே இந்தப் பணிகளை மேற்கொண்டுள்ளது. கடந்த காலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டு, நடப்புக் கல்வியாண்டிலிருந்து, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில், பயிற்சி ஆசிரியர் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளர நடைமுறையை (Single Window System) அறிமுகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

அகில இந்தியப் பணிகளிலும் மத்திய அரசுப் பணிகளிலும் பெண்கள் பெரும் எண்ணிக்கையில் சேருவதை ஊக்கப்படுத்த, அவர்களுக்கென்றே, சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக இரண்டு பயிற்சி மையங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த, மத்தியத் திட்டக்குழு மற்றும் மத்திய அரசின் நிதியுதவியைப் பெற இவ்வரசு முயற்சி எடுக்கும்.




**விளையாட்டு மேம்பாடு**

விளையாட்டுகள் நம்முடைய கல்வித் திட்டத்தின் ஒருங்கிணைந்த அங்கமாக விளங்குகின்றன. நம்முடைய இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் விளையாட்டுக்கான அடிப்படை வசதியை மேம்படுத்த, இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. இளைஞர்களிடம் காணப்படும் விளையாட்டுத் திறமையைக் கண்டறிந்து, ஊக்கமளிக்க, போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அடிப்படை வசதிகளையும் விளையாட்டுத் திறமையையும் பொறுத்தவரையில், சென்னையை உலகத்தரம் வாய்ந்த ஒரு விளையாட்டு மையமாக மாற்றுவதே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகும்.

தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த வீரர்களுக்காக, மாநிலத்தின் சீருடைப் பணிகளில் 10 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க இவ்வரசு கருதியுள்ளது. இது, தற்போது ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பின்பற்றப்பட்டு வரும் இடஒதுக்கீட்டு முறைக்கு இணக்கமாக இருக்கும். அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள், மின்வாரியம் மற்றும் ஏனைய பொதுத்துறை நிறுவனங்களிலுள்ள விளையாட்டுக் குழுக்களுக்குப் புத்துயிர் ஊட்டி, ஊக்கமளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.


“உலக அளவில் போட்டியிடும் திறனைக் கண்டறியும் திட்டம்” (World Beaters Talent Spotting Scheme) எனும் புதியதொரு திட்டமொன்றை அறிமுகப்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஆறு முதல் எட்டாம் வகுப்புகளில் பயிலும்

மாணவர்களிடம், குறிப்பிட்ட விளையாட்டுகளில் காணப்படும் திறமைகள், விரிவான பல சோதனைகள்மூலம் கண்டறியப்படும். குறிப்பிட்ட விளையாட்டுகளில் தேவையான திறமை பெற்ற





மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கமளிக்க இத்திட்டம் உதவும்.

நம்முடைய மாநிலத்தில் விளையாட்டுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மிக மோசமாக




உள்ளன. இத்தகைய குறைகளைக் களையும் பொருட்டு, தனியார் பங்கேற்புடன் அனைத்து விளையாட்டரங்குகளையும் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணியை மேற்கொள்ள இவ்வரசு கருதியுள்ளது. சென்னையிலுள்ள ஹாக்கி விளையாட்டரங்கில் ஒளிவிளக்குகளும், செயற்கைப் புல்தரைகளும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நம்முடைய மாண்புமிகு. முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு பன்னாட்டுப் போட்டி விளையாட்டுகளிலும் தேசிய அளவிலான போட்டிகளிலும் வெற்றிபெற்று நமது நாட்டிற்கு பெருமைசேர்க்கும் விளையாட்டு வீரர்கள் அனைவரையும் இவ்வரசு கௌரவிக்கும். ஒலிம்பிக் மற்றும் உலக விளையாட்டுப் போட்டிகளில் தங்கம்,





வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வெல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு முறையே ரூபாய் 1 கோடி, ரூபாய் 50 இலட்சம், ரூபாய் 25 இலட்சம் பரிசுத்தொகை வழங்கப்படும். ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வெல்லும் விளையாட்டு வீரர்கள் முறையே ரூபாய் 20 இலட்சம், ரூபாய் 15 இலட்சம், ரூபாய் 10 இலட்சம் பரிசுத்தொகை பெறுவர். தேசிய அளவில் தனித்தனியான வியைாட்டுப் போட்டிகளில் மேற்சொன்னவாறு பதக்கங்களை வெல்பவர்களுக்கு முறையே ரூபாய் 1 இலட்சம், ரூபாய் 50,000, ரூபாய் 25,000 பரிசுத்தொகை வழங்கப்பட்டு சிறப்பு செய்யப்படும். தேசிய அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் குழுக்களுக்கு முறையே ரூபாய் 20,000, ரூபாய் 15,000, ரூபாய் 10,000 பரிசுத்தொகை வழங்கப்படும்.

**மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலன்**


மக்களுக்குத் தரமான, தங்குதடையில்லாத மருத்துவ வசதிகள், அவர்களின் செலவிடும் சக்திக்குக்கேற்ப கிடைக்கச் செய்ய வேண்டுமென்பது இவ்வரசின் தலையாய நோக்கங்களில் ஒன்றாகும். மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பதில் இம்மாநிலத்தில் கிடைக்கும் மருத்துவ அடிப்படை வசதி, முக்கியப் பங்காற்றுகிறது.

கிராமப்புறப் பகுதிகளில் அளிக்கப்படும் மருத்துவப் பணிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக, ஆரம்ப சுகாதார மையங்கள், படிப்படியான முறையில் 30 படுக்கைகள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள் கொண்ட சிறிய மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்படும். தரமான மருத்துவ வசதிகள் எளிதில் கிடைக்க வகைசெய்யும் பொருட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், இத்தகைய சிறிய மருத்துவமனை





ஒன்றை ஏற்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. இதனுடன், ஏலாமையுற்றோர் (disabled) மற்றும் முதியோர்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, இம்மாநிலத்தில் நடமாடும் மருத்துவ ஊர்திப் பிரிவுகளை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. நோய்களுக்கேற்ற சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். இதற்காக, ரூபாய் **3.85** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதில் இவ்வரசு




கொண்டுள்ள உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, படிப்படியாக, அனைத்து அறுவைச் சிகிச்சைக் கூடங்களிலும் குளிர்சாதன வசதி செய்ய கருதப்பட்டுள்ளது. நடப்பாண்டில், **20** தலைமையிட மருத்துவ மனைகளில் இவ்வசதி செய்து கொடுக்கப்படும்.




ஆளுநர் உரையில் உறுதியளித்தவாறு, படிப்படியாக, அனைத்து மருத்துவமனைகளிலும் தங்குதடையற்ற மின்சக்தி கிடைக்கும் வகையில் மின் உற்பத்தி இயந்திரங்கள் (Generators) நிறுவப்படும். இதற்காக, நடப்பாண்டில் ரூபாய் **1.32** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.


புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துவதனால், மக்களிடையே வாய் புற்றுநோய் அதிகரித்து வருவதையும், பான் மசாலா, குட்கா பொருள்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதால், சீதப்படலத்தின் கீழ் கட்டிகள் (Submucous Fibrosis) தோன்றி அதன் காரணமாக வாயைத் திறக்கமுடியாத நிலை ஏற்படுவது அதிகரித்து வருவதையும் காண்கிறோம். இந்தப் பழக்கம், பள்ளி மாணவரிடையேயும் பரவியுள்ளது. எனவே, புகையிலை (Chewing tobacco), பான்மசாலா மற்றும் குட்கா பொருள்கள் போன்றவற்றிற்கு தடை விதிக்க வகைசெய்யும் சட்டமொன்றை இயற்ற இவ்வரசு தீர்மானித்துள்ளது.

நம்முடைய மருத்துவமனைகளில் போதுமான மருத்துவ துணைப் பணியாளர்கள் இன்றி, முழுமையான மருத்துவப் பணியை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை நிலவி வருகிறது. தற்போதுள்ள இக்குறைபாடுகளை இவ்வரசு அறிந்துள்ளது. எனவே, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு அரசு மருத்துவக் கல்லூரியிலும் செவிலியர் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

சாலை விபத்துகளும், அதனால் ஏற்படும் இறப்புகளும் தொடர்ந்து அதிகரித்து வருவது மிகுந்த கவலை தருவதாக உள்ளது. சாலை விபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு தக்க தருணத்தில் மருத்துவ உதவி கிடைத்தால், மதிப்பு மிக்க பல உயிர்களை நம்மால் காப்பாற்ற முடியும். சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க நேரத்தில் மருத்துவ உதவி அளிப்பதற்காக பொருத்தமான இடங்களில் உரிய வசதிகளுடன் கூடிய விபத்துக்காய சிகிச்சை மையங்களை (Accident Trauma Centres) ஏற்படுத்துவதற்கான திட்டத்தை அரசு நிறைவேற்றும்.

### வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சி

இலவசப் பட்டாக்கள் வழங்கப்பட்ட வீட்டுமனைகள் அமைந்துள்ள இடங்களில் அடிப்படை வசதிகள் இல்லாததால், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கியும் பெருமளவில் அங்கு வீடுகள் கட்டாத நிலை இருப்பது அரசுக்குத் தெரியவந்துள்ளது. இந்த முரண்பாட்டைக் கருத்திற்கொண்டு, முதற்கண் இத்தகைய இடங்களில் சாலைகள், தண்ணீர்வசதி, மின்வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, ரூபாய் **10** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.





தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மேம்படுத்தப்பட்ட 13972 மனைகளையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் முறையான திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட 8000 வீடுகளையும், அடுக்குமாடி வீடுகளையும் தேவையுள்ள பொதுமக்களுக்கு விற்பனை செய்யக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒதுக்கீடு பெறுவதற்கான பயனாளிகளைத் தெரிந்தெடுப் பதற்கு, மாவட்ட நிருவாகம் மற்றும் ஏனைய உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்களும் பயன்படுத்திக் கொள்ளப்படுவர்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் திட்டப்பணிகள் செலவுக்கேற்ப பயனளிப்பனவாக அமையும் வகையில் அவற்றை நெறிப்படுத்த உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும். கட்டிமுடிக்கப்பட்டு விற்பனையாகாத வீடுகள் பெருமளவில் இருப்பதைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், இனிமேல், மனைகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி, கட்டுமானப் பணிகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று அரசு கருதுகிறது.

சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் குடிசை வாழ் மக்களுக்குப் பலமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர இவ்வரசு கருதியுள்ளது. இந்நோக்கத்திற்காக வரவு–செலவுத் திட்டத்தில் தொடக்க நிதியொதுக்கீடாக ரூபாய் 9 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர்ப்பகுதிகளில் வாழும் மகளிருக்கு இன்றியமையாதத் தேவையான துப்புரவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, தண்ணீர் வசதிகளுடன் கூடிய 1341 கழிப்பிடக் கட்டிடங்கள் கட்டித்தர இவ்வரசு உத்தேசித்துள்ளது. இதற்காக ரூபாய் 42 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.




**கடும் குடிநீர்த் தட்டுப்பாடு**

இம்மாநிலத்தில் தொடர்ந்து நிலவிவரும் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு காரணமாக மக்களுக்கு




ஏற்பட்டுள்ள இன்னல்களைப் போக்குவதற்குப் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க இவ்வரசு உறுதிகொண்டுள்ளது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு குடிநீர் வழங்குதலை அதிகரிப்பதற்காக ரூபாய் 690 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் குடிநீர் வசதியினை மேம்படுத்துவதற்காக


* நீர் மட்டம் மிகவும் குறைந்துவிட்ட பகுதிகளில் சிறிய விசைப் பம்புகள் நிறுவுதல்,
* நீரின் தன்மை மோசமாக உள்ள இடங்களில், பொருத்தமான தொழில்நுட்பத்துடன் கூடிய குறைந்த செலவிலான சுத்திகரிப்பு தளவாடங்கள் நிறுவுதல் மற்றும்
* மகளிர் குழுவின் தீவிர பங்கேற்புடனும், ஒத்துழைப்புடனும் நிலமட்ட நீர்த்தேக்கத்துடன் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

ஆகிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கக் கருதியுள்ளோம்.

பெரிய அளவிலான சில குடிநீர்த்திட்டங் களுக்கான தொடக்கப் பணிகளை ஆரம்பிப்பதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 10 கோடி

அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டமும், இராமநாதபுரம் குடிநீர் வழங்கல் பெருந்திட்டமும் அடங்கும். இப்பெருந்திட்டங்களுக்கான நிதி ஆதாரங்களைப் பெறுவதற்காகப் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவி கோரப்பட்டுள்ளது.

மாநிலத்தில் குறைந்துகொண்டேவரும் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர்மட்டங்களை உயர்த்துவதில் மழைநீர் சேமிப்பின் பயன்களை இவ்வரசு நன்கு




உணர்ந்துள்ளது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் அமைக்கத்தக்க பொருத்தமான மழைநீர் சேமிப்பு அமைப்புகள் (Rainwater Harvesting Structures) குறித்து பெரிய அளவில் விழிப்புணர்வு இயக்கங்களை நடத்தி தகவல்களைப் பரப்ப இவ்வரசு உத்தேசித்துள்ளது. தனியார், பொது மற்றும் அரசுக் கட்டிடங்கள் அனைத்திலும், கட்டிடங்களின் மேல் தளங்களில் விழும் மழைநீரைச் சேமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு தற்போதைய நகரமைப்புத் திட்ட விதிமுறைகள் தக்கவாறு திருத்தி அமைக்கப்படும்.

பருவமழை தொடர்ந்து பொய்த்ததன் காரணமாக, சென்னை மாநகரில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குக் கடும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இக்கடும் நெருக்கடியைச் சமாளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ள வாறு இவ்வரசு போர்க்கால அடிப்படையில் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

★ உடனடித் தீர்வாக, சென்னை மக்களுக்கு லாரிகள் மற்றும் ரயில் மூலமாக குடிநீர் வழங்க ரூபாய் 75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ வீராணம் ஏரியிலிருந்து நீரை கொண்டு வருவதற்கு வகைசெய்யும் சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம் – I என்ற திட்டம் இரண்டாண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நிதியின் ஒரு பகுதியை மாநில அரசும் எஞ்சிய பகுதியை தேசிய நிதியுதவி நிறுவனங்களும் ஏற்கும்.

★ மேலும், இவ்வரசு சுமார் ரூபாய் 493 கோடி செலவில், சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம் 11–ஐ செயல்படுத்தவும் உத்தேசித்துள்ளது. கொறட்டலையாறு, கூவம், அடையாறு, பாலாறு ஆகியவற்றின் உபரி நீரை சேமிப்பதற்காக, தடுப்பணைகள், நீர்த்தேக்கங்கள், கசிவுநீர்க் குளங்கள் அமைத்து மழைநீர் வீணாக கடலில் சென்று கலப்பதை தவிர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது தொடர்பாக, விரிவான திட்டச் செயற்குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அது, நிதியுதவி வேண்டி, பன்னாட்டு நிதியுதவி நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இத்திட்டத்தில்,

i) திருக்கண்டலம், ஜமீன் கொரட்டூர், திருநீர்மலை, பள்ளிக்கரணை ஆகிய இடங்களில் நீர்த்தேக்கங்கள் கட்டுதல்,

ii) கொறட்டலையாறு, கூவம், அடையாறு, பாலாறு ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல்.

iii) செங்குன்றம், மாதவரம் ஏரி, கொரட்டூர் ஏரி, அம்பத்தூர் ஏரி, ரெட்டை ஏரி ஆகியவற்றின் கொள்ளளவுத் திறனை உயர்த்துதல்

ஆகியன அடங்கும்.


சென்னையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் குடிநீர்ப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். அதன்படி, காவிரி ஆற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டுவர வகைசெய்யும் அனைத்துத் திட்டங்களும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இவற்றில், பள்ளிப்பாளையம் திறந்த நிலை கால்வாய்த் திட்டம், பள்ளிப்பாளையம் குழாய்க் குடிநீர் திட்டம், குழாய்கள் மூலமாக மேட்டூரிலிருந்து தண்ணீரை கொண்டுவரும் திட்டம், கல்லணையின் மேற்பகுதியில் திருச்சிராப்பள்ளியிலிருந்து மேற்பரப்பு நீரைக் கொண்டுவரும் திட்டம் ஆகியன அடங்கும்.

## சமூகப் பாதுகாப்பு

மகளிர், சிறார், ஏலாமையுற்றோர் (disabled) மற்றும் முதியோர் நலனில் இவ்வரசு ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முந்தைய ஆட்சிக்காலத்தில் தொடங்கிய தொட்டில் குழந்தைத் திட்டத்தை

கடந்தகால அரசு சரிவர செயல்படுத்தவில்லை. மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 12.96 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன்கூடிய குழந்தையேற்பு மையங்களை அமைப்பதன்மூலம் இத்திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கவும், சேலத்தில் தற்போதுள்ள மையத்தைச் சீரமைக்கவும் இவ்வரசு உத்தேசித்துள்ளது. பாதிப்பு ஏற்படக்கூடிய மாவட்டங்களிலுள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் இக்குழந்தைகளை ஏற்றுப் பராமரிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும். பெண் சிசுக்கொலை என்னும் கொடுஞ்செயலுக்கு எதிராக, பெருமளவில் பிரச்சாரம் செய்ய அரசு ஆதரவு நல்கும்.

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஊக்கமளித்து, பெண் சிசுக் கொலையை ஒழிப்பதற்காகவும் ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பிப் பெற்றுக்கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்து வதற்காகவும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்




என்னும் புரட்சிகரமானதொரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1992 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார். ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு அதிக நிதிப்பயன்கிட்டும் வகையில் தற்போது இத்திட்டம் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஒரேயொரு பெண்குழந்தை மட்டுமே இருந்து, வேறு குழந்தைகள் எவரும் இல்லாத குடும்பங்களில் பெற்றோர் எவரேனும் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டிருந்தால், அரசு அக்குழந்தையின் பெயரில் தொடக்க வைப்பீடாக ரூபாய் 20,650ஐ அளித்திடும். இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டி அப்பெண் குழந்தை பள்ளிக்கல்வி முடிப்பதுவரையில் திங்களொன்றுக்கு குறைந்தது ரூபாய் 150 வழங்க போதுமானதாக இருக்கும். அக்குழந்தைக்கு 20 ஆண்டுகளுக்குப் பிறகு இறுதிப் பலனாக ரூபாய் 80,000 வழங்கப்படும். அக்குழந்தை தொடர்ந்து மேற்கல்வி பயிலவோ அல்லது அதன் திருமணச் செலவிற்கோ இத்தொகை உதவும். இரண்டு பெண்குழந்தைகள் மட்டும் இருந்து, ஆண்குழந்தை இல்லாத குடும்பங்களில் பெற்றோரில் எவரேனும் ஒருவர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருந்தால், அரசு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொன்றின் பெயரிலும் ரூபாய் 14,450ஐ தொடக்க வைப்பீடாக அளிக்கும். இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூபாய் 150 வழங்கப்படுவதோடு 20 ஆண்டுகளுக்குப் பிறகு இறுதிப்பலனாக அவர்கள் ஒவ்வொருவரும் ரூபாய் 40,000 பெறுவர். இத்திட்டத்திற்காக, நடப்பாண்டில் ரூபாய் 22.70 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிருக்கு, தேவையான நிதியுதவிகள் எளிதில் கிடைப்பதற்கான வழிமுறைகளைச் சீரமைத்து, பொருளாதார வளர்ச்சியில் அவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமான ஒன்று. இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிரின் சுயவேலை வாய்ப்பினை அதிகரிக்க, 5 இலட்சம் மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிப்பதற்கான புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளார். இப்பயிற்சியின் முடிவில், அந்த மகளிர், சிறு தொழில்களைத் தொடங்க ஏதுவாகக் கடன்களும் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் பயிற்சிகள் பெற ஏதுவாக ரூபாய் 15 இலட்சம் செலவில் ஆறு சமுதாய நிதி ஆதார மையங்கள் புதிதாக அமைக்கப்படும். மேலும், அங்கு இவர்களுக்கு கணினி மற்றும் இணையதளப் பயிற்சியும் அளிக்கப்படும்.

தற்போது பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் தொகை ரூபாய் 7,000 முதல் ரூபாய் 10,000 வரை உள்ளது. இத்திட்டங்கள் சீரமைக்கப்பட்டு, அனைத்துத் திட்டங்களின்கீழும் ஒரே சீராக உயர்ந்த அளவான ரூபாய் 10,000 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், கலப்புத் திருமணத் திட்டத்தைப் பொறுத்தவரையில், தம்பதியரில் ஒருவர் ஆதிதிராவிடராகவோ அல்லது பழங்குடியின ராகவோ இருந்தால் உதவித்தொகையான ரூபாய் 20,000 தொடர்ந்து அளிக்கப்படும். திருமண வயதாக அரசு நிர்ணயித்திருக்கும் 20 வயதே இந்த அனைத்துத் திட்டங்களிலும் அளவுகோலாக இருக்கும்.

மகளிருக்கு அதிகாரமளிக்கும் வகையிலானதொரு நடவடிக்கையாக, முடிவுகள் எடுப்பதில் மகளிர்களுக்கு பங்கேற்பும் அதிகாரமும் வழங்கவேண்டும் என்ற உயரிய நோக்கோடு, சட்டரீதியான மற்றும் இதர குழுக்கள் அனைத்திலும், மகளிருக்கு 30 சதவீத பிரதிநிதித்துவம் அளிப்பது என்ற பாராட்டத்தக்க துணிச்சலான முடிவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துள்ளார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவு மையங்களில் அவசியமான பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டு அவற்றை சீரமைத்து, வலுப்படுத்த இவ்வரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதற்காக, ரூபாய் 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றவர்களின் தேவைகளில் இவ்வரசு, தனிக்கவனம் செலுத்தும். உடல் ஊனமுற்றவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற உத்தேசிக்கப்பட்டுள்ள கடன்களுக்கு உத்தரவாதம் அளிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. உடல் ஊனமுற்றோரின் தங்குதடையற்ற நடமாட்டத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்னுரிமை அளிக்கப்படும்; படிப்படியாக, அரசு அலுவலகங்களில் சாய்தளங்களும் அமைத்துத் தரப்படும்.

மனநலம் குன்றிய குழந்தைகளுக்கும், அவர்களுக்குத் துணையாக வருபவர் ஒருவருக்கும் இலவசப் பேருந்துப் பயணச்சீட்டு வழங்குவது தொடர்பாக தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பை நீக்கிவிட இந்த அரசு தீர்மானித்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள மனநலம் குன்றிய குழந்தைகள் இடர்ப்பாடின்றி வெளியே சென்றுவர இது பெரிதும் உதவும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

ஒடுக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்பதில் இவ்வரசு மிக உறுதியாக உள்ளது. நமது சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினரான ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் நலனுக்கு இவ்வரசு உயர் முன்னுரிமை அளிக்கும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரிடையே கல்வியைப் பரப்பும் திட்டங்கள் புது எழுச்சியுடன் செயல்படுத்தப்படும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்த மாணவியருக்கு அரசுக் கல்லூரிகளில் பட்டமேற்





படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கும் புதியதோர் திட்டத்தைத் தொடங்க இவ்வரசு தீர்மானித்துள்ளது.

ஆளுநர் உரையில் உறுதியளிக்கப்பட்டவாறு, இவ்வரசு, நடப்பு நிதி ஆண்டிலிருந்து, அரசுப் பள்ளிகளில் பதினோராம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவியருக்கு இலவசமாக மிதிவண்டிகளை வழங்கும் உன்னதமான திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். இந்நோக்கத்திற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை படிப்படியாக, பொதுவான கல்வித் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெற்றோர் – ஆசிரியர் சங்கங்கள், மாவட்டக் கல்வி அதிகாரிகள், ஆதிதிராவிடர் / பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைத்து, முறைசார் பள்ளிகளில் போதிய எண்ணிக்கையில் ஆதிதிராவிடர்–பழங்குடியினர் மாணவர்கள் சேர்வதை உறுதிப்படுத்த வழிவகைகள் காணப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி வசதிகளை வலுப்படுத்துவதற்காக, படிப்படியாக பள்ளிகள் மற்றும் மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்களைக் கட்ட இவ்வரசு கருதியுள்ளது. இதற்காக வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவர் விடுதிகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தொகை போதுமானதாக இல்லை. எனவே, இந்த ஏழை மாணவர்களின் நலன் கருதி மாணவர் ஒருவருக்கு, திங்களொன்றுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத்தொகையை ரூபாய் 225லிருந்து




ரூபாய் **300** ஆக உயர்த்த இவ்வரசு முடிவு செய்துள்ளது.

இம்மாநிலத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களின் நிதிநிலை பயிர்த்தொழில்மூலம் மேன்மையுறும் வகையில் வேளாண் துறையின் சிறப்புக்கூறுகள் திட்டத்தின்கீழ், சத்துள்ள புன்செய்ப் பயிர்களான, கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, சாமை மற்றும் தினை மற்றும் சில பயறு வகைகளின் சாகுபடியை ஊக்குவிக்க இவ்வரசு கருதியுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கான சிறப்புக்கூறுகள் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதியின் அளவு, அம்மக்களின் மொத்த மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லை என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது. சிறப்புக்கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் சாதனைகள் குறித்து கால முறைப்படி தொடர்ந்து ஆய்வு செய்யவும் இவ்வரசு கருதியுள்ளது. ஆதிதிராவிடர் மற்றம் பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக, மத்திய அரசிடமிருந்து அதிக நிதியுதவியைப் பெற்றுத்தரும் வகையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் (TAHDCO) மாற்றியமைக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மகளிர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி, அவர்கள் சுய வேலைவாய்ப்புகளைத் தொடங்குவதற்கு உதவக்கூடிய வாழ்க்கைத் தொழில் பயிற்சிகளை அளிக்க இவ்வரசு கருதியுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக, ரூபாய் **19.63** கோடி செலவில் **43** மாணவர் விடுதிகளைக் கட்ட இவ்வரசு கருதியுள்ளது. இதற்காகும் செலவு, மத்திய மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும். தற்போது வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் எஞ்சியுள்ள மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்களைப் படிப்படியாகக் கட்டி முடிப்பதற்குத் தேவையான நிதியை பிற நிதி ஆதாரங்களிலிருந்து திரட்டவும் இவ்வரசு கருதியுள்ளது. நடப்பாண்டில் ரூபாய் **25** கோடி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.


பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையால் நடத்தப்பட்டுவரும் பள்ளி மாணவர் விடுதிகளில் தங்கியுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்களொன்றுக்கு அளிக்கப்படும் உணவுச்செலவுத் தொகையை ரூபாய் **225**லிருந்து ரூபாய் **300** ஆக உயர்த்த இவ்வரசு முடிவு செய்துள்ளது.

முஸ்லீம் சகோதரர்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு வஃக்பு வாரியத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டித் தர ரூபாய் **40** இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.




**பத்திரிக்கையாளர்கள் நலன்**

பத்திரிக்கையாளர்கள் குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகையை ரூபாய் **50,000**லிருந்து ரூபாய் **2** இலட்சமாக உயர்த்தித்தர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



கருதியுள்ளார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் பத்திரிக்கைத் துறையினருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 20 ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிக்கையாளராகப் பணியாற்றி சான்றிதழ் பெற்ற ஏற்பளிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகளை வாங்குவதற்கு இயலும்பொருட்டு கவர்ச்சிகரமான தவணைத் திட்டம் ஒன்றையும் இவ்வரசு வகுத்து வருகிறது.

மின்னணுவியல் தகவல் தொடர்பு பத்திரிகையாளர்களுக்கும், பத்திரிகையாளர் சான்று அட்டைகளை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுத்துள்ளார்.

### தொழிலாளர் நலன்

இவ்வரசு, தொழிலாளர் நலனுக்கு மிக உயரிய முன்னுரிமை அளித்து வருகிறது. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய நல வாரியத்தின் மூலமாக ஓய்வூதியம் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து இவ்வரசு பரிசீலித்து வருகிறது. மொத்தமுள்ள 71 தொழிலாளர் நல மையங்களிலும், குழந்தைகள் காப்பகம் ஒன்றையும், படிப்பறை ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுக்க இவ்வரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

### உணவு மானியம்

அளவுக்கதிகமான நிதிச்சுமையை ஏற்றுக்கொண்டு பொது விநியோகத் திட்டத்தின் வாயிலாக மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே ஆகும். பொது விநியோகத் திட்டத்தில் முறைகேடுகள் நடைபெறுவதாகவும் நியாயவிலைக் கடைகள் மூலமாக தரம் குறைந்த உணவுப்பொருள்கள் வழங்கப்படுவதாகவும் எண்ணற்ற புகார்கள் வந்துள்ளன. ஆயினும், பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைகள் குறித்து ஆய்வுசெய்யவும், உணவு மானியம் உட்பட பொது விநியோக முறையைச் சீரமைப்பது குறித்து





கருத்துரைகள் வழங்கவும் சட்டமன்ற உறுப்பினர்களடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்படும். இக்குழு மூன்று மாதங்களுக்குள் தன் அறிக்கையை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படும். குழுவின் பரிந்துரைகள் பெறப்படும்வரை, உணவு மானியத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூபாய் 1540 கோடி ஒதுக்க இவ்வரசு தீர்மானித்துள்ளது.

### கைத்தறி, துணித்தொழில் மற்றும் கதர்

இலவச வேட்டிகள், சேலைகள் வழங்கும் திட்டத்திற்காக, அரசு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 129 கோடி ஒதுக்கியுள்ளது. இவை, கிராமப்புற மற்றும் நகர்ப்பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் மக்களுக்கு வழங்கப்படும். இலவச சேலைகள், வேட்டிகளைப் பெறுவதற்குத் தகுதியான பயனீட்டாளர்கள் கிராமப்புறப் பகுதிகளில் கிராமசபைகள் மூலமாகவும், பேரூராட்சிகளில் நிருவாக அதிகாரிகள் மூலமாகவும், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் ஆணையாளர்கள் மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச பள்ளிச் சீருடைகள் வழங்குவதற்காக அரசு ரூபாய் 55 கோடி ஒதுக்கியுள்ளது.


கதர்த்துணி நெசவாளர்களின் வேலை வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்குடன், கதர் மற்றும் கிராமத்




தொழில்கள் ஆணையம் வழங்கும் தள்ளுபடியுடன், கதர்த் துணியின் விற்பனை மீதான தள்ளுபடி ஆண்டு முழுமைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால், கதர்த்துணியின் விற்பனை அதிகரிப்பதோடு கதர்த்துணி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் கூடுதலாக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

## தமிழ் வளர்ச்சி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை


அன்றாட நிருவாகப் பணிகளில் தமிழ்மொழியின் பயன்பாட்டை மேலும் அதிகரிக்க அரசு உறுதிபூண்டுள்ளது. மத்திய அரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக, தமிழ் மொழியையும் அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழுக்குப் பெருமை சேர்த்தது மட்டுமல்லாமல்,




ஆன்மீக வாழ்வுக்கும் தங்களை அர்ப்பணித்த வள்ளலார், காரைக்கால் அம்மையார், அருணகிரிநாதர், தேவார நால்வர், ஆழ்வார்கள் போன்ற அருளாளர்கள் பெயரில் விருதுகள் ஏற்படுத்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தைப் போற்றிப் பாதுகாக்கும் முயற்சியாக, இவ்வரசு, தமிழ் இசை, நாட்டுப்புறக் கலைகள், தெருநாடகங்கள், நாட்டியங்கள், நாடகங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திருக்கோயில்களின் நிருவாகத்தை நெறிப்படுத்தி, அரசியல்வாதிகளின் தலையீடு மற்றும் ஏனைய ஊழல்கள், முறைகேடுகளின் பிடியிலிருந்து




நம்முடைய திருக்கோயில்களை விடுவிக்க இவ்வரசு கருதியுள்ளது. திருக்கோயில்களில் தினமும் ஒருகால பூஜையாவது நடைபெற வழிவகை செய்யும் திட்டத்திற்கு, அரசு புத்துயிர் அளிக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்களில் ஒன்றான அருள்மிகு பழனிமுருகன் திருக்கோயில் பக்தர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவு செய்யும்விதமாக

★ பழனிமலை உச்சிவரை நடந்து செல்ல இயலாத பக்தர்களுக்காக "கேபிள் கார்" வசதி ஏற்படுத்தப்படும்;

★ பக்தர்கள் மலையைச் சுற்றிவந்து தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்கு

வசதியாக, திருவண்ணாமலை கோயிலில் உள்ளது போன்ற கிரிவலப் பாதை ஒன்றும் அமைக்கப்படும்.

## பொது நிருவாகம்

### மாவட்ட நிருவாகம்


தருமபுரி மாவட்டம், தமிழ்நாட்டிலுள்ள மிகவும் பின்தங்கிய மாவட்டங்களுள் ஒன்றாகும். அதன் பரந்தகன்ற பரப்பெல்லையை கருத்திற்கொண்டு, நிருவாகம் மக்களுக்கு அணுக்கமாக அமையும்வகையில், அம்மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென தொடர்ந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போதைய தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. புதியதாக ஏற்படுத்தப்படும் இந்த மாவட்டம் கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும்.

### அலுவலக நடைமுறையை நெறிப்படுத்துதல்

அனைத்து நிருவாக அமைப்புகளிலும், "கோப்புகளை முடிக்கும் வாரம்" செயல்படுத்தப்படும் என்று, ஆளுநர் உரையில் அளித்த உறுதிமொழிக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் செயல் வடிவம் கொடுத்துள்ளார்கள். மனுக்களின் மீது விரைவாகவும் ஆக்கப் பூர்வமாகவும் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்ய, மக்கள் குறைதீர்க்கும் நடைமுறை சீரமைக்கப்பட்டு வருகிறது.

ஒளிவுமறைவற்றத் தன்மையை உறுதிசெய்து, ஊழலை ஒழித்து, மக்கள் நேய நிருவாகத்தை அளிப்பதில் கணினி அடிப்படையிலான நிருவாகம் (E-governance) முக்கியப்பங்கு வகிக்கிறது. அரசுக்கும் மக்களுக்குமிடையேயான தகவல் தொடர்பு தங்குதடையின்றி நடைபெற உதவியாக, இணைய தளங்கள் (Portals on the Internet) ஏற்படுத்தப்படும். அரசின் நிருவாகத்திறனை மேம்படுத்த உதவும் வகையில், தலைமைச் செயலகத்துடன் நகர்ப்பகுதி மற்றும் கிராமப்பகுதிகளிலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களையும் அரசு சார்பு நிறுவனங்களையும் இணைத்திட இவ்வரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.


நிருவாகத்திறன் மேம்பாட்டில் கணினிகள் முக்கியப் பங்கு வகிப்பதை இவ்வரசு நன்கு அறிந்துள்ளது. பொதுமக்களுக்கும் நிருவாகத்திற்கும் இடையேயான இடைவெளியைக் குறைக்கும்




முயற்சியாக நடப்பு நிதியாண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு வட்ட அலுவலகத்தில் "தொடு திரை கணினிகளை" (Touch Screen Computers) நிறுவ கருதப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் தாங்கள் விரும்பும் தகவலை அவர்களாகவே மிகவும் எளிதில் பெற இயலும்.

### காவல்துறை நிருவாகம்

பொருளாதார–சமூக மேம்பாட்டிற்கு சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு மிகவும் இன்றியமையாத தேவையாகும். தமிழ்நாட்டின் காவல் துறையை, உலக நாடுகளின் மிகச் சிறந்த காவல்துறைக்கு ஒப்பான, மிகவும் உயரிய தொழில் திறமை வாய்ந்த துறையாக மாற்ற இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. நவீன தகவல் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், உயர் தொழில்நுட்ப ஆயுதங்கள், குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கான கணினிமயமாக்கப்பட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை




அறிமுகப்படுத்துவதன் வாயிலாக காவல்துறையை நவீனப்படுத்த முனைப்பான நடவடிக்கை எடுக்க இவ்வரசு கருதுகிறது. இந்நோக்கத்திற்காக, நடப்பு ஆண்டில் ரூபாய் 107.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் வேறுபட்ட கோணத்தில் அணுகப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர், இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் காவல் துணைக்




கோட்டங்கள் (184) ஒவ்வொன்றிலும், குறைந்தது, ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென முடிவு செய்துள்ளார். நடப்பாண்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 50–ஐ அமைக்கக் கருதப்பட்டுள்ளது; இதற்காக ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திலுள்ள 1217 காவல் நிலையங்களிலும் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் பெண் துணை ஆய்வாளர் ஒருவரும், பெண் காவலர் இருவரும் நியமிக்கப்பட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 25 கோடி செலவாகும். மகளிர் எவ்வித அச்சமோ, ஐயப்பாடோ இன்றி அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் எளிதில் சென்று புகார் கொடுக்க இயலவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.


நடப்பாண்டில், தமிழ்நாடு காவல் வீட்டுவசதிக் கழகம் மூலமாக, இம்மாநிலம் முழுவதிலும், காவல் துறைப் பணியாளர்களுக்காக ரூபாய் 115 கோடி மதிப்பீட்டுச் செலவில் 3000 குடியிருப்புகள் கட்டித்தர கருதப்பட்டுள்ளது. திறந்தவெளிகளை மேம்படுத்தி, காவலர்களின் குழந்தைகளுக்கான விளையாட்டு மைதானம், பூங்கா, பொது நூலகம், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றை அமைத்திடவும் தனிக் கவனம் செலுத்தப்படும்.




### அரசுப்பணியாளர் நலன்

எந்த ஒரு நிருவாக அமைப்பிற்கும் அரசுப் பணியாளர்களே அடித்தளமாக விளங்குகின்றனர். அன்றாட நிருவாகத்தில் அவர்கள் வகிக்கும் முக்கிய பங்கை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது.

மாநிலத் தலைமைச் செயலகத்தில், பணியாளர்கள் சந்தித்து வருகின்ற இட நெருக்கடி பற்றி இவ்வரசு




அறியும். ரூபாய் 10.70 கோடி மதிப்பீட்டுச் செலவில் கூடுதல் தலைமைச் செயலகக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்கான கருத்துருவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

**நிதி நிலைமை**

முந்தைய அரசு விட்டுச்சென்ற மோசமான நிதிநிலைமை காரணமாக, இவ்வாண்டு புதிய அரசுக்குச் சிக்கல் மிகுந்ததோர் ஆண்டாக இருக்கும். ஒருபுறம் மாநிலத்தின் நலிந்த பொருளாதார நிலையைக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. மறுபுறம் தமிழ்நாடு போன்று சிறப்புறச் செயலாற்றும் மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வு வகையில் மத்திய அரசு உரிய நியாயம் வழங்காததால் ஏற்பட்டுள்ள நிலையையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ரூபாய் 3659 கோடி பற்றாக்குறை ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. வருவாய்ச்செலவு ரூபாய் 24,294 கோடியாகவும் வருவாய் வரவுகள் ரூபாய் 20,635 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டது. கடந்த ஆறு மாதங்களில், அரசின் வரவு–செலவைக் கருத்தில்கொண்ட பின்னர், தற்போது வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் 3748 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் அரசின் வருவாய் வரவுகள் குறைவாக அதாவது, ரூபாய் 20774 கோடியாக இருக்குமென்றும் வருவாய்ச் செலவு ரூபாய் 24522 கோடியாக இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபாய் 827 கோடியாக இருக்கக்கூடும். இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் இப்பற்றாக்குறை ரூபாய் 996 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டது.

நிதிநிலைமையில் உள்ள இத்தகைய இன்னல்களுக்கும் இடர்பாடுகளுக்குமிடையேயும், நம்முடைய சமூகத்தின் மிகவும் நலிந்த பிரிவு மக்களின் நலனைப் பேணிக்காக்க இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. தமிழகத்தின் சீர்குலைந்த பொருளாதார நிலையை செம்மையுறச் செய்ய திட்டமிட்ட பொருளாதார அணுகுமுறைகளை இவ்வரசு மேற்கொள்ளும் என்று நான் உறுதியளிக்கிறேன். இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களும் இம்மாநில மக்களும் வழங்கவிருக்கும் ஆக்கபூர்வமான கருத்துக்களின் அடிப்படையில் தக்க நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள நாங்கள் கருதியுள்ளோம்.

சம்பளம் மற்றும் ஓய்வூதிய வகையிலான செலவுகள் கட்டுப்பாடின்றி அதிகரித்ததன் காரணமாக, தொடர்ந்து சமாளிக்க முடியாத அளவுக்கு வருவாய்ப் பற்றாக்குறை வளர்ந்துவிட்டது. அரசின் கடன்களும் அளவுக்குமீறி கடந்த ஐந்தாண்டுகளில் அதிகரித்துவிட்டது. அதனையடுத்து கடனையும் வட்டியையும் திருப்பிக் கொடுக்கும் வகையிலான நிதிச்சுமைகளும் அதிகரித்துவிட்டன. இவை இந்த அரசுக்கு மிகுந்த கவலையளிக்கும் பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளன.


மாநில அரசின் வருவாய் அல்லது தொடர்ச் செலவுகளின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால், தற்போது பணியிலுள்ள மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் வட்டி வகையிலான செலவு ஆகியவை கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருப்பதைக் காணலாம். மாநிலத்தின் சொந்த வரி வருவாய் இந்த மூன்று இனங்களுக்கான செலவை ஈடுகட்ட போதுமானதாக இல்லை. எடுத்துக்காட்டாக, முந்தைய நிதியாண்டில் மாநில அரசு, தன் பணியாளர்களின் சம்பளம் மற்றும்

ஓய்வூதியச் செலவினங்களுக்காக மட்டுமே தன் சொந்த வரி வருவாயில் சுமார் **94** சதவீதத்தை செலவிட்டுள்ளது. அரசின் ஓய்வூதியச் செலவுப் பொறுப்பு, தொடர்ந்து சமாளிக்க முடியாத அளவுக்கு ஆண்டுதோறும் சராசரியாக 30 சதவீதம் உயர்ந்து வந்துள்ளது.

அரசுக்கு ஏற்படும் தவிர்க்கத்தக்க செலவுகளைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி பரிசீலிப்பதற்காக, பணியாளர் மற்றும் செலவு சீராய்வுக் குழு ஒன்றை அமைக்கக் கருதியுள்ளோம்.

இயல்புக்கு மீறிய வருவாய்ச் செலவு உயர்வைக் கட்டுப்படுத்த, இவ்வரசு பின்பற்றவுள்ள செலவுக் கொள்கை பற்றி இத்தருணத்தில் இங்கே அறிவிக்க விழைகிறேன். செலவுகள் விவேகமாகவும் சிக்கனமாகவும் செய்யப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு, பல்வேறு அரசுத்துறைகளில் நடப்பிலுள்ள திட்டங்களையும் புதிய திட்டங்களையும் தொடர வேண்டிய அவசியத்தை ஆய்ந்து அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யும் நடைமுறை (Zerobase Budgeting) பின்பற்றப்படும்.

மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரும் புதிய வருவாய் ஆதாரங்களைக் கண்டறிவதற்காக, தங்கள் கட்டுப்பாட்டின் கீழுள்ள துறைகளில் விரிவான ஆய்வு நடத்தவேண்டுமென மாண்புமிகு




முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். அரசு அளிக்கும் பல்வேறு பணிகளுக்காக தற்போது விதிக்கப்படும் பயனீட்டாளர் கட்டணங்களை நியாயமான அளவுக்குத் திருத்தியமைப்பதும், தவிர்க்கத்தக்க வீணான செலவுகளைக் குறைப்பதும் இதில் அடங்கும்.

**வணிக வரிகள்**

இதுவரை, இங்கே குறிப்பிடப்பட்ட அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்துவதற்குத் தேவையான கூடுதல் நிதி ஆதாரங்களைக் கண்டறியும் இக்கட்டான, சிக்கலான பணிக்கு அடுத்து வருகிறேன்.

அரசின் வருவாயின் மிகப்பெரும்பான்மையான பங்கு வணிக வரியிலிருந்தே கிடைக்கப் பெறுகின்றது. **5.7.2001** ல் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மற்றும் மாநில நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் அனைத்து மாநில அரசுகளும் **31.7.2001**க்குள் சமச்சீர் வரியை (Uniform Floor Rates) அமல்படுத்தவேண்டுமென்றும், **1.4.2002** முதல் மதிப்புக்கூட்டு வரிவிதிப்பு முறையை (VAT) அமல்படுத்த வேண்டுமென்றும், எடுக்கப்பட்ட முடிவுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். அதிகாரம் அளிக்கப்பட்ட நிதியமைச்சர்கள் குழுவின் (Empowered Committee of Finance Ministers) பரிந்துரைகளின் அடிப்படையில் சமச்சீர் வரியினை அமல்படுத்தாத மாநில அரசுகளுக்கு மத்திய நிதி உதவி அளிப்பது நிறுத்தி வைக்கப்படும் என்றும் மத்திய நிதி அமைச்சர் இம்மாநாட்டில் அறிவித்தார்.

ஜனவரி **2000** முதல் சமச்சீர் வரிவிதிப்பை அமல்படுத்த வேண்டுமென்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் எடுத்த முடிவின் அடிப்படையில், முந்தைய அரசு **40** இனங்களுக்கான வரிவிதிப்பு விகிதங்களை ஏற்கனவே மாற்றி அமைத்துள்ளது. சமச்சீர் வரியிலிருந்து விடுபட்ட எஞ்சிய இனங்களைத் தற்போது பரிசீலித்து தேவையான நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை நம் மாநிலத்தில் அமல்படுத்துகின்ற அதே நேரத்தில் தமிழகத்தைச் சுற்றியுள்ள அண்டை மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் இதே சமச்சீர் வரிவிதிப்பு நடவடிக்கைகளை முழுமையாக அமல்படுத்த

வேண்டும். அப்போதுதான் தமிழகத்தில் நடக்க வேண்டிய வணிகமும், வரிவருவாயும் பிற மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்க முடியும். சமச்சீர் வரி விகிதத்தையும் செவ்வனே நடைமுறைப்படுத்த முடியும்.

தமிழகத்தில் மதிப்புக்கூட்டு வரிவிதிப்பு முறையை அமல்படுத்துவது குறித்து அனைத்து அம்சங்களையும் அரசு விரிவாகப் பரிசீலித்து வருகிறது. மதிப்புக்கூட்டு வரிவிதிப்பு முறையின் அனைத்து அம்சங்களையும் பகுத்தாராயவும், இந்த இலக்கினை அடைய தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மதிப்புக்கூட்டு வரிக்குழு (VAT CELL) என்ற அமைப்பை சமீபத்தில் உருவாக்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மேலும், மதிப்புக்கூட்டு வரிவிதிப்பு முறையினை அமல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், இது குறித்து தொடர் வழிகாட்டுதலையும், கண்காணிப்பினையும் மேற்கொள்ளவும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு (Empowered Committee) ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரியின் பல்வேறு தன்மைகள் பற்றிய வணிகர்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் குழுக்களின் கருத்துக்களைப் பெற அவர்களுடன் விரிவாக கலந்து பேச உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதிப்புக்கூட்டு வரிவிதிப்பு விகிதங்களிலும், அதில் உள்ளடங்கிய பொருள்களை வகைப்படுத்துவதிலும் சில மாற்றங்களைச் செய்யவேண்டுமென்று அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நிதியமைச்சர்களின் குழுவின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மாதாந்திரப் படிவங்களைச் சரிபார்த்தல் மற்றும் வணிக நடவடிக்கைகளைப் பகுத்தாராய்தல் ஆகியவற்றை துரிதப்படுத்தவும், மேம்படுத்தவும் வணிகத்துறையில் தற்போது **323** வரிவிதிப்பு வட்டங்களில் **140** மட்டுமே கணினிமயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து மையங்களையும் முழுமையாக கணினிமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. வணிகச்சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் தொடர்ந்து கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ள ஏதுவாக வணிவரித்துறையில் தேவையான அமைப்புமுறை உருவாக்கப்படும். இத்துறையில் பயன்படுத்தப்படும் படிவங்கள் மற்றும் நடைமுறைகளை ஆய்வு செய்து எளிமைப்படுத்துதல், பொருள் வாரியாக பல்வேறு பிரிவுகளை எளிதாக்குதல், கருத்துப் பரிமாற்றங்களிலிருந்து பெறப்படும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பயன்படுத்துதல் ஆகியவை இவ்வமைப்பின் நோக்கமாக இருக்கும்.


இந்நிதிநிலை அறிக்கையில் உள்ள வரிமாற்றங்கள் குறித்து தற்போது அறிவிக்க விழைகின்றேன். அரசின் வருவாயை பெருக்குவதே வரிவிதிப்பின் முக்கிய அம்சமாக இருப்பினும், இதனால் வியாபாரம், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர்களாகிய பொதுமக்கள் மீது ஏற்படும் பாதிப்பினையும் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். இருப்பினும், ஏற்கனவே முடிவெடுத்தபடி **31.7.2001**க்குள் சமச்சீர் வரி விகிதங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், தவறினால், மாநில அரசுக்கு மைய அரசு அளித்திடும் நிதி உதவி நிறுத்தப்படும் என்றும் மைய அரசு கண்டிப்பாகக் கூறியுள்ளது. இந்நிலையில் சில வரி மாற்றங்களைக் கொண்டு வருவது தவிர்க்கமுடியாததாய் உள்ளது. இதையொட்டி, தமிழ்நாடு பொது விற்பனைவரி சட்டத்தின்கீழ் கொப்பரை, மக்காச்சோள தயாரிப்புகள், செயற்கை இழைநூல், செயற்கை இழைகள் (man-made fibres and yarns) அனைத்துவகை உலோக சரிகை இழை, கருஞ்சீரகம், பருத்தி, பதனிடப்பட்ட தோல் உரி மற்றும் தோல் ஆகிய பொருட்களுக்கு வரிவிகிதம் **4** விழுக்காடாக உயர்த்தப்பட உள்ளது. தற்போது **11** விழுக்காட்டில் உள்ள இருசக்கர மிதிவண்டி பூட்டுகள் மற்றும் ஒரு விழுக்காட்டில் உள்ள இரு சக்கர மிதிவண்டியின் இருக்கை உறைகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதம் இருசக்கர மிதிவண்டிப் பாகங்கள், மற்றும் துணைக்கருவிகள் மீதான வரிவிழுக்காடு போன்று ஒரே சீராக **4** விழுக்காடாக நிர்ணயிக்கப்பட உள்ளது

டிராக்டர் டயர் மற்றும் டியூபுகள், நிழற்படச்சுருட்கள், தகடுகள் போன்றவைகள், அச்சு மற்றும் எழுது தாள், தையல் இயந்திரங்களின் பாகங்களும் துணைக்கருவிகளும், வணிகச்சின்னம் இடப்பட்ட அல்லது இடப்படாத வெண்ணெய் மற்றும் நெய், வணிகச்சின்னம் இடப்பட்ட அல்லது இடப்படாத காலணிகள், வணிகச்சின்னம் இல்லாத பேக்கரி தயாரிப்புகள், வணிகச்சின்னம் இல்லாத தின்பண்டங்கள் மற்றும் சாக்லெட்டுகள்,

அடக்கமான பேரொளிக் குழல் விளக்குகள் (Compact Fluorescent Lamp), செல்லுலார் தொலைபேசிகள் ஆகியவைகளுக்கு இனி 8 விழுக்காடாக வரி நிர்ணயிக்கப்படும். இருப்பினும், குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தற்போது ரூபாய் 50 க்கும் குறைவாக விற்பனை விலையுள்ள காலணிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள வரிவிலக்கு ரூபாய் 100 வரையிலான விலையுள்ள காலணிகளுக்கும் நீட்டிக்கப்படுகிறது. காலணிப் பட்டைகள் மீதான வரிவிலக்கு தொடர்ந்து நீடிக்கும். தற்போதுள்ள வணிகச்சின்னம் இல்லாத பிஸ்கட்டுகள் மீதான 4 விழுக்காடு வரியும், ஆண்டுக்கு ரூபாய் ஐந்து இலட்சத்திற்கும் குறைவாக விற்பனை உள்ள பேக்கரிகளுக்கான வரி விலக்கும் நீடிக்கும்.

இருசக்கர மோட்டார் சைக்கிள்கள், மூன்று சக்கர வண்டிகள் மற்றும் மண்வாரி இயந்திரங்கள் நீங்கலான நான்கு சக்கர வாகனங்கள், வீட்டு

தற்போது நடைமுறையிலுள்ள வரிவிழுக்காடுகளின் எண்ணிக்கையை குறைக்கவும், எளிமைப்படுத்தவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தற்போது, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959 ன் முதல் அட்டவணையில் 14 பாகங்கள் உள்ளன. மூன்றே இனங்களான கோழித்தீவன துணைப்பொருட்கள் மற்றும் செறிவூட்டும் பொருட்கள், உலர்த்தப்பட்ட அல்லது வறுக்கப்பட்ட பருப்பு மற்றும் தானிய மாவு வகைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள முதலாம் அட்டவணைப் பகுதி 'அ'வை நீக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோழித்தீவனத்திற்கு ஏற்கெனவே வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாலும், கால்நடைத்தீவனத் துணைப்பொருட்கள் மற்றும் செறிவூட்டும் பொருட்கள், வறுத்த வேர்கடலைப் பருப்பு, கோதுமை மாவு, ரவை மற்றும் மைதா போன்ற பொருட்களுக்கு ஏற்கெனவே 4 விழுக்காடு வரி உள்ளதாலும் மேற்சொன்ன மூன்று பொருட்களின் மீதான வரிவிகிதத்தை 2ல் இருந்து 4 ஆக உயர்த்தி முதலாம் அட்டவணைப் பகுதி 'பி' உடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.




உபயோகப் பாத்திரங்கள் நீங்கலான மற்ற எவர்சில்வர் பொருட்கள் மற்றும் கையினால் தயார் செய்யப்படும் சோப்புகள் மீது சமச்சீர் வரிவிகிதமான 12 விழுக்காடு வரி விதிக்கப்படும். தற்போது வரிவிலக்கு அளிக்கப்பட்டு வரும் செயற்கை மணிக்கற்களுக்கு சமச்சீர் வரிவிகிதமான 1 விழுக்காடு வரி விதிக்கப்படும்.

மேலும் வரிச்சீரமைப்பு அணுகுமுறைக்கேற்ப, பதிவு பெற்ற வணிகச் சின்னம் உடைய வெண்ணெய் மற்றும் நெய், சூடம், காஸ்டிக் சோடா, இருசக்கர மிதி வண்டிப் பூட்டுகள், அட்டவணையில் எங்கும் குறிப்பிடப்படாத எஞ்சிய பொருட்கள், மற்றும் குறிப்பிடப்படாத சாயங்கள், அனைத்து வகை எடை அளவிடும் இயந்திரங்கள், காற்றழுத்த விளக்குகள்,

பாரபின் மற்றும் மிருதுவான மெழுகு, விலங்குகளால் இழுக்கப்படும் வண்டிகளின் டயர்கள் மற்றம் டியூபுகள் நீங்கலாக பகுதி டி அட்டவணை 1ல் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் வரி 12 விழுக்காடாக உயர்த்தப்படும். ஏற்கெனவே குறிப்பிட்டபடி வணிகச் சின்னமுடைய அல்லது வணிகச்சின்னம் இல்லாத அனைத்து வகை வெண்ணெய் மற்றும் நெய்க்கு 8 விழுக்காடு வரி விதிக்கப்படும். சூடத்தின் மீதான 4 விழுக்காடு வரி தொடர்ந்து நீடிக்கும். குறிப்பிடப்படாத சாயங்களின்மீது தற்போதுள்ள 11 விழுக்காடு வரியை குறிப்பிடப்பட்ட சாயப்பொருட்களுக்கு உள்ளதுபோல் 8 விழுக்காடாக குறைக்கப்படும்.

1999–2000ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் மின்சக்தி பொருட்களின் மீதான வரிவிகிதம் 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்பட்டபோது விற்பனைத் தொகை அதிகரிக்கும் என்றும் வரி இழப்பு சரிகட்டப்படும் அளவிற்கு வருவாய் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு மாறாக, இந்த இனத்தில் கடந்த நிதி ஆண்டில் ரூபாய் 18.94 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது. ஆகவே மின்சத்தி பொருட்கள் மீதான விற்பனை வரியை 12 விழுக்காடாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெய்யப்பட்ட எச்டிபிஇ/பிபி துணிகள் (HDPE/PP Woven Fabrics) இனங்களுக்கு 8 விழுக்காடு வரி நீடிக்கும்; ஆனால், இதர பிளாஸ்டிக் பொருட்கள் மீது தற்போதுள்ள 8 விழுக்காடு வரி 12 விழுக்காடாக மாற்றியமைக்கப்படுகிறது.

இலவம் பஞ்சின் விதைகள் மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகவும், காகிதக் கோப்பைகளுக்கு 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகவும் குறைக்க அரசு உத்தேசித்துள்ளது. நலிந்த பிரிவினர் அதிகம் பயன்படுத்தும் கைப்பம்புகள், மண்ணெண்ணெய் அடுப்புகளின் பாகங்கள் ஆகியவற்றுக்கும் மேலும் 12 அடிச்சரக்கு இனங்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

இதர மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு விதிக்கப்படுவது போன்று எலக்ட்ரானிக் வோல்டேஜ் ஸ்டெபிலைசர்களின் பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மீதான வரி 4 விழுக்காடாக விதிக்கப்படும். பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL) மற்றும் மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் (MTNL) நிறுவனங்களுக்கு விற்கப்படும் தொலைத் தொடர்புக்கான கேபிள்கள் மீதான வரி தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 'சி' படிவம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் 4 விழுக்காடு என குறைக்கப்படும்.

தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில், வசதி படைத்தவர்கள் பயன்பெறும்வகையில் பௌலிங், பில்லியர்ட்ஸ், ஸ்நூக்கர் போன்ற பல்வேறு விளையாட்டு அம்சங்கள் நிறைந்த பொழுதுபோக்கு மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மையங்கள், இதைப் பயன்படுத்துவோரிடம் அதிகமாக கட்டணங்கள் வசூலிக்கின்ற போதிலும், அரசுக்கு இதனால், எந்தவித வருவாயும் கிட்டுவதில்லை. எனவே, இந்த பொழுதுபோக்கு மையங்கள் மீது 20 விழுக்காடு கேளிக்கை வரி விதிக்க அரசு உத்தேசித்துள்ளது.

அரசின் வருவாயை பாதுகாக்கவும், அதிகப்படுத்தவும் சில அறிவிக்கப்படும் பண்டங்கள், பொருட்கள், இனங்கள், சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, வருவாயைப் பெருக்குவதற்கான முயற்சி வளர்ச்சிப் பணிகளுக்கான செலவுகளை ஈடுசெய்யத்தக்க அளவிற்கு இல்லை. எனவே, அரசின் வருவாயை பெருக்கிடும் வகையில் தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் ஆண்டுக்கு வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகை ரூபாய் 10 கோடிக்கு மேலும், ரூபாய் 25 கோடிக்கு மிகாமலும் உள்ள வணிகர்கள் மீது 1 விழுக்காடு கூடுதல் வரி விதிக்கப்படும்.

மேற்கண்ட வரிச்சீரமைப்பு நடவடிக்கையால் இந்த நிதியாண்டில் நிகர கூடுதல் வருவாய் ரூபாய் 135.38 கோடியாக இருக்கும்.

தற்போது 38,569 உறுப்பினர்களைக் கொண்ட வணிக நல வாரியத்தை புத்துயிரூட்டி மேம்படுத்த அரசு ஆர்வமாக உள்ளது. வணிக நல வாரியத்தின்

உறுப்பினர்களின் எண்ணிக்கையை மேம்படுத்தவும், நலிந்த வணிகர்களுக்கு சேவை புரியவும், வணிகர் சங்கங்களின் ஒத்துழைப்புடன் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.


## நிதி நிருவாகம்

ஓராண்டில் நிகர சிறுசேமிப்பு வசூல்களின் அடிப்படையில், மத்திய அரசு அளிக்கும் நீண்டகாலக் கடன், இவ்வரசின் முக்கியமான வருவாய் ஆதாரங்களில் ஒன்றாக விளங்குகிறது. இதன் அடிப்படையில், சென்ற ஆண்டு, ரூபாய் 1290 கோடி கடனாகப் பெறப்பட்டது. இந்த ஆண்டு ரூபாய் 1700 கோடி கடன் கிடைக்குமென வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முக்கியமான பணியில், குடும்பப் பெண்கள் மேலும் அதிக அளவில் ஈடுபடவேண்டும் என்பது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பமாகும். அதிகளவில் சிறுசேமிப்புத் தொகைகளைத் திரட்டுவதற்கு உதவக்கூடிய கவர்ச்சிகரமான திட்டங்களையும், பரிசுகளையும் ஊக்கத் தொகைகளையும் அறிமுகப்படுத்த இவ்வரசு கருதியுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து கணக்கிட்டு, பழுப்பு நிலக்கரிக்கான உரிமைத்தொகையைத் திருத்தியமைக்க வேண்டும் என்று மத்திய அரசு திரும்பத்திரும்ப கேட்டுக் கொள்ளப்படுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 2001 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில், மத்திய அரசு, ஆணையிட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு, பழுப்பு நிலக்கரிக்கான உரிமைத்தொகையை நிலக்கரிக்கு (F மற்றும் G தரங்களை சேர்ந்தவை) நிகராக, திருத்தியமைத்தது. அந்த அடிப்படையில், 2001–2003 கால அளவில் வழங்கத்தக்க உரிமைத் தொகைக்கான முன்பணமாக ரூபாய் 250 கோடி வழங்கியது. இவற்றை முற்றிலும் நியாயமற்ற செயலாகக் கருதுகிறோம். ஏனெனில், இவ்வாறு செய்வதன்மூலம் 1990லிருந்து உரிமைத்தொகை வீதத்தைத் திருத்தியமைப்பதால், கிடைக்கக்கூடிய பயன் கிட்டாமல் போய்விடுகிறது. மேலும், எதிர்காலத்தில் நியாயமாகக் கிடைக்கக்கூடிய உரிமைத்தொகை வகையிலான வருவாயைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பும் நமக்கு மறுக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய அரசை மிகவும் வலியுறுத்த உள்ளோம்.

வரி விதிப்பில் மேற்கொள்ள இருக்கின்ற உத்தேச மாற்றங்களைக் கணக்கில்கொண்டால், வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏற்படும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 692 கோடியாகக் குறையும். பலவித வரிகளின் நிலுவைத் தொகைகளை வசூலிப்பதன்மூலமும், பல்வேறு சிக்கன நடவடிக்கைகள் வாயிலாகவும், இந்தப் பற்றாக்குறையை ஈடுசெய்ய முடியும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தமிழக மக்கள் எங்களுக்கு அளித்துள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இவ்வரசு சந்தித்து வருகின்ற சவால்களை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். முந்தைய அரசு ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ள மோசமான நிதிநிலைமைதான், இத்தகைய சூழ்நிலைக்குக் காரணமாக






அமைந்துள்ளது. மாநில மக்களின் முக்கிய வளர்ச்சித் திட்டங்களுக்குக் குந்தகம் ஏற்படாமல், சீர்கேடு அடைந்துள்ள நிதிநிலைமையைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு இவ்வரசுக்கு ஏற்பட்டுள்ளது. இம்மாநிலத்தின் நலன் குறித்த கொள்கை முடிவுகளில் மக்களையும் ஈடுபடுத்தி, அவர்களின் ஒருமித்தக் கருத்தோடு எங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடினமாக பொறுப்புகளை நிறைவேற்றிடுவோம் என்று நம்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசின் நிதிநிலைமை வரலாறு காணாத அளவிற்கு சீர்கேடான நிலைக்கு தள்ளப்பட்டுள்ள போதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்ற மக்கள் அறவே இல்லை என்ற அளவிற்கு அனைத்துத் துறையிலும் சீரிய பொருளாதார மேம்பாட்டை உருவாக்க உறுதி கொண்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலேயே, இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு–செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் ஆக்கப்பூர்வான ஆலோசனைகளையும் போற்றுதற் குரிய வழிகாட்டுதலையும் நல்கிட்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதில் பேருதவியையும் பெரும் ஒத்துழைப்பையும் நல்கிய நிதித்துறைச் செயலர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப., அவர்களுக்கும், அயராது பணியாற்றிய இத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவிற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனைய துறைகளைச் சார்ந்த செயலர்களுக்கும் அலுவலர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

**2001–02** ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

• • •

# 2001-2002ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் சிறப்பம்சங்கள்

### முக்கிய அறிவிப்புகள்

- தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை அவை முன்வைக்கப்படுகிறது.
- புதிய வேளாண்மைக் கொள்கை வகுக்கப்படும்.
- தனியார் துறையின் ஒத்துழைப்புடனும் மக்களின் பங்கேற்புடனும் அடுத்த ஐந்தாண்டுகளில் 20 இலட்சம் எக்டேர் பரப்பளவுள்ள தரிசு நிலங்களைப் பண்படுத்துவதற்கான பெருந்திட்டம் செயற்படுத்தப்படும்.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு, தொகுதி ஒன்றிற்கு ரூபாய் 77 இலட்சத்திலிருந்து ரூபாய் 82 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.
- இரண்டாண்டுகளுக்குள், வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–I ரூபாய் 720 கோடி செலவில் நிறைவேற்றப்படும். சென்னை, குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–II, உலக வங்கியின் நிதியுதவிக்காக அனுப்பப்படும்.
- எம்.ஜி.ஆர். திரைப்படநகர், எம்.ஜி.ஆர். அறிவுநகர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு பெருந்திட்டமொன்று தயாரிக்கப்படும்.
- படிப்பைப் பாதியில் நிறுத்திய மற்றும் பள்ளியில் சேராத மாணவர்களைப் பள்ளியில் சேர்ப்பதற்கான பேரியக்கம் ஒன்று தொடங்கப்படும். பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்படும்.
- தமிழ்நாட்டிலிருந்து, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற விளையாட்டு வீரர்களுக்குச் சீருடைப் பணிகளில் 10 சதவீத இடஒதுக்கீடு.
- தொட்டில் குழந்தைத் திட்டமும் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டமும் சீரமைக்கப்பட்டு, புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தப்படும்.
- சுயவேலைவாய்ப்பு நோக்கில், தொழில் முனைவோர் திறமைகளில், 5 இலட்சம் மகளிருக்குப் பயிற்சியளிக்கும் பெருந்திட்டம் ஒன்று தொடங்கப்படும்.
- மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 225லிருந்து ரூபாய் 300 ஆக உயர்த்தப்படும்.
- பொது விநியோக முறையைப் பாதித்து வருகின்ற கேடுகள் குறித்து ஆய்வு செய்து, மூன்று திங்கள்களுக்குள் அறிக்கை அளிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும்.
- தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதொரு மாவட்டம் ஏற்படுத்தப்படும்.
- அரசு நிலையில் ஏற்படுகின்ற தவிர்க்கத் தக்க மற்றும் வீணான செலவினங்களைக் கண்டறிய பணியாளர் செலவு மறு ஆய்வுக்குழு அமைக்கப்படும்.

### முக்கியத் திட்டங்களுக்கான நிதியொதுக்கம்

- ஊரக மற்றும் நகர்ப்பகுதி குடிநீர் வழங்கலுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 690 கோடியாகும். சென்னை வாழ் மக்களுக்காக, லாரிகள் மற்றும் ரயில் மூலமாக குடிநீர் வழங்குவதற்காக ரூபாய் 75 கோடி ஒதுக்கப்படுகிறது.
- ஊரகப் பகுதிகளில், மகளிருக்காக, ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் ஏற்படுத்துவதற்காக ரூபாய் 92 கோடி ஒதுக்கப்படுகிறது. நகர்ப்பகுதிகளில், ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்களை ஏற்படுத்துவதற்காக ரூபாய் 42 கோடி ஒதுக்கப்படுகிறது.
- சொட்டு நீர்ப்பாசனத் திட்டத்திற்காக ரூபாய் 18 கோடி ஒதுக்கப்படுகிறது. மண்வள மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளுக்காக, ரூபாய் 23 கோடி ஒதுக்கப்படுகிறது.
- சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 192.70 கோடி ஒதுக்கப்படுகிறது.
- ஆதிதிராவிடர் / பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்காக படிப்படியாக புதிய மாணவரில்லங்கள் கட்ட ரூபாய் 25 கோடி ஒதுக்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்காக புதிய மாணவர் இல்லங்கள் கட்டப்படும். இதற்காக, ரூபாய் 25 கோடி ஒதுக்கப்படுகிறது.
- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபாய் 25 கோடி ஒதுக்கப்படுகிறது.
- அரசுப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவிகளுக்கு மிதிவண்டிகள் இலவசமாக வழங்குவதற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்படுகிறது.
- சுற்றுலாத் துறைக்கான ஒதுக்கீடு ரூபாய் 17.50 கோடியாக உயர்த்தப்படுகிறது.

### வரிவிதிப்பு


#### மதிப்புக் கூட்டு வரி

1. மதிப்புக் கூட்டு வரிவிதிப்பு குறித்த பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்வதற்காக, மதிப்புக்கூட்டு வரிக்குழு ஏற்படுத்தப்படும்.
2. மதிப்புக் கூட்டு வரிவிதிப்பு முறைக்கான வழிகாட்டி நெறிமுறைக் கோட்பாடுகளை வகுப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட குழு ஏற்படுத்தப்படும்.

# V.V. CLASSIC MATRICULATION SCHOOL

**MILLERPURAM, TUTICORIN - 628 008.**

*Boon to children!*



*Pride to Parents!!*

*Here is a virtually classic, utopian school, established in the academic year 1996-97 as a modern school, towering over to ideal education, with its spacious class rooms, sprawling campus with lush lawn, well equipped laboratory and library, hi-tech computer education, equisite child oriented education, efficient and committed teachers, excellent training in extra-curricular activities with superb coaching in swimming, adequate conveyance facilities and ample opportunities to aim at an all-round development.*


3. உத்தேச மதிப்புக் கூட்டு வரிவீதங்கள் மற்றும் பொருள்களின் வகைப்பாடுகளைத் திருத்தியமைப்பது குறித்து மத்திய அரசுக்குக் கருத்துத் தெரிவித்தல்.

**வரிவீதங்களில் திருத்தம்**

1. ரூபாய் 50 அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள காலணிகளுக்கு அளிக்கப்பட்டுவரும் வரிவிலக்கு, ரூபாய் 100 மதிப்பிற்கான காலணிகளுக்கும் நீட்டிக்கப்படும்.
2. இரு சக்கர மிதிவண்டிப் பூட்டுகளுக்குத் தற்போது விதிக்கப்படும் 11 சதவீத வரி 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. இரு சக்கர மிதிவண்டி இருக்கை உறைகளுக்கு தற்போது விதிக்கப்படும் 1 சதவீத வரி 4 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
3. கொப்பரைத் தேங்காய், மக்காச்சோளத் தயாரிப்புப் பொருள்கள், செயற்கை இழைகள் மற்றும் நூல்கள், எல்லா வகையான ஜரிகைகள் ஆகியவற்றிற்கு குறைந்தபட்ச 4 சதவீத வரி விதிக்கப்படும்.
4. செல்லுலார் தொலைபேசிகளுக்கு 8 சதவீத வரி விதிக்கப்படும்.
5. மின் சாதனங்களுக்கான வரி 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
6. பிளாஸ்டிக் பொருள்களுக்கான வரி 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
7. பந்து வீசுதல் (Bowling) ஸ்னூக்கர் (Snooker) பில்லியர்ட்ஸ் முதலிய விளையாட்டுகள் இடம் பெறும் கேளிக்கைக் கூடங்களுக்கு 20 சதவீத கேளிக்கை வரி விதிக்கப்படும்.
8. ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10 கோடிக்கு அதிகமாக ஆனால் ரூபாய் 25 கோடிக்குக் குறைவாக வரிவிதிக்கத்தக்க வியாபாரத் தொகைக் கொண்டுள்ள விற்பனை வரிக்குள்ளானோருக்கு 1 சதவீதம் கூடுதல் விற்பனை வரி விதிக்கப்படும்.

**வரவு-செலவு திட்ட மதிப்பீட்டு சுருக்கம்**

ஒட்டுமொத்தப் பற்றாக்குறை : ரூபாய் 827 கோடி

திரட்டப்படும் நிகரக் கூடுதல் நிதி ஆதாரம் : ரூபாய் 135.38 கோடி

• • •

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் 2001–2002 –ஆம் ஆண்டு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். இந்த ஆண்டு 9–வது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி ஆண்டாகவும், அதே நேரத்தில் 10–வது ஐந்தாண்டு திட்டத்தின் துரிதமான வளர்ச்சிக் கட்டத்திற்கு செல்வதற்கு முன்பாக கணக்கெடுக்கும் ஆய்வு காலமாகவும் விளங்குகிறது. தமிழ்நாட்டு மக்களுடைய, குறிப்பாக, வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வோர், மற்றும் சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினர் ஆகியோரது எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் நிறைவேற்றுகிற பொறுப்பை உணர்ந்துள்ள ஒரு புதிய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றிருப்பதும், இந்த ஆண்டின் சிறப்பு அம்சமாகும்.

9–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியானது மிகவும் நிலையற்றதாக இருந்துள்ளது என்பதை தமிழ்நாட்டின் பொருளாதாரம் குறித்த ஆய்வு காட்டுகின்றது. ஒவ்வொரு வருடமும் வளர்ச்சி விகிதம் 7 சதவிகிதமாக இருக்க வேண்டும் என்ற இலக்கின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, உண்மையான வளர்ச்சி விகிதங்கள் முதலாண்டில் 7.92 சதவிகிதமாகவும், இரண்டாவது ஆண்டில் 3.81 சதவிகிதமாகவும், மூன்றாவது ஆண்டில் 7.04 சதவிகிதமாகவும், நான்காவது ஆண்டில் 4.13 சதவிகிதமாகவும் இருந்துள்ளன. ஆக சராசரி வருடாந்திர வளர்ச்சி விகிதம் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விட மிகவும் குறைவாகவே அதாவது 5.74 சதவிகிதம் என்ற அளவிலேயே இருந்துள்ளது. வேளாண்மை மற்றும் உற்பத்தித் துறைகள் இரண்டிலும் மிகவும் மந்தமான முன்னேற்றமே ஏற்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக மாநிலத்தின் உள்நாட்டு மொத்த வருவாயில் வேளாண்மைத்துறையினுடைய பங்கு மிகவும் குறைவானதாகவே இருந்துள்ளது. 1994–95–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2000–2001–ஆம் ஆண்டின் மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் வேளாண்மைத் துறையினுடைய பங்கு உண்மையான மதிப்பில் மிகவும் குறைந்துள்ளது என்பது கவலையளிக்கக்கூடிய ஒரு விஷயமாகும். மாநில தொழில் துறையில் முக்கிய அங்கமாக விளங்குகின்ற ஜவுளித்துறை உற்பத்தி எதிர்மறையான வளர்ச்சி விகிதத்தைக் கொண்டிருந்தது, உற்பத்தித் துறையின் இத்தகைய மந்த நிலைக்கு முக்கிய காரணமாகும். குறிப்பாக தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் நல்ல வளர்ச்சி இருந்ததன் விளைவாக, சேவை சார்ந்த (Tertiary Sector) தொழில்களில் மட்டும் கணிசமான முன்னேற்றம் இருந்துள்ளது.

**8-8-2001 அன்று நடைபெற்ற மத்திய திட்டக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உரையை மாண்புமிகு நிதியமைச்சர் திரு.சி. பொன்னையன் கலந்துகொண்டு வாசித்தார். இக்கூட்டத்தில் தமிழகத்தின் 2001-2002ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.6,040 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது.**

# மத்திய திட்டக்குழுக் கூட்டத்தில் முதலமைச்சர் உரை

கடந்த 20 ஆண்டுகளில் கல்வி, மக்கள் நல்வாழ்வு, மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் ஆகிய துறைகளில் தமிழ்நாடு சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது. இருப்பினும், இதன் விளைவாக நமது மாநிலத்தின் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் மத்திய அரசு உதவி குறைந்துள்ளது. எடுத்துக்காட்டாக,1987–88 ஆம் ஆண்டு வறுமை விகிதாச்சார அடிப்படையில் கணக்கிடப்பட்டு வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக நமது மாநிலத்திற்கு கிடைத்து வந்த 7.06 சதவிகிதமாக இருந்த பங்கு, மத்திய திட்டக்குழுவின் வறுமை மதிப்பீட்டிற்கான வல்லுநர் குழு பரிந்துரையின் அடிப்படையில் 1998–99 ஆம் ஆண்டு முதல் 4.99 சதவிகிதமாக வீழ்ச்சி குறைந்துவிட்டது. தமிழ்நாட்டில் நிலவும் வறுமை சற்று குறைந்துள்ளது என்பது உண்மையாக இருந்த போதிலும், புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, வறுமைக் கோட்டை கடந்துள்ள நபர்கள் வறுமைக் கோட்டிற்கும் மேலே சற்றே உயர்ந்து உள்ளனர் என்பதும், அவர்களுக்கு

இன்றும் அரசின் சமூகநலத் திட்டங்களின் உதவி தேவையாக உள்ளது. அதே போன்று, அடுத்தடுத்து வந்த மத்திய நிதிக் குழுக்கள் நமது மாநிலத்திற்கு உரிய மத்திய வருவாயில் பங்கினை மிகவும் குறைத்துள்ளன. இதன் வாயிலாக தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.500 கோடி இழப்பு ஏற்படுகிறது. மேலும், நிதிசீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.80 கோடி ஊக்கத் தொகையும் நமது மாநிலத்திற்கு அளிக்கப்பட வேண்டும். ஏழை, எளியோர் மற்றும் நலிவுற்றோர்ஆகியோருடைய தேவைகளை நிறைவு செய்கின்ற வண்ணம், முற்போக்கு மற்றும் செயல்திறன் ஆகியவற்றை கொண்ட அரசாக விளங்குவதற்கு விதிக்கப்பட்ட தண்டனை போன்று தோன்றுகிறது. இத்தகைய முரண்பாடுகளைச் சரி செய்ய பரிந்துரைக்க வேண்டும் என்று மத்திய திட்டக் குழுவினை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

வளர்ச்சி வேகத்தை துரிதப்படுத்தி பத்தாவது திட்டக் காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 8 சதவிகித இலக்கினை ஒரேடியாக அடைவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது புதிய அரசின் குறிக்கோளாக இருக்கும்.

திட்டத்தின் குறியீடுகளை நிறைவேற்றுவதைப் பொருத்த வரை தமிழ்நாடு எப்பொழுதுமே நிதி மற்றும் செயல் இலக்குகளை முழுமையாக அடைந்து வருகிறது. 2001–2002 – ஆம் ஆண்டை பொருத்த வரை சமூக நலப் பணிப் பிரிவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, திட்ட ஒதுக்கீட்டில் 43 சதவிகிதம் அதற்காக ஒதுக்கப்படும். வேளாண்மைத்துறையை பொருத்த வரை நிலப்பயன்பாடு மற்றும் அறிவியல் ரீதியான நீர் மேலாண்மை போன்றவற்றின் வாயிலாக வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கும், உற்பத்தித் திறனை பெருக்குவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். தமிழ்நாட்டிலுள்ள மொத்த பயிர் செய்யப்படும் நிலப்பரப்பில் 52 சதவீதம் மட்டும் தான் நீர்பாசன வசதி பெற்றுள்ளது. மற்றவை மழையை நம்பியுள்ள நிலங்களாகும். பெருவாரியான மக்கள் வேளாண்மையை நம்பி இருப்பதால் இவ்வரசு மானாவாரி மற்றும் தரிசு நில மேம்பாட்டிற்கு என்று ஒரு மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது. அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்த திட்டத்தின் மூலம் 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலம் மேம்படுத்தப்பட உள்ளது. தோட்டப்பயிர்கள், மரங்கள், வருமானம் தரும் புல் மற்றும் தீவன பயிர் சாகுபடி ஆகியவற்றிற்கு இந்தத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்த புதிய திட்டமானது ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், தேசிய மானாவாரி நீர்வடி பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றுடன் இணைத்து செயல்படுத்தப்படும். இத்திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கு கூடுதல் ஒதுக்கீடு அளிக்கக் கோரி திட்டக்குழுவின் ஒத்துழைப்பை நாடுகிறோம்.

குடிநீர் விநியோகம் மற்றும் ஊரக சுகாதாரம் ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்த பிற பணிகளாகும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் (சுமார் 4,000) இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். ஊரக சுகாதாரத் திட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகளை நிறைவு செய்வதாக அமையும். தரமான ஆரம்ப மருத்துவ வசதி மற்றும் மருத்துவமனை சார்ந்த மருத்துவ வசதி ஆகியவற்றை உறுதி செய்வதற்கான முழுமையான சுகாதார கொள்கை ஒன்றை தயாரிப்பதில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். தமிழ்நாட்டில் நகர மயமாக்கப்படுதல் அதிகமாக உள்ளதால், நகர்ப்புற சுகாதார பணிக்கு தனி முக்கியத்துவம் அளிக்கப்படும். சமுதாயத்தில் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் போன்ற நலிந்த பிரிவினரின் நலனுக்காக, பள்ளிகளில் தங்கும் விடுதிகளை ஏற்படுத்தவும், மாணவ, மாணவியர் அதிலும் குறிப்பாகப் பெண்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதைத் தவிர்க்கவும் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். ஐந்து இலட்சம் மகளிருக்கு பல கட்டங்களில் போதிய பயிற்சி அளித்து, அவர்கள் சிறுதொழில் தொடங்குவதற்கு நீண்ட காலக் கடனையும் அளித்து, சுய வேலைவாய்ப்பு அளிப்பதற்கும், பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். பெண் குழந்தை பாதுகாப்புக்காக சிறப்புத் திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும். பிறப்பு விகிதத்தைக் குறைத்து நிலையான அளவை அடையும் அளவிற்கு தமிழ்நாடு போதிய முன்னேற்றம் கண்டுள்ள நிலையில், தாய் சேய் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இந்தப் பகுதியில் மேலும் சிறப்பாக செயல்படுத்த எண்ணியுள்ளோம்.

குடிநீர் வழங்கல், மகளிர் மேம்பாடு, சுகாதாரம் போன்ற முக்கியமான பிரிவுகளைப் பொருத்த வரையில், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்களைத் தயாரித்து வருகிறோம். எங்களுடைய இந்த முயற்சிக்குத் திட்டக் குழுவின் ஆதரவைக் கோருகிறோம்.

தமிழ்நாட்டின் பொருளாதார நிலைகுறித்த, திட்டக் குழுவின் கவலைகளை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம். அதன்படி சமன்பாடற்ற நிலையை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதோடு, இந்தியாவிலேயே அதிவேகமாக பொருளாதார வளர்ச்சி காணும் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தேவ. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906


COSCO

தமிழரசு
R.N.I.No. 21446/70
Licence No.G/TN/CPMG/190,WPP-130

